கோவலன் சரிதை

[படங்களோடு கூடியது]

சென்னை

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

கோவலன் சரிதை

[படங்களோடு கூடியது]

இது

சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியார் அவர்களால்

இயற்றப் பெற்றது

சென்னை

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

அணா 10] 1922. [காபி ரைட்

PRINTED BY
PENROSE AND CO., AT THE NOORJAHAN PRESS,
MADRAS.

அட்டவணை

1-வது: புகார் காண்டம்.

2-வது: மதுரைக் காண்டம்.

அட்டவணை.

3-வது: வஞ்சிக் காண்டம்.

முகவுரை

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கடைச்சங்கத்து நூல்களில் சேர்ந்தவை. இவை சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி, என்பவற்றோடு சேர்த்து ஐம்பெருங்காவியங்கள் (பஞ்சகாவியங்கள்) என்று வழங்கப்படுகின்றன. சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இவ்விரு நூற்களுந் தமிழ்நாட்டுச் சரிதையையே தம்மகத்துக்கொண்டு விளங்கும் காவியங்கள். தமிழில் இப்பொழுது வெளிவந்துள்ள மற்றை எல்லாக் காவியங்களும் வடநாட்டுச் சரிதைகளைத் தத்தம் அகத்துக்கொண்டு நிகழ்வனவே. இராமாயணமும் பாரதமும் வடமொழியில் இரண்டு கண்களென விளங்குதல்போல இவை தென்மொழியில் இரண்டு கண்களென விளங்குகின்றன. புழுவாயிருந்து பல் கால் தோலையுரித்து நாளுந் தன்னிலையை வளர்த்துக்கொண்டு எழில்மிகு சிறகுகளுடன் வெளிப்போந்து காண்பார்க்குக் களிமிகுகாட்சியைத்தரும் பட்டுப்பூச்சியை ஒப்ப மாந்தர் கல்விபயிலுநிலையிலிருந்து அறியாமையை நீக்கிக்கொண்டு நாளுந்தங்கள் அறிவைவளர்த்து, நன்கமைந்த அவ்வறிவின் பொலிவுடன் யாவருங்கண்டு மதிக்கும்படி வெளிப்போந்து விளங்கும்படி செய்தலே அறிஞர்களால் நன்கு மதித்தற்குரிய நூலின் இயல்பாகும். சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அத்தகைய இயல்பினையுடைய நூற்களில் முதல்வரிசையில் நிற்பனவாம். இவை தாம் கூறும் சரிதையின் வாயிலாக அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கின் இயல்பையும் இனிது விளக்குதலோடு அக்காலத்துத் தமிழ் மக்களின் ஒழுக்க வழக்கங்களையும் தமிழ்நாட்டின் வாணிகம் முதலிய வளங்களையும் தமிழர்களின் நாகரீகத்தையும் நன்கு தெரிவிக்கின்றன. ஆத

லின் இந்நூற்கள் கூறுஞ் சரிதைகளையும், இந்நூற்களின் இயல்புகளையும், நன்கறியவேண்டுவது தமிழ்மக்கள் அனைவர்க்கும் இன்றியமையாத கடமையாகும்.

யாவரும் எளிதிற் பெற்றுக் கற்றுணரும்படி, இந்நூற்களைப் பெருமுயற்சியோடு பல ஏடுகளைக்கொண்டு நன்கு சோதித்து வெளியிட்ட மகா மகோபாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்பால் தமிழ்நாடு முழுதும் நன்றி செலுத்தற்குரிய கடமையுடையதாகும்.

இந்நூற்கள், நன்கு கற்றோரானன்றி மற்றோரான் எளிதிற் பொருளுணர்தற் கரியனவாயிருத்தலின், இளமாணவர்களுக்கும் இளமாணவிகளுக்கும் பயன்படாதனவாயிருக்கின்றன. ஆதலின், இவற்றுள் சிலப்பதிகாரச் சரிதையைக் கோவலன் சரிதை எனப் பெயர்தந்து, இளமாணவர்களுக்கும் இளமாணவிகளுக்கும் பயன்படச்செய்தல் வேண்டுமென விழைந்து அவர்கள் எளிதின் உணரக்கூடிய உரை நடையில் எழுதிமுடித்தேன். என் சிற்றறிவு காரணமாக இதிற் காணப்படும் பிழைகளை அன்புடன் தெரிவிக்கும் அறிஞர்களுக்கு யான் எனது மனமுவந்த வந்தனத்தைச் செலுத்துங் கடமையையுடையேன்.

யான் விழைந்தபடி இந்நூலை இளமாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் பயன்படச்செய்து, என் முயற்சியைப் பயனுடையதாகச் செய்தல் வேண்டுமென அறிஞர்களை வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

கா. ர. கோ.

ஸ்ரீ

கோவலன் சரிதை

1-வது புகார்காண்டம்

1. கோவலன் மணம்.

காவேரி யென்னும் ஆற்றின் பாய்ச்சலால், மிகவுஞ் செழித்துள்ள சோழநாட்டில், காவிரிப்பூம்பட்டின மென்னும் நகரம் ஒன்றிருந்தது. அதனைப் பூம்புகார் என்றும், புகார் என்றுங் கூறுவர். அது காவிரியாறு கடலோடு கலக்கும் சங்கமுகமென்னுந் துறையைச் சார்ந்திருந்தது.

சற்றேறக்குறைய ஆயிரத்தெழுநூறுண்டுகளுக்கு முன் கரிகால்வளவனென்னும் மன்னர் மன்னன், இந்நகரத்தில், மற்றெல்லா மன்னருந் தன்னை வணங்க வீற்றிருந்து, அரசு புரிந்தனன். அவன், வடக்கில் இமயமலை வரையினுஞ் சென்று, வடநாட்டரசர்கள் யாவரையும் வென்று, தன் வெற்றிக்கறிகுறி யாக இமயமலையின் உச்சியில் தனது புலிக்கொடியை நாட்டி மீண்ட வீரன். அவ்வரசன், தன் நாட்டில் தொழிலும், வாணிப மும் பெருகும்படி செய்து, குடிகளை யன்போடு ஆதரித்து வந் தான். அந்நாட்டில் தொழிலுக் கேற்றபடி கூலிகொடாமல் தொழிலாலிகளின் மனம் வருந்தக் குறைத்துக் கொடுக்கும் முதலாளிகளும், முதலாளிகள் வெறுக்கும்படி சோம்பர்களா யிருந்து கூலிபெற விரும்பும் தொழிலாளிகளும் இடையார்.

ஆதலால் அங்குத் தொழில்களும், வாணிபங்களும் மிகவுஞ் செழித்தோங்கி விளங்கின.

அந்நாட்டில் வணிகர்களின் செல்வம், பலகோடிக்கணக் காகவே இருக்கும். அங்கு வறுமை என்பதை ஒருவருமறி யார். அந்நாட்டின் நகரம் கடற்கரையைச் சார்ந்திருந்ததனுல் பெரிய வியாபாரிகள் யாவரும் அந்நகரில் வசித்து வந்தனர். அந்நகரின் முதற் குடியாக வைத்துக் கருதப்படும் அரசனது மேன்மையாலும், வணிகர்களின் மேன்மையாலும் யாவரும் அந்நகரைப் படைப்புக் காலமுதல் அமைந்துவருஞ் சிறப்பினை யுடையது எனக் கூறுவாராயினர்.

அவ்விதச் சிறப்பினை உடைய அந்நகரின் வணிகர்களில் பெருங்குடியர் மரபிலே தோன்றியவனும், மிக்க ஈகையாளனு மாகிய **மாநாய்கன்** என்னும் பெயருடையான் ஒருவன் இருந் தனன். அவனுக்குப் பெண் ஒருத்தி இருந்தாள். அப்பெண் ணின் பெயர் **கண்ணகி** என்பது. அப்பெண், தன்னை மற்றைப் பெண்கள் யாவரும் அழகினுல் திருமகளேயும், கற்பினுல் அருந் ததியையும் ஒத்தவள் என்று சொல்லித் துதிக்கும்படி சிறந்து விளங்கினுள்.

அந்நகரில் அதே மரபிற் ருேன்றியவனும், பெருஞ் செல்வனுமாகிய **மாசாத்துவான்** என்னும் வணிகர் தலைவன் மற்ருெருவ னிருந்தான். அவனுக்கு ஒருமைந்தன் இருந்தான். அவன் பெயர் **கோவலன்** என்பது. அவன் புவிக்குள் அடங்கா மல் விரிந்த புகழினையுடையவன். பெண்கள் யாவரும், "நாம் இவ்வுலகத்தில் நேராகக்காணும் பொருட்டுத் தோன்றிய மன் மதனே இவன்," என்று கொண்டாடும்படியான அழகினை வாய்ந்தவன்.

கண்ணகிக்குப் பன்னீராண்டும், கோவலனுக்குப் பதி னாறாண்டும் நடக்கையில் அவர்களின் பெற்றோர்கள், அவர் களுக்கு மணம்புரிவிக்க விரும்பிச் சில மகளிரை அணிகளால் அழகு செய்து, யானைமீதேற்றி, அம்மணத்தினை அம்மாநகரத் தார்க்கு அறிவித்தார்கள். வயிரமணித்தூண் வரிசையாகப் பொருந்திய மண்டபத்திலே, நீலவிதானத்தின் கீழமைந்த முத்துப்பந்தலிற் சுற்றத்தவர்களும் நட்பினர்களும் வந்து கூடினார்கள். குறித்த காலத்திற் பல வாத்தியங்கள் முழங் கப் புரோகிதன் சடங்கு காட்டக் கோவலனுங் கண்ணகியுந் தீவலஞ்செய்தார்கள். சுற்றத்தவர்களாகிய மாதர்கள், சாந்து, மலர், முளைப்பாலிகை,விளக்கு முதலியவற்றையேந்தி வரிசை யாக நின்று, "மணமக்கள் இருவரும், ஒத்த அன்புடையவர் களாய் நீடுவாழ்க," என்று வழிபடுகடவுளை மனத்தால் வணங் கிப் பிறகுசில மலர்களைத் தூவி," எங்கள் மன்னனாகிய கரிகால் வளவன் இமயமலையில் இருத்திய புலிக்கொடி, என்றும் அதிற் பொலிவதாக; அவனது ஆட்சி, எப்பக்கமும் செல்வதாக;" என்று வாழ்த்தினார்கள்.

மணத்திற்குரிய சடங்குகள் யாவும் நன்கு நிறைவேறின. சுற்றத்தவர்களும் நட்பினர்களும், அவ்வழகிய மணத்தினைக் கண்டும், அறுசுவையினையுடைய உணவினையுண்டும் களி கூர்ந்து, விடைகொண்டு சென்றார்கள். கோவலனும் கண்ணகி யும் ஒத்த அன்பினர்களாயிருத்தலைக் கண்டு, அவர்களின் பெற்றோர்கள் களிப்பென்னுங்கடலில் மூழ்கினார்கள்.

---

2. கோவலனும் கண்ணகியும் இல்லறம் நடத்துதல்.

செல்வத்திற்சிறந்து, போகபூமியென விளங்கும் அம் மாநகரின்கண் பெருஞ்செல்வ வணிகன் மகளாய்த் தோன்றிய கண்ணகி, மனைத்தக்க மாண்புடையளாகித் தன் அன்பென்னும் நன்னீரால் தன் கொழுநனது மனமாகிய வயலில் மகிழ்ச்சியென்னும் பைங்கூழ் செழித்து வளரச்செய்தனள். கோவலனும் கண்ணகியின் அழகு, அன்பு முதலிய நலன்களைக்கண்டு, அவளை,

“ மாசறு பொன்னே ! வலம்புரி முத்தே !
காசறு விரையே ! கரும்பே ! தேனே !
அரும்பெறற் பாவாய் ! ஆருயிர் மருந்தே !
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே !
‘மலையிடைப் பிறவா மணியே !’ என்கோ ?
‘அலையிடைப் பிறவா அமிழ்தே !’ என்கோ ?
‘யாழிடைப் பிறவா இசையே !’ என்கோ ?
தாழிருங் கூந்தல் தையால் ! நின்னை.”

என்று புகழ்ந்தனன்.

அவ்விருவரும் இங்ஙனம் அன்புற்று வாழ்கையில், கோவலன்தாய், அவர்கள் இல்லறம் நடத்தும் வகையைக் காண விரும்பி, வேறொரு மாளிகையில் அவர்களுக்கு வேண்டிய பொருள்களை நிரப்பி, ஏவலாளர்களை யேற்படுத்தி, அவர்களை இருத்தினாள்.

அவர்கள் அம்மாளிகையில் இருந்து, அன்பும் அருளும் உடையவர்களாய்ச் சுற்றத்தினரைத் தழுவியும், விருந்தினரைப் பேணியும், அறவோர்களைப் போற்றியும், எளியோர்களுக்கு வேண்டுவன அளித்தும் இல்லறத்தை இனிது நடத்திவந்தார்கள்.

3. மாதவி அரங்கேறுதல்.

அப்போது, புகார்நகரிலே, மாதவி யென்பாள் ஒரு நாடகக் கணிகை இருந்தாள். அவள் தாயின் பெயர் சித்திராபதி என்பது. அவள், மாதவிக்கு ஐந்து வயது தொடங்கிப் பன்னிரண்டு வயது வரையினும், தக்கவர்களால் ஆடல் பாடல்களை நன்றாகக் கற்பித்தனள். மாதவி, அவற்றை நன்றாய்ப் பயின்று தேர்ந்து, மிக்க திறமுடையவளாய் விளங்கினள். அவளுக்கு அத்திறத்தினோடு இயற்கை அழகுஞ் சிறந்திருந்தது. அவள் தாயாகிய சித்திராபதி அவளை அரங்கேற்ற விரும்ப, ஆடல் ஆசிரியன், இசை ஆசிரியன், கவிஞன் முதலியவர்கள் கூடி, மன்னர் மன்னனாகிய கரிகால்வளவன் முன்னிலையில் அவளை அவ்வாறே அரங்கேற்றினார்கள். அப்போது அச்சபையில் அந்நகரத்துச்செல்வர்கள் பலரும் வந்து குழுமி இருந்தார்கள். மன்னன் நடுநாயகமணிபோல் வீற்றிருந்தான்.

மாதவி ஆடரங்கத்தை யடைந்ததும், ஆடல் பாடல்களிற் சிறந்தவர்களும், முதியவர்களுமான கணிகை மாதர்கள், ' அவளுக்குத் தீமைதீர்ந்து நன்மை பெருக வேண்டும் ' எனத் தெய்வப் பாடல்களைப் பாடினார்கள். பிறகு குழல், யாழ், மத்தளம், குடமுழா என்னும் வாத்தியங்கள் ஒன்றோடொன்று ஒத்திசைத்தன. இங்ஙனம் இவ்விசைக் கருவிகள் யாவும் ஒன்றோடொன்று பருந்தும் நிழலும்போல் ஒத்து நிற்க, மாதவி, அரங்கில் வலக்கால் வைத்தேறி, முன்னேதேசிகக் கூத்தும், வடுகக்கூத்தும் ஆடி முடித்துப் பின்னர்ப் பொன்னாற் சமைந்ததோர் பூங்கொடி நடித்தாற்போல முறைவழுவாமல் அபிநயித்துப்பாவகந்தோன்ற நாட்டியமாடினாள். அதைக்கண்டு மகிழ்ந்த காவலன், அவளுடைய ஆடலுக்கும் பாடலுக்கும், அழகினுக்குந் தக்கபடி அவளுக்குத் ' தலைக்கோல் ' என்னும்

பட்டமளித்துத் தனது பசும்பொன் மாலையையும், ஆயிரத் தெண்கழஞ்சுபொன்னையும் பரிசாகக் கொடுத்தான். பின்னர் அனைவரும் தங்கள் தங்கள் மனைக்குச் சென்றார்கள்.

பிறகு, மாதவியின் தாய்ச் சித்திராபதி, வசந்தமாலை யென்னும் ஒரு கூனி கையில் அம்மாலையைக் கொடுத்து, "இம்மாலை ஆயிரத்தெண்கழஞ்சு பொன் விலை பெறுவது. இதனை அவ்விலைக்கு வாங்கிச் சூடுகின்றவர் மாதவிக்கு மணவாளராவார்;" என்று கூறி, அம்மாலையை விலை பகரும்படி அவளை நகரப் பெருந்தெருவிலே நிறுத்தினாள். மாதவியின் அரங்கேற்றத்தைக் கண்டு மகிழ்வுற்ற கோவலன் அங்ஙனமே ஆயிரத்தெண்கழஞ்சு பொன் கொடுத்து அம்மாலையைவாங்கிக் கொண்டு, வசந்தமாலையென்னும் அக்கூனியுடன் மாதவியின் மனையை யடைந்தான். மாதவியும் அவனை மிக்க அன்புடன் வரவேற்றுபசரித்தாள்.

4. கண்ணகியின் துன்பம்.

கோவலன் அன்றுமுதல் மாதவியின் மனையிலேயே தங்கிவிட்டான். அதனால் கண்ணகி பற்றுக்கோடற்ற பூங்கொடி போலத் தளர்வடைந்தாள். அதனால் அவளுடைய சீறடிகளிற் பொருந்துஞ் சிறப்பைச் சிலம்புகள்பெறாவாயின. அவளுடைய கயல்போல் பிறழுங் கண்களில் தீட்டப்படும் சிறப்பை அஞ்சனம் பெறாதாயிற்று. அவளுடைய நுதலில் விளங்கும் சிறப்பைத் திலகம் பெறாதாயிற்று. அவளுடைய கூந்தலைச் சார்ந்து தாம் பெற்று வந்த மணத்தைப் புழுகும் நெய்யும் பெறாவாயின. கோவலனும் அவளுடைய தவள வாள் நகை பெறுதலை இழந்தான். மாதவியின் மனமலரிற் களிப்பென்னுந்

தேன் நிரம்பியது; அவள் சில காலஞ் சென்று ஓரழகிய பெண் மகவை யீன்றாள். அக்குழவி பிறந்த பதினோரா நாள் கோவலன் சொற்படி அக்குழவியின் தாய்மார்களும், பாட்டிமார் களும் அதற்கு 'மணிமேகலை' என்று பெயரிட்டார்கள். கோவலன் அக்குழந்தையின் நலத்தினை விரும்பிப் பலதானங் களைச் செய்தான். இங்ஙனம் கோவலன் மாதவியோடு வாழ்ந்து வந்தனன்.

5. இந்திரனுக்குத் திருவிழா நடத்தல்.

அக்காலத்தில் ஆண்டுதோறும் இந்திரனுக்குத் திருவிழா நடத்துதல் வழக்கம். அது சித்திரை மாதத்திலே, பௌர் ணமி திதியிலே தொடங்கி நடத்தப்படும். அங்ஙனமே ஓராண் டில் அந்நாள்வரக் கொடியேற்றஞ் செய்தற்கு புகார்நகரமாந் தர் அனைவரும் ஊக்கங் கொண்டனர். அந்நகர், மருவூர்ப்பாக் கம், பட்டினப்பாக்கம் என்னும் இரண்டு பிரிவுகளை யுடையது. அவற்றுள் மருவூர்ப்பாக்கம் என்பது புறநகர்; பட்டினப்பாக் கம் என்பது அகநகர்.

புறநகர்.

புறநகராகிய மருவூர்ப்பாக்கத்தில் நிலாமுற்றங்களையும், அணிகளிட்ட சரக்கறைகளையும், மான்கண்கள்போன்ற சாள ரங்களையும் உடைய மாளிகைகள் மிகுந்திருக்கும். பார்ப்பவர்க ளின் கண்களைப் பறிக்கும்படி யமைந்த யவனர்களுடைய இருப்பிடங்கள் வரிசைவரிசையாகக் காணப்படும். நகரவீதி களில் வண்ணமும், சுண்ணமும், சாந்தும், புகைப்பொருளும், வாசனைப்பொருளும் விற்பவர் திரிவர். அப்புறநகரின் ஒருபால்

பட்டு நூலாலும், எலிமயிராலும், பருத்தி நூலாலும் நுட்பமான வேலைகளைச் செய்யும் பட்டுச்சாலியர் இருப்பிடங்கள் இருக்கும். ஓரிடத்தில் சந்தனம், அகில், பட்டு, பவழம் முத்து, மற்றும் பல ரத்தினங்கள், பல்வகைப் பணிகள் ஆகிய இவற்றை விற்பவர்களும், அளவிடற்கரிய செல்வமிகுதியினை யுடையவர்களுமாகிய வணிகர்களின் வீதிகள் விளங்கும். ஒருசார் நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, மூங்கில் நெல் என்னும் எண்வகைக் கூலங்களை விற்கும் கூலவாணிகர் வீதிகள் குலவும். ஒருபுடைப் பிட்டுவாணிகரும், அப்பவாணிகரும், ஆட்டையும் ஆட்டிறைச்சியினையும் விற்பவரும், உப்பு விற்பவரும், எண்ணெய் விற்பவரும், வெற்றிலை விற்பவரும் இருப்பர். ஒருபால் கன்னாரும், செம்புகொட்டிகளும், தச்சரும், கொல்லரும், சித்திரகாரிகளும், சிற்பாசாரிகளும், உருக்குத் தட்டாரும், இரத்தினப்பணித் தட்டாரும் வசிப்பர். ஒருபக்கம் தையற்காரரும், தோலின்துன்னரும், துணியாலும் தக்கையாலும் பூ, பூமாலை, பொய்க்கொண்டை முதலியன செய்வாரும் உறைவர். ஓரிடம் தொளைக்கருவிகளையும், நரப்புக்கருவிகளையும் கேட்போர் களிப்பென்னுங்கடலில் ஆழும்படி மிகவும் இனிமையாக இசைமரபிற் சிறிதும் பிழையாது இசைத்துக்காட்டவல்ல குழலர், பாணர் முதலிய இசைகாரர் இனிது வாழ்வர். கடற்கரையில் கடலோடிகளான பரதேசிகள் ஒருநிலத்தாரைப்போல அந்நகரத்தாரோடு அளவளாவிக் குடிகொண்டிருப்பார்கள்.

அகநகர்.

அகநகராகிய பட்டினப்பாக்கத்தில் ஒரு புறம் அரசர் பெரு வீதியும், விழாவீதியும், கடைத் தெருவும், பெருங்குடி-

வாணிகர் மாடமாளிகைகள் வரிசையாக அமைந்த வீதியும், பஞ்ச கிராமிகள் இருப்பிடங்களும், வேளாளர்களிருக்கும் வியன்பெருந் தெருக்களும் பொலிந்து விளங்கும். ஒரு பக்கம் மருத்துவநூல் வல்லாரும், சோதிடரும் வசிப்பர். ஒரு சார் முத்துக் கோப்பவரும், சங்கறுப்பவரும் வாழுந் தெருக்கள் பொலியும். சூதரும், மாகதரும், வைதாளி பாடுவாரும், நாழிகைக் கணக்கரும், பல்வகைக் கூத்தாடும் ஆடவரும், மகளிரும், பல்வகை வாச்சியங்களை இசைப்பவர்களும், வேழம்பரும் தத்தம் இனத்தினரோடு உறையும் இடங்கள் காணப்படும். அரசன் கோயிலைச் சூழ அகன்று பரந்த இடங்களில் குதிரைப்படை வீரர்களும், தேர்ப்படை வீரர்களும், காலாட்படை வீரர்களும் வசிப்பார்கள்.

நாளங்காடி.

இருபெரு வேந்தர்கள் பெருஞ்சேனைத் திரளோடு வந்து தங்கிய பாசறை இருப்புகளுக்கு இடையில் அமைந்த நிலம் போல ஒரு பொது நிலமுண்டு. அது நாளங்காடி யென்னும் பெயரது. அதிற் சோலைகள் பல இருக்கும். அச்சோலைகளில் வரிசை வரிசையாகவுள்ள மரங்களையே தூண்களாகக் கொண்டு கட்டிய கடைகள் பல அமைந்திருந்தன. அங்குப் பண்டங்களைக் கொள்வார் ஓசையும், விற்பவர் ஓசையும் இடையறாதிருக்கும். அந்நாளங்காடியில் முசுகுந்தன் என்னும் மன்னனுக்கு வரும் இடையூற்றைப்போக்கும் பொருட்டுத் தேவர் கோன் ஏவலாலே வந்து தங்கி அன்று முதல் பலிகொண்டிருக்கும் பூதம் ஒன்றுண்டு. மறக்குடிமகளிர் அந்தப் பூதத்திற்குப் பலிபீடத்திலே புழுக்கலும், எள்ளுருண்டையும், நிணச்சோறும், கள்ளும் படைத்துப் பூவிட்டுப் புகை காட்டி "எம்

முடைய மன்னனது பெரிய நிலமுழுதும் பசியும், பிணியும், பகையும் நீங்குக; மழையும், செல்வமும் சுரக்க;" என்று வாழ்த்திக் குரவைக் கூத்து முதலிய கூத்துகளை ஆடிச் சென்றார்கள்.

மருவூர்ப்பாக்கத்து வீரர்களும், பட்டினப் பாக்கத்து வீரர்களும் அந்தப் பூதத்திற்குப் பலவகையாகிய பலிகளை இட்டுவாழ்த்தினார்கள்.

ஐந்து மன்றங்கள்.

அந்நகரில் யாவருங் கொண்டாடும் பெருமை வாய்ந்த ஐந்து மன்றங்கள் உள. அவற்றுள் முதலது பட்டிமண்டபம் என்பது. அது புகாரில் மன்னர் மன்னனாய் விளங்கும் கரிகால்வளவனுக்குப் போரில்தோற்ற மகத நாட்டு வேந்தனால் கொடுக்கப்பட்டது. அது மயனென்னுந் தெய்வத்தச்சனால் நிருமிக்கப்பட்டது. அதில் நல்லிசைப்புலவர்கள் எக்காலுங் குழுமி இருப்பார்கள்.

இரண்டாவது மன்றம் வெளியான ஓரிடத்திலிருக்கின்றது. அதிற் புதியவர்களாகிய புறநாட்டார்கள் அளவும், எண்ணும், நிறையுமாகிய இலக்கங் குறித்த மூட்டைகளைத் தம்பெயர் பொறித்து வைத்துவிட்டுச் செல்வார்கள். அம்மன்றின் இயல்பினை அறியாத புதியவர்கள் யாரேனும் அவற்றைத் திருடுவார்களாயின் அஃது அவர்கள் கழுத்துக் கடுக்கும்படி அப்பொதிகளைத் தலையிலே யேற்றி அவர்களை ஊரைச் சூழ்வித்து, அவர்கள் நடுங்கும்படி செய்யும். அதனால் அங்கு ஒருவரும் களவுத் தொழிலைக் கனவிலுங் கருதார்.

மூன்றாவது மன்றில் ஒரு பொய்கை யிருக்கின்றது. கூனர்களும், ஊமர்களும், செவிடர்களும், தொழுநோயாளர்

களும் அதிற்சென்று மூழ்கிப் பழுதில்லா நல்ல தோற்றத்தை யுடையவர்களாய் அதனை வலம் வந்து தொழுது செல்வார்கள்.

நான்காவது மன்றம் வஞ்சகரால் மருந்தூட்டப் பெற்றுப் பித்தேறினவர்களும், நஞ்சையுண்டு நடுங்குதுயருற்றவர்களும், அராத்தீண்டப் பட்டவர்களும், பேய்கோட்பட்டவர்களும் தன்னை ஒரு முறை வலஞ்செய்து தொழுதவுடன் அத்துயர் நீங்குதற்குக் காரணமான ஒளியைக்காலுவதாகிய கற்றூண் ஒன்று தன்பால் நிற்கப் பெற்றது.

ஐந்தாவது மன்றம் பாவைமன்றம் என்னும் பெயரது. அரசர் செங்கோன் முறையிற் கோடினும், அறங்கூறவையத்தோர் நடுவுநிலையிற் பிறழினும் நாவாற் கூறுமல் கண்ணீருகுத்துக் கண்ணுற் கூறும் பாவை அதில் நிற்றலின் அஃது அப்பெயர்த்தாயிற்று.

பூத சதுக்கம்.

இவ்வகை மன்றங்களே யன்றிப் பூத சதுக்கம் என்னும் பெயரினதாகிய நாற் சந்தி ஒன்றுண்டு. "தவவேடம் பூண்டு தீமை புரிவோர்களையும், கற்பிற் பிறழும் பெண்டிர்களையும், தம் அரசரை யழிக்கக் கருதும் அமைச்சர்களையும், பொய்க்கரி புகல்வோர்களையும், புறங்கூறுகின்றவர்களையும் என் கைப் பாசத்தாற் பிணித்து, நிலத்திற் புடைத்துண்பேன்;" என்று அந்நகரின் நாற்காத எல்லையும் கேட்கும்படி தனது கடிய குரலாலுணர்த்தி, அங்ஙனஞ் செய்வாரை அவ்வாறே புடைத்துண்ணும் பூதம் நிற்றலால் அஃது அப்பெயர் பெற்றது. பட்டிமண்டபம் முதலிய அவ்வவ்வகை மன்றங்களிலும் பூத சதுக்கத்திலும் பலரும் பலியிட்டு மன்னனை வாழ்த்தினர்கள்.

பிறகு அவ்வீரர்கள் வச்சிரக் கோட்டத்திலிருக்கும் முரசை யெடுத்து யானையின் பிடரியில் ஏற்றி, அயிராவதக் கோட்டத்திற்கு வந்து, விழவின் முதலும் முடிவுஞ் சாற்றிக் கற்பகத்தருக் கோட்டத்திற் சென்று அயிராவதக் கொடியை வானுற ஏற்றி, மாளிகைகள் தோறும் கிம்புரி பதித்த கொம்பு களின் அங்காந்த வாயினின்று தொங்கும் முத்துவடங்க ளும், மகரதோரணங்களும், நிறைகுடங்கள் பாலிகைகள் தீபங்கள் கவரிகள் முதலியவைகளும், பொருந்திய வீதியில் வந்து நிறைந்து நின்றார்கள். பிறகு ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும், அரச குமரரும், பரதகுமரரும் ஒருங்கு திரண்டு, சங்கமுகத்துறைக்குச் சென்று, அதுகாறும் ஆயிரத் தெட்டுச் சோழர்களுக்கு மங்கல நீராட்டிய காவிரியாற்றின் நீரை, 'எம்மரசன் கொற்றங் கொள்வானாக,' எனப் பொற் குடத்திற் கொண்டுவந்து, இந்திரக் கோட்டத்திலுள்ள வச் சிரப்படைக்கு மஞ்சனமாட்டினார்கள்.

இங்ஙனம் இந்திரவிழாவைத் தொடங்கினது முதல் அரு கன் கோட்டம், முருகன் கோட்டம், பலதேவன் கோட்டம், திருமால் கோட்டம், வாசவன் கோட்டம் முதலிய எல்லாக் கோட்டங்களிலும் வேதத்திற் சொல்லியபடி ஓமங்கள் நடந் தன. அருகர் பள்ளி, புத்தர்பள்ளி, ஸ்ரீகோயில் முதலிய இடங்களில் துறவோர்களிருந்து புராணங்கள் சாற்றினார்கள். அரசன் பகை மன்னர்களின் கால்தளைகளை நீக்கி அவர்களை விடுவித்தனன். மதங்கர்களும், தோற்கருவி வாசிப்பவர்களும், யாழ்வாசிப்பவர்களும் இசைக்கும் இசைகள் எங்கும் ஒலித் தன. இங்ஙனம் இரவும் பகலும் முழவின் கண்மூடுதலில் லாதபடி இந்திரவிழாவின் சிறப்பு அந்நகரெங்கும் விளங்கியது.

கண்ணகியின் கண்கள் வருத்தத்தினாலும், மாதவியின் கண்கள் களிப்பினாலும் நீரை உகுத்தன.

6. மாதவியும் கோவலனும் கடலாடுதல்.

இமயமலையில் உள்ள வித்தியாதர ருலகிலே ஒரு பூம்பொழிலில் ஒரு வித்தியாதரன் தன் அன்புடைய நாயகியுடன் களிப்புற்று வீற்றிருந்தான். அவன் தன் நாயகியை நோக்கி, "கயல் நெடுங்கண்ணாய்! இன்று தென் தேயத்திலுள்ள நகரங்களிற் சிறந்ததும், கங்கையிற் புனிதமாய காவிரியாறு பாயப் பெற்றதுமாகிய புகார் நகரில் இந்திர விழாவின் பொருட்டுக் கொடியேற்றப்பட்டது. விண்ணோரும் மண்ணவர்களின் உருவங் கொண்டு அவ்விழாவினைக் காணச் செல்வார்கள். அந்நகரின் காட்சி அனைவருங் கண்டு களித்தற் குரியதாகும். முன்னொரு காலத்திலே அசுரர்களால் இந்திரன் இடுக்கணுற்றனன். அரிமாவன்ன ஆண்மையனாகிய முசுகுந்தன் என்னும் மன்னர் மன்னன் சென்று, அசுரர்களை வென்று, இந்திரனுக்குற்ற துன்பந்துடைத்தான். அதனால் இந்திரன் அம்மன்னர் பெருந்தகைக்கு உதவி செய்ய ஒரு பூதத்தை யனுப்பினன். அது வந்து காவலிருந்து பலியுண்டுறையும் நாளங்காடி என்பதொன்றுண்டு. அது யாவரும் சென்று பார்த்தற்குரியது. அன்றியும் அந்நகரில் ஐந்துமன்றங்கள் இருக்கின்றன. அவை சொல்லுதற்கரிய மேன்மையை யுடையவை. இங்ஙனமாகிய பல அரிய காட்சிகள் அந்நகரில் உள.

"முன்னொரு காலத்தில் நாரதன் சாபத்தால் உருப்பசி அந்நகரிலே தோன்றி, மாதவி யென்னும் பெயர் பெற்று, ஆடல் பாடல்களிலே சிறந்து விளங்கினள். தெய்வமாதாகிய அம்மாதவியின் வழியிற்றோன்றிய மாதவி என்பவள் இவ்விழாவில்

ஆடல்பாடல்களை நடத்துவாள். அவள் அவற்றில் இணையற்ற வள். அங்கு அவற்றையுங் கண்டு கேட்டுக் களிக்கலாம் வருக;" என்று கூறி, அவளை யழைத்துக் கொண்டு இமயமலையினையும், கங்கையாற்றினையும், அவந்தி நகரையும், விந்தமலையைச் சூழ்ந்த காடுகளையும், திருவேங்கட மலையையும், நிலம் பொருந்த விளைவுகளையுடைய சோழநாட்டினையும், இஃது இஃது இன்னது இன்னது என்று அவளுக்குக் காட்டிக் கொண்டுவந்து, அவ்விழாவினை அவளுடன் பார்க்கலானான். மற்றை விண்ணவர்களும் மண்ணவர்களைப் போல உருமாறி அத்திருவிழாவைக் காணவந்தார்கள்.

அவ்விழாவில் மாதவி பலவகையாகிய பாடல்களைப்பாடிப் பின்பு, (1) கொடி கொட்டி, (2) பாண்டரங்கம், (3) அல்லியம், (4) மல்லாடல், (5) துடி, (6) குடை, (7) குடம், (8) பேடியாடல், (9) மரக்காலாடல், (10) பாவை, (11) கடையம் என்னும் பதினொருவகை ஆடல்களையும் ஆடினாள். யாவரும் அப்பாடல்களைக் கேட்டும் அவ்வாடல்களைக் கண்டும் களிப்பென்னுங் கடலில் மூழ்கினர். இங்ஙனம் மிகவுஞ் சிறப்புடன் அத்திருவிழா இருபத்தெட்டுநாட்கள் நடந்தது. அத்திருவிழா முடிந்தமறுநாள் வைகறையில் நகரமாந்தர்கள் கடலாடுதற்குக் கடற்கரையைநோக்கிக்கூட்டம் கூட்டமாகச்சென்று கொண்டிருந்தார்கள். மாதவி, தானும் அக்கடல் விளையாட்டைக்காண விரும்பி அதனைக் கோவலனுக்குத் தெரிவித்தனள். அவனும் அதற்குடன்பட்டான். உடனேகோவலன் ஒரு கோவேறு கழுதையின் மேலேறினான். மாதவி கொல்லாப்பண்டியிலேறினாள். அவ்விருவரும் தங்கள் பரிவாரத்தினருடன் புறப்பட்டு, அகநகராகிய பட்டினப்பாக்கத்தைவிட்டு நீங்கிப் புறநகராகிய

மருவூர்ப்பாக்கத்தின் வழியாகச் சென்று கடற்கரையை யடைந்தார்கள். அங்குப் பரதேசிகள் கடற்கரைஓரத்தில் வெண்மணல் பரவிய இடங்களில் தங்கள் தேயத்துச் சரக்குக்களைக் குவித்து, இன்னசரக்கு இங்குளதென்று காட்டும்படி கொடிகளையமைத்திருந்தார்கள். வண்ணமும், சாந்தும், மலரும், சுண்ணமும், பண்ணிகாரங்களும் விற்பவர்கள் இட்டவிளக்குகளும், தட்டார்கள் தாங்கள் நகைகளைச்செய்யும் இடங்களில் வைத்த விளக்குகளும், பிட்டுவாணிகர் ஏற்றிய விளக்குகளும், அப்பவாணிகர்குடத்தண்டில் வைத்த விளக்குகளும், பல பண்டங்களையும் விற்கும் மிலேச்சமகளிர் அமைத்த விளக்குகளும், மீன்விற்போர் ஏற்றிய விளக்குகளும் கலங்கரை விளக்கும், பரதவர் திமிலில் இட்ட விளக்குகளும் சேர்ந்து, மணலின்மீது விழுந்த ஒரு சிறு கடுகும் தெரியும்படி மிகுந்த ஒளியை உண்டாக்கின. அவ்விதமுண்டான ஒளியின் மிகுதியினால் அக்கடற்கரை, நகரைப்போல் விளங்கியது.

கடலாடுதற்கு வந்த அரசகுமாரர்களும், வணிககுமாரர்களும், அவர்களின் பரிவாரமாந்தர்களும், மற்றும்பலரும் அங்கு நிரம்பி யிருந்தார்கள். காவிரி கடலோடு கலக்கும் துறைமுகமாகிய அந்த இடமெங்கும் அம்மாந்தர்களின் ஒலி நிரம்பி இருந்தது. அங்கு அவரவர்கள் மறைவின்பொருட்டு இட்டுக்கொள்ளும் அழகிய திரைச்சீலைகளும், புனலாடுமிடங்களும் மிகவும் பொலிவாய் விளங்கித்தோன்றின. இவற்றையெல்லாங்கண்டு களித்த கோவலனும், மாதவியும் தமக்காகத் தாழையே வேலியாகச் சூழ்ந்த ஓரிடத்தின் நடுவிலிருந்த புன்னைமர நிழலில் சித்திரத்திரையை வளைத்துக்கட்டி அதன் கீழிடப்பட்ட தந்தக் கட்டிலில் வீற்றிருந்தார்கள்.



7. கோவலன் மாதவியைப் பிரிதல்.

அப்போது மாதவி தன் தோழியாகிய வசந்தமாலையின் கையிலிருந்த யாழை வாங்கிச் சுரங்களை யெழுப்பி, இசைக் கூறுபாடுகளைச் செவியாலுணர்ந்து, யாழைத் திருத்திக் கோவலன் கையிற் கொடுத்தாள். கோவலனும் மாதவி மகிழும்படி சில பாட்டுகளைப் பாடினன்.

அப்பாட்டுகளில் கோவலன், மாதவியையன்றி மற்றொரு மாதினிடம் அன்பு கொண்டிருப்பதுபோல் ஒரு குறிப்புப் பொருள் அமைந்திருந்தது. ஆதலின் அப்பாட்டுகளைக் கேட்ட வுடன் மாதவியின் மனத்திற் சினம் மூண்டது; ஆயினும் அதனை யவள் வெளியிடாமல் மறைத்து, அப்பாட்டுகளைக் கேட்டதனால் களித்தவள்போல நடித்துக் கோவலன் கையி லிருந்த யாழைத் தான் வாங்கிக்கொண்டு, தான்கோவலனிடத் தன்றிப் பிறிதோர் இடத்திற் செல்லாத கருத்துடையவளா யிருந்தும் பிறிதோரிடத்திற்சென்ற கருத்துடையவள்போலக் குறிப்புப் பொருள் தோன்றும்படி சில பாட்டுகளைப் பாடினாள்.

அப்பாட்டுகளைக்கேட்ட கோவலன், “இவள் என்னை விட்டுப் பிறிதோரிடத்திற் கருத்தைச் செலுத்தியிருக்கின்றாள் ;” என முன்னை யூழ்வினையால் மயங்கி எண்ணி, அவளை வெறுத்துவிட்டுத் தன் ஏவலாளர் புடைசூழ்ந்துவரத் தன் மனையை நோக்கிப் புறப்பட்டுச் சென்றான். மாதவி, அதனாற் செய்வதொன்றுந் தோன்றாமல் திகைத்துத் தன்தலைவன்றன் பிரிவாலுண்டான துன்பத்தையே துணையாகக் கொண்டு,

வண்டியிலேறித் தன் தோழியர் புடைசூழ்ந்துவரச் சென்று இல்லத்தை யடைந்தாள்.

---

8. கோவலன் பிரிவையாற்றுது மாதவி வருந்துதல்.

அக்காலம் இளவேனிற் காலமாதலால் மாதவிக்குத்தன் அன்பன் பிரிவு மனத்தைப் பிளப்பது போன்ற துன்பத்தை விளைத்தது. அவளுக்கு அப்பொழுது இல்லம் என்னுஞ் சொல், மனையென்னும் பொருளைவிட்டு, அழகினையில்லாதது என்னும் பொருளைத்தந்தது. அதனால் மாதவி தன்மாளிகையின் மேல் நிலையில் நிலாமணி முற்றத்தை யடைந்து, யாழைக் கை யிற்கொண்டு, கண்டத்தாற் பாடத்தொடங்கினாள். அது மயங்கி யது. பிறகு யாழை வாசிக்கத் தொடங்கினாள். அதுவும் மயங்கியது. பின் ஒருவாறு தேறிப் பலவகை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையின் இடையில் அமைத்த தாழையின் இதழ் ஒன்றில் சிறு சண்பகத்தின் அரும்பை எழுத்தாணி யாகக்கொண்டு, அதனைச் செம்பஞ்சுக்குழம்பில் தோய்த்துத் தன் பிரிவாற்றாநிலையை எழுதி, மாலைப்பொழுதில் அம்மாலை யினை வசந்தமாலையின் கையிற் கொடுத்து, "இதனை என் அன் பரிடங்கொடுத்து, அவருக்கு என் வருத்தங்களையெல்லாங் கூறி, அவரை இப்பொழுதே அழைத்துவருக;" என்றனுப்பி னாள்.

வசந்தமாலை, அம்மாலையாகிய திருமுகத்தைப் பெற்றுக் கொண்டு சென்று, கூலவாணிகர் வீதியிற் கோவலனைக்கண்டு அதனை அவன் கையிற்கொடுக்க அணுகினாள். கோவலன் "மென்மொழியாய்! மாதவி நாடகக்கணிகையாதலின் பொய்யை

யெல்லாம் மெய்போலக்காட்டி நடித்தனள். அவள் மெய்யன் புடையவள்போல் பிணங்கினுள்; இணங்கினுள்; கொஞ்சினுள்; குலவினுள். யானும் அவற்றையெல்லாம் மெய்யெனக்கொண்டு மயங்கினேன். என்னை முதலில் அவள்பால் அன்பு கொள்ளும்படி மயக்கியதும் அவளது நடிப்பேயன்ருே? அம்மயக்கம் இன்றே ஒழிந்தது;" என்றுரைத்து, அத்திருமுகத்தைப்பெருமல் மறுத்துவிட்டான். வசந்தமாலை வருந்திய உள்ளத்தோடு விரைந்துசென்று, அச்செய்தியை மாதவிக்குக்கூறிக் கோவலனுடைய அன்பின்மையைச் சொல்லி வருந்தினள். மாதவி, வசந்தமாலையை நோக்கி, "தோழி! அவர் அன்புமிக்கவராதலால் இம்மாலைப் பொழுதினுள் வருவார். இம்மாலை வாராராயினும் காலையில் நிச்சயமாக வருவார்;" என்று சொல்லிப் பெருகிய துன்பத்தோடு தானிருந்த படுக்கையில் வாடியகொடியெனச் சோர்ந்து கிடந்தாள்.

---

9. கண்ணகியின் கனு, கோவலன் வருகை.

பல ஆண்டுகளுக்குமுன் புகார்நகரில் மாலதி யென்னும் பெயரையுடைய ஒரு பார்ப்பனி இருந்தாள். அவள் ஒரு நாள் தன் மாற்ருள் குழந்தைக்குப் பாலைச்சங்கில் ஊட்டினுள். அக்குழவி அவள் கையிலே விக்கி மரித்தது. அதைக்கண்ட அம்மாலதி, தன் கணவனும், மாற்ருளும் தன்மீது அடாப் பழி சுமத்தித் தன்னை நிந்திப்பார்களே என்றஞ்சி, அக்குழந்தையை எடுத்துக்கொண்டு சூரியன்கோயில், சந்திரன்கோயில், வச்சிரக்கோட்டம், தேவர்தருக்கோட்டம், வெள்ளையானைக் கோட்டம், குமரகோட்டம், சிவன்கோயில், பல தேவர்

கோயில், சாதவாகனன் கோயில், அருகன் கோயில் என்னும் கோயில்கள் எங்கும் புகுந்து, "தேவர்காள்! எம்முறுநோய் தீர்மின்;" என்று வேண்டினாள். அத்தேவர்களில் ஒருவரும் அவளது துன்பத்தைத் தீராமையின் அவள், பாசண்டச்சாத் தன் கோயிலை யடைந்து வரங்கிடந்தாள்.

சுடுகாட்டில் இடுகின்ற பிணத்தைத்தின்னும் இடாகினிப் பேய், அப்போது ஓர் இளங்குமரியின் வடிவங்கொண்டு அங்கு வந்து, மாலதியை நோக்கிக் "கேளாய் மாலதி! முற்பிறப்பிற் செய்த நற்றவம் இல்லாதவர்களுக்குத் தேவர்கள்வரங்கொடார் கள். மரித்த குழந்தையைப் பார்ப்போம்; என்கையிற்கொடு;" என்றுசொல்லி, அவள்கையிலிருந்த குழந்தையை வாங்கி விழுங்கிவிட்டது. மாலதி அதைக்கண்டு, இடியோசைகேட்ட மயில்போல் ஏங்கி யழுதாள். அப்போது அச்சாத்தன், "அன்னாய்! ஏங்கி அழேல். நீ செல்கின்ற வழியிலுள்ள சோலையில் அக்குழவி உயிரோடிருக்கின்றது; சென்று காண்," என்று சொல்லித் தான் அங்குச்சென்று, அக்குழந்தையாய்க் கிடந் தான். மாலதியும் அங்குச்சென்று, அம்மாயக்குழவியைத்தன் குழவி என்றே எண்ணி, அதனையெடுத்து வயிற்றிலே அணைத் துக்கொண்டு போய்த் தன் மாற்றாளின் கையிற் கொடுத்தாள்.

அங்ஙனம் குழந்தையாகிய சாத்தன், இருமரபுந்தூயனாகிய மறையோனுடைய மைந்தனாய் வளர்ந்து, கற்பன கற்று, அறி வொழுக்கங்களிற் சிறந்து விளங்கினான். பிறகு, தாய்தந்தையர் இறக்க அவர்களுக்கு நீர்க்கடன் முதலியன செய்துமுடித்துத் தாயத்தாரோடு வெல்வழக்குணாத்து எட்டாண்டு வரையினும் தேவந்தி என்னும் மனையாளுடன் கூடி இல்லறம் நடத்தினான்.

அங்ஙனம் நடத்துங்கால், அவன் ஒருநாள் தன் மனையாளிடஞ் சென்று, அவளுக்குத் தன் உண்மையைச் சொன்னான். பிறகு அவளுடைய உள்ளக்குறிப்பை அறிந்து, தன் கோட்டத்திற்கு வரும்படி அவளுக்குக் கூறிவிட்டுப் பிறருக்குத் தீர்த்தத்துறையெங்குஞ்சென்று தீர்த்தமாடப்போவதாகக் கூறி, வீட்டை விட்டுப்போய் விட்டான். தேவந்தியும் தீர்த்தமாடச் சென்ற தன் கணவன் மனத்தைத் திருப்பித் தரவேண்டுமெனச் சாத்தனைப் பூசிப்பதாக ஒரு போக்குக்காட்டி, நாடோறும் சாத்தன் கோயிலையடைந்து, வலம்வந்து, பூவும் நீரும் இட்டுச்சாத்தனைப் பூசித்து வந்தாள்.

அவள் இளமையில் கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கன் மனையில் வளர்ந்தவளாதலின் கண்ணகிக்கு அன்புள்ள தோழியாயினள். அப்பார்ப்பனியாகிய தோழி, கண்ணகிக்குக் கணவன் பிரிவினால் உண்டான துன்பத்தைக் கண்டாற்றாதவளாய், ஒரு நாள் சாத்தன்கோட்டத்தை யடைந்து, அறுகும் பூவும், நெல்லுந் தூவிச் சாத்தனைப் பூசித்து, "என்னருமைத் தோழியாகிய கண்ணகி கணவனைப் பெறவேண்டும்;" என்று வேண்டினள். பின்னர்க் கண்ணகியினிடஞ் சென்று, 'நீ யுன் கணவனைப் பெறுவாய்' என்று ஆசிகூறினாள். அதைக்கேட்ட கண்ணகி, "அன்புடையாய்! நின் ஆசி பொய்க்காது; நான் என் கணவனைப் பெறுவேன். ஆயினும் என் உள்ளம் ஐயுறுகின்றது; அஃது எதனாலெனின், நேற்று நான் கண்ட கனவின்கண் என் கணவன் என்கையைப் பற்றிக்கொண்டுவர, நானும் என் கணவனும் ஒரு பெரிய நகரின்கட்சென்று தங்கினோம். அங்ஙனஞ்சென்று தங்கிய நகரின்கண் எங்கட்கு ஏலாததொரு படிற்றுரையை அவ்வூரார், இடுதேளிடுமாறுபோல என்மேலிட்டனர். அப்

படிற்றுரையினுல் 'கோவலற்குத் தீங்கொன்று உண்டாயிற்று' என்று பிறர் சொல்லக் கேட்டேன். அது பொருமல் யான் உடனே புறப்பட்டு, ஆண்மக்கள் முன் செல்லாதேன் அவ்வூர் அரசன்முன் சென்று, என்றும் வழக்குரையாதேன் வழக்குரைத்தேன். ஆதலால் அவ்வரசனுக்கும், அவ்வூருக்கும் ஒரு தீங்கு உண்டாயிற்று. "உரையார் இழிதக்க காணிற்கனு," எனப் பெரியோர்கூறுவர்; ஆதலின் அத்தீக்கனுவை உனக்கு விரித்துரையேன். பின்பு கணவனேடு யான்பெற்ற நன்மைகளை நீகேட்டாயானுல் அஃது உனக்கு நகைப்பைத் தரும்;" என்றுள்.

தேவந்தி அதைக்கேட்டு, "பொற்றெடி! நீகண்ட கனவையெண்ணி வருந்தற்க. நீ கணவனுல் வெறுக்கப்பட்டவளும் அல்லை. நீ முற்பிறப்பிற் கணவன் காரணமாகச் செய்யவேண்டிய நோன்பு ஒன்றைச் செய்யத்தவறினுய். அதனுல் உனக்குத் தீங்கு மிகுந்தது. அதற்குப் பரிகாரம் உண்டு. காவிரிகடலோடு கலக்கும் சங்கமுகத்துறைக்கு அயலில் **சோமகுண்டம் சூரியகுண்டம்** என்னும் இரண்டு தடாகங்கள் இருக்கின்றன. அவற்றின் துறைகளில் மூழ்கிக் காமன் கோயிலை அடைந்து அவனை வணங்குவோர்கள் இம்மையில் தம் கணவரோடு பிரிவின்றி இன்புற்றிருப்பார்கள். ஆதலின் நாமும் ஒருநாள்சென்று அவற்றுள் நீராடவேண்டும்;" என்றுள். தேவந்தியின் சொல்லைக்கேட்ட கண்ணகி, "அங்ஙனம் அத்தடாகங்களில் மூழ்கித் தெய்வந்தொழுதல் எங்களுக்கு இயல்பன்று," என்றுசொல்லி இருந்தாள். மாலைப்போது வந்துற்றது. பெண்கள் யாவரும் விளக்குகள் ஏற்றித் தங்களை அலங்கரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது கண்ணகியின் பணிப்பெண் ஒருத்தி அவளி

டஞ்சென்று, "கோவலர் நம்மை என்றும் நீங்காதுநின்று காப் பார்போல நங்கடைத்தலையில் வந்திருக்கின்றார்;" என்றாள். உடனே கோவலனும் உட்புகுந்து, கண்ணகியுடன் பள்ளியறை அடைந்து, அவளது வாடியமேனியையும், வருந்திய முகத் தோற்றத்தையுங் கண்டு நெஞ்சழுங்கி, "பாவாய்! பொய்யை மெய்யாகக் காட்டி நடிக்கும் பரத்தையை அடைந்திருந்த கார ணத்தினால் நங்குலத்து முன்னோர்கள் தேடிவைத்த இருநிதிக் குன்ற முழுதுந் தொலைந்துவிட்டது. அதனால் உண்டான வறு மை எனக்கு நாணைத்தருகின்றது;" என்றான். கண்ணகி, 'மாத விக்குக் கொடுக்கப் பொருளின்மையால் இங்ஙனங் கூறினான்' எனக்கருதிப் புன்முறுவல் செய்து, ஒளிபொருந்திய முகத் துடன் "இன்னும் இரண்டு சிலம்புகள் உள. அவற்றைக் கொண்டு செல்க" என்றனள். கோவலன், "அன்பாகிய நல் லணி யணிந்த பாவாய்! நான் மதுரையையடைந்து, நீ சொன்ன சிலம்புகளை வாணிகமுதலாகக்கொண்டு பொருளீட்டக் கருதி னேன். நீயும் என்னுடன் வருக;" என்று கூறினான். கண் ணகியும் மனங்களித்து அதற்கு ஒருப்பட்டாள்.

---

10. கோவலனும் கண்ணகியும் நாட்டு வழியாகப் போதல்.

கோவலனும் கண்ணகியும், அன்றே இரவின் கடைப்பொ ழுதாகிய வைகறையில் எழுந்து புறப்பட்டுக் காவலர் அறியாத படி இடைகழியைக் கடந்து சென்றார்கள். சென்றவர்கள் இடை கழியைக் கடந்தஇடத்தில்அரவணையில் அறிதுயில்கொ ண்டிருக்கும் மணிவண்ணப் பெருமாளின் திருக்கோயிலை வலஞ் செய்து வணங்கி, அங்கு நின்றும்போய்ப் புத்தசயித்தியத் துள்ள இந்திரனால் நிருமிக்கப்பட்ட எழு விகாரங்களையும்

கண்டுசென்று ஸ்ரீகோயிலில் விழாக்காலங்களில் ஆகாயசாரிகள் வந்து தங்குதற்காக இடப்பட்ட வட்டமாகிய சிலாதலத்தைத் தொழுது வலம்வந்து, ஒருபெரிய மலையினின்றோன்றிவரும் ஒருபெரிய யாற்றைப்போல அமைந்ததும், யாவரும் போக்கு வரவு செய்வதும் ஆகிய ஊர்வாயிலைக்கடந்து, பலமரங்கள் செறிந்த இலவந்திகை என்னுஞ் சோலையின் மதிலையும் கடந்து சென்றார்கள்.

பிறகு காவிரிக்கரையில் திருமுகத்துறை கழிகின்ற வாயிலையும், காவிரியின் வடகரையிலுள்ள சோலையையுங் கடந்து சென்றார்கள். இங்ஙனம் ஒருகாத தூரம் சென்று கவுந்தியென்னும் பெயரையுடைய தவமூதாட்டியாரது தவப் பள்ளிக்கு அயலதாகிய ஒரு சோலையினருகில் தங்கினார்கள். அப்போது கண்ணகி இளைப்பால் குறுக உயிர்த்து, இளநகை புரிந்து, "மதுரை மூதூர் இன்னும் எவ்வளவு தூரத்தில் உள்ளது?" என்று கேட்டாள். கோவலன் முகமலர்ந்து, நகைகாட்டி, "மென்மலரடியாய்! நமது நாட்டிற்கு அப்பால் ஐந்தாறு காதத்தில் உள்ளது;" என்றான்.

கோவலனும் கண்ணகியும் சற்று இளைப்பாறி, அயலதாகிய தவப்பள்ளியிலிருந்த கவுந்தி என்னுந் தவ மூதாட்டியாரை வணங்கினார்கள். அவர் சமணமதத்தினர். "அவர், நீங்கள் மிக்க அழகும், சிறந்த குடிப்பிறப்பும், ஒழுக்கமும் உடையவர்களாய்க் காணப்படுகின்றீர்கள். அருகர் நூலிற்கூறிய விரதங்களில் தப் பாதவர்களாகவுந் தோன்றுகின்றீர்கள். இந்நலங்கள் யாவும் ஒன்றுகூடி அமையப்பெற்ற நீங்கள் தீவினையாளரைப்போல உங்கள் பதியைவிட்டு இங்கு வருதற்குக் காரணம் யாது?"

என்று கேட்டனர். கோவலன் "அடிகாள்! யான்மதுரைசென்று வாணிகஞ்செய்து, பொருளீட்ட விரும்பினன். அதுவே காரணம்" என்றான்.

கவுந்தியடிகள் அதுகேட்டு, "உனது விருப்பம் நல்லதே. ஆயினும், வழியில் பருக்கைக்கற்கள் பரந்து கிடக்கின்றன. அவ்வழியில் இவள் மெல்லடிகள் நடத்தற்குரியனவல்ல. இனி, ஊழ் யாது செய்ய இருக்கின்றதோ! அதனை அறிவார் யார்? யான் மதுரைக்குச் சென்று, பெரியோர்களிடம் அறவுரை கேட்க எண்ணியிருக்கின்றேன்; ஆதலின் யானும் உங்களோடு வருகின்றேன்; வாருங்கள்" என்றார்.

அதைக்கேட்ட கோவலன் மிகவும் மகிழ்ந்து, "அடிகாள்! தாங்கள் இங்ஙனம் அருள்செய்தலால் நான் இவளது துன்பங்களையெல்லாம் ஒழித்தவனானேன்;" என்றான். கவுந்தியடிகள், "கோவல! நாம் செல்லுமிடத்திற்கு வயலும் சோலையுமாகிய வழியையன்றி வேறுவழியில்லை. அவ்வழியின் வருத்தத்தை நீ அறியாய். நான் சொல்லுகின்றேன், கேள்:— வள்ளிக்கிழங்குகளை எடுக்கத்தோண்டப்பட்ட குழிகள் சண்பகமரத்தினின் றுதிர்ந்த மலர்களால் நிரம்பிப் பொய்க்குழிகளாக இருக்கும். அவ்விடங்களை அறிந்து செல்லுதல் மிகவும் அருமை. குழியுள்ள வழிகளைக் கவனித்து நிலத்தை நோக்கிச் செல்கின்றவர்களுடைய உடலிலும் தலையிலும், பலாமரத்தின் தாழ்ந்த கிளைகளில் உள்ள பலாப்பழங்கள்முட்டும். அங்கு நீர்நாய்களைக் காணினும், கயல்மீன்கள் துள்ளிக்குதித்தலைக் காணினும், வாளைமீன்கள் பாய்தலைக்காணினும் இவள் மனம் மிகக்கலங்குவாள். வரம்பிலிட்ட குவளைப்பூவின்கண் மதுமயக்கத்தால்

மொய்த்திருக்கும் வண்டுகளை நீங்கள் மிதித்து விடவுங்கூடும். இவற்றையெல்லாங் கவனித்தறிந்து, இவளோடு நீ எச்சரிக்கையாக நடத்தல் வேண்டும்;" என்று சொல்லி, ஐயப்பாத்திரமும், மயிற்பீலியும், தோளிலே இடும் உறியுங்கொண்டு, 'பஞ்சமந்திரமே நமக்கு வழித்துணையாகுக;' என்றுரைத்து, அவர்களுடன் புறப்பட்டனர்.

அவர்கள் வழியில் மருதநிலங்களின் வளங்களைக் காணுதலாலும், பறவைகளின் இனிய ஓசைகளையும், களைபறிக்கும் கடைசியர் பாடும் பாட்டுகளையும், ஏருழுவோர் பாடும் ஏர்மங்கலப் பாட்டுகளையும், கிணைப்பொருநர் வயலுழவர்களைப் புகழ்ந்து பாடுங் களவழி வாழ்த்துப் பாட்டுகளையும் கேட்டலாலும் வழிவருத்தம் தோன்றாதவர்களாய், நாடோறுங் காதவழி நடந்து, அங்கங்குத் தங்கி இளைப்பாறி, மெல்ல மெல்லப் பல நாடுகளைக் கடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

புகார் நகரத்துப் பட்டினப்பாக்கத்தில் சிலாதலத்திலிருந்து அறங்களைப்போதிக்கும் சாரணர்கள் இருவர் அப்போது ஒருநாள் சீரங்கத்தில் ஒருசோலையில் வந்துதோன்றினார்கள். கவுந்தியடிகள் அவர்கள் வந்ததையறிந்துரைக்கக் கோவலனும் கண்ணகியும் அவ்வடிகளுடன் சென்று, அச்சாரணர்களை வணங்கினார்கள். அச்சாரணர்களில் மூத்தவர், கோவலனும் கண்ணகியும் அங்குவந்த காரணத்தைத் தமது அவதி ஞானத்தினாலறிந்து கொண்டனர். அவர் விருப்பும் வெறுப்பும் அற்றவராதலின், அவ்விருவருக்கும் இனிவர நிற்குந் துன்பத்திற்காக வருந்தாமல், கவுந்தியடிகளைப் பார்த்து "கவுந்தி! இவர்களுக்குத் தம்பயனை நுகர்விக்க வந்து நிற்கும் தீவினையைக்

காணாய். விளைநிலத்திட்டவித்தைப்போல நல்வினை வந்து தன் பயனை நுகர்விக்குங்கால் அதனை ஒழித்தல் முடியாது. அது போலவே, இத்தீவினையையும் ஒழித்தல் முடியாது. எல்லாப் பொருள்களையும் அறியும் அறிவுடையவனும், அறச்செல்வனும், பிறரது அறிவெல்லையைக் கடந்தவனும், எப்பொருளினுந் தங்குகின்றவனுமாகிய அருகனருளிய ஆகமமாகிய விளக்கொளியைப் பெற்றாலன்றி, எவர்களும் பல துன்பங்களுக்கு இடமாகிய பிறவி என்னும் சிறையினின்று தப்ப மாட்டார்கள் ;" என்றருளினர். கவுந்தியடிகள் அதனைக் கேட்டு, "முக்குற்றங்களை ஒழித்தோன் அருளிச்செய்த ஞான மொழியை அன்றிப் பிறிதொன்றை என் செவிகள் கேளா. காமனைவென்றவன் திருப்பெயர்களையன்றிப் பிறிதொன்றை என்னு நவிலாது. ஐம்பொறிகளைவென்றோன் திருவடியிணைகளையன்றிப் பிறதேவர்களின் அடியிணைகளை என் கண்கள் காணா. அருளையும் அறத்தையும் பூண்டவனை வணங்குதற் கன்றிப் பிறிதொன்றற்கும் என் உடல் பூமியிற்பொருந்தாது. அருகர்கட்கு அறத்தையருள்வோனாகிய அறிவன் பொருட்டன்றிப் பிறதேவர்கள் பொருட்டு என் கைகள் குவியா. என் மனம், ஈறிலாத இன்பத்தையுடைய இறைவனருளிய ஆகமத்தை ஓதிப் புடைபெயர்வதன்றிப் பிறிதொரு நூலையோதிப் புடைபெயராது ;" என்றார்.

அதைக்கேட்ட சாரணர்கள் அங்கிடப்பட்ட சிலாவட்டத்தினின்று எழுந்து, அதற்கு ஒரு முழம் மேலாக நின்று, 'கவுந்திக்குப் பவந்தருபாசம் கெடுக,' என்று கூறிச்சென்றார்கள். அங்ஙனஞ் செல்கின்றவர்களைக் கவுந்தியும், கண்ணகியும், கோவலனும் நோக்கித்தொழுது, 'பாசங்கள் அறுக,'

என்று வணங்கிச்சென்று, பள்ளியோடத்திலேறிப் போய்க் காவிரியாற்றின் தென்கரையை யடைந்து, அங்குள்ளதொரு தண்ணிய சோலையில் தங்கினார்கள். அப்போது வறுமொழியாளன் ஒருவன் வம்பப்பரத்தை ஒருத்தியோடு அங்கு வந்தனன். அவ்விருவரும் இவர்களைக்கண்டு கவுந்தியை நோக்கி, "அடிகாள்! நும்முடன் வந்துள்ள இவர்கள் யார்?" எனக்கேட்டுக் கோவலனையும் கண்ணகியையும் இகழ்ந்துரைத்தார்கள். அதனால் கவுந்தியடிகள் சினங்கொண்டு, "என்னருமைச் செல்வர்களை இகழ்ந்த இப்பேதையர் முள்ளுடைக்காட்டில் முதுநரிகள் ஆகுக;" எனச்சபித்தனர். உடனே அவர்கள் நரிகளாய் முதியகுரலுடன் கூவுவதைக் கண்ணகியும் கோவலனும் கேட்டு நடுங்கி, "அருந்தவத்தீர்! நல்லொழுக்கத்தினின்று நீங்கியவர்கள் நீர்மையல்லாத சொற்களைச் சொல்லினும், 'இவை அவர்கள் அறிவின்மையாற் சொல்லியவை,' என்று உயர்ந்தோர் உணரவேண்டும். இவர்கள் உம்முடைய திருமுன் செய்த பிழையை மன்னித்து இவர்கள் இத்துன்பத்தினீங்கியுய்யுங் காலத்தை உரைத்தருளுவீர்;" என்று வேண்டினார்கள். அதைக்கேட்டுக் கவுந்தியடிகள் உள்ளம், உரை, செயல் என்னும் மூன்றினாலேதான் இன்பதுன்பங்கள் எய்தும் என்பதை உணராமல் இவர்கள் தங்கள் கொடுமொழியால் இந்த இழிபிறப்பினை அடைந்தார்கள். இவர்கள் உறையூரின் மதிற்புறத்ததாகிய காவற்காட்டில் ஓராண்டளவும் இப்பிறப்புடன் திரிந்து, பிறகு முன்னைப் பிறப்பைப் பெறுவார்களாக;" என்று சாபவிடை செய்தனர். பின்னர் மூவர்களும் உறையூரை அடைந்தார்கள்.

II. மதுரைக்காண்டம்.

11. கோவலனும் கண்ணகியும் காட்டு வழியாகப் போதல்

மாலைப்பொழுதில் மூவரும் உறையூரை அடைந்து, அருகக்கடவுளை வணங்கினர். பிறகு அங்கு அருகப்பள்ளியி லுள்ள முனிவர்களுக்குக் கவுந்தியடிகள், சிரங்கப்பொழிலில் சாரணர்கள் கூறியவற்றை இனிமையுறக் கூறினர். அன்று அவர்கள் மூவர்களும் சாவகர் உறையும் இடத்திலே தங்கினார் கள். மறுநாள் வைகறையில் எழுந்து தென்திசை நோக்கிப் புறப்பட்டு, உறையூரைக் கடந்துசென்று, காலையில் ஓர் இள மரச்சோலையை யடைந்து, அதிலுள்ளதொரு மண்டபத்தில் தங்கினார்கள்.

அப்போது ஒரு மறையோன், "எங்கோன் வாழ்க; கடலின் அளவினை அரசர்க்குக்காலால் மிதித்துணர்த்தி, அதன் மேல் வேலையெறிந்த மன்னர் பெருந்தகை வாழ்க. தனக் குரிய தென்திசைக்கண் இருந்த பஃறுளியாற்றையும், பலபக்க மலைகளையுடைய குமரிக்கோட்டையையும் கடல் பழம்பகை யினால் கொள்ள வடதிசைக்கண் உள்ள கங்கையாற்றினையும், இமயமலையினையும் கைக்கொண்டு, தென்னாட்டின்கண் எங்கும் தனது செங்கோல் செல்லும்படி ஆண்ட பாண்டியன் வாழ்க;" என்றிங்ஙனம் பலவாறு பாண்டிய அரசனை வாழ்த்திக்கொண்டு அங்கு வந்து தங்கினன்.

அவனைக் கோவலன் கண்டு, "ஐயரே! நும்மூர்யாது? இங்கு நீர் வந்த காரணமென்னை?" என்று கேட்டனன்.



மறையோன், "நான் குடகமலையின் பக்கத்துள்ள 'மாங்காடு' என்னும் ஊரில் உள்ளவன். திருவமர்மார்பன், பலருந் தொழக் காவிரியாற்றினிடையில் திருவரங்கத்தில் படம் விரித்தெழுந்த ஆயிரந்தலைகளையுடைய அநந்தனாகிய அரவப் பள்ளியிலே நீலமேகம் ஒன்று பொன்மலையின்மேல் படிந்திருப்பது போலப் பள்ளிகொண்டருளிய திருக்கோலத்தையும், பொன்னுடையணிந்த அப்பெருமான் திருவேங்கடம் என்னும் மலையின் மீது நல்லநிறத்தினையுடைய முகில் ஒன்று தன் வலப்புறத்து ஞாயிறும், இடப்புறத்துத் திங்களும் விளங்கத் தன் மின்னாகிய புதுப்புடைவையை உடுத்துத் தன்வில்லாகிய அணியை அணிந்து நின்றாற்போல ஆழியையுஞ், சங்கையும் தன்தாமரைக் கைகளில் வலமும் இடமுமாக வந்தி, அழகிய ஆரத்தை மார்பிலணிந்து, பொன்னுடையை உடுத்து நின்றிருக்கும் கோலத்தையும் கண்டு களிக்க விரும்பிவந்தேன். இதுவே என் வரவின் காரணம். நான் வருகையில் தென்னவன் நாட்டின் சிறப்பையும், அவனுடைய கொடை, அளி முதலிய செய்கைகளையும் கண்குளிரும் வண்ணம் கண்டுவந்தேன். ஆதலின் அவனை வாழ்த்திக்கொண்டு வந்தேன்;" என்றனன்.

கோவலன், "ஐயரே! அங்ஙனமாயின் மதுரைக்குச் செல்லும் நெறியை எங்கட்குக் கூறும்;" என்றனன்.

மறையவன் கூறுவான்:— "அரசனானவன் வன்கண்மையினால் குடிகளை ஓம்பாத அமைச்சருடன் கூடிக் கடுஞ்சினமிக்குக் கொடுமை புரிதலால், அரசியல் ஒழிந்திருக்கும் அகன்ற நிலம்போலச் சூரியனாகிய வேந்தன், வேனிலாகிய தனக்குரிய அமைச்சனோடு கூடி வெம்மைமிக்குக் கொடுமை புரிதலால்

முல்லையும், குறிஞ்சியும் நல்லியல்பழிந்து சேர்ந்தோரை நடுங்கு துயருறவிக்கும் பாலையின் வடிவத்தைக் கொள்ளுதற்குரிய இந்தக் காலத்தில் நீர் இக்காரிகையோடு வந்தீர். நீங்கள் பாறையும், துறுகல்லும், நெறிமயக்கமும், பேய்த்தேரும் மிக்குப் பொருந்திய இந்தப்பாலை நிலத்தின் வழியைக் கடந்துபோய்க் கொடும்பாளூர், நெடுங்குளம் என்னும் இரண்டூர்களுக்கும் பொதுவாகிய ஏரியின் முன்னே அடைதல்வேண்டும். அந்த ஏரியின் கரையைக்கடந்து சென்றால் வழியானது சூலம்போல் மூன்றாய்ப் பிரியும். அவற்றுள் வலப்பக்கத்துள்ள வழியை முன்னே கூறுகின்றேன். அவ்வழியில் விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பும், உலர்ந்த தலைகளையுடைய ஓமையும், பொரிந்த தாளையுடைய வாகையும், தண்டுலர்ந்து புறத்தில் வயிரங்கொண்டுள்ள மூங்கிலும், கற்றுழை நீர்வற்றிக்கரிந்து கிடக்கும் இடங்களும், மான்கள் பருகு நீர்பெறாமல் வருந்திநிற்கும் காடுகளும், எயினர் ஊர்களையடுத்த வழிகளும் கடத்தற்கரியனவாயிருக்கும். அவற்றைக்கடந்து சென்றால் மலைநெல்லும், கரும்பும், தினையும், வரகும், வெள்ளுள்ளியும், மஞ்சளும், கவலைக் கொடியும், மலைவாழையும் கமுகும், தெங்கும், மாவும், பலாவும் ஆகிய இவை தன்னைச் சூழ்ந்திருக்கப்பெற்றதும், சிறுமலையென்னும் பெயரையுடையதுமாகிய மலைதோன்றும். அதனை வலப்பக்கத்துக்கொண்டு இடப்பக்கத்து நெறியிற்சென்றால், மதுரையை யடையலாம்.

" இடப்பக்கத்து வழியைக் கூறுகின்றேன்; கேண்மின்" ஆழ்ந்த தடங்களும், தாழ்ந்த வயல்களும், குளிர்ந்த பூஞ்சோலைகளும், பல அருஞ்சுரங்களும் இடையிற்கிடக்கப்பெற்ற வழியைக் கடந்து சென்றால் அழகர்திருமலை எதிர்ப்படும்.

அங்கே மிக்க மயக்கத்தைக் கொடுக்கும் பிலத்துவழி யொன்றுண்டு. அப்பிலத்துக்குள் புண்ணியசரவணம், பவகாரணி, இட்டசித்தி என்னும் மூன்று பொய்கைகள் ஒன்றின்பக்கல் ஒன்ருக இருக்கின்றன.

"அவற்றுள் புண்ணிய சரவணத்துள் மூழ்குவீராயின் ஐந்திர வியாகரணத்தை உணர்வீர்; பவகாரணியிற் படிவீராயின் இப்பிறப்பிற்குக் காரணமாகிய முற்பிறப்பின் உணர்ச்சியைப் பெறுவீர்; இட்டசித்தியிலே நீராடுவீராயின் இட்டசித்தியை எய்துவீர்.

"அப்பிலத்தினுட் புக விரும்பினுல் அம்மலையில் எழுந்தருளியிருக்கும் அழகரை நினைத்துத் தொழுது, அம்மலையை மும்முறை வலமாய்ச்சுற்றி வந்தால், அம்மலையின் கண்ணதாகிய சிலம்பாற்றின் கரையிலே உள்ள கோங்கமரத்தின் நிழலிலே வரோத்தமை என்னும் ஓர் இயக்கி தோன்றுவாள். அவள், "யான் இத்தாழ்வரையின்கண் வாழ்வேன். இப்பிறப்பிற்கின்பமும், மறுபிறப்பிற்கின்பமும், இம்மை மறுமை ஒழிந்து, எக்காலமும் ஒரு தன்மையாய்க் கோட்டமின்றி அழிவறநிற்கும் இன்பமுமாகிய பொருள்கள் யாவை? இவ்வினுக்களுக்கு விடையை உரைப்பார்க்கு யான் எத்தொழிலும் செய்தற்குரியேன். நீவிர் உரைத்தீராயின் உங்கட்கு இப்பொழுதே இப்பிலவாயிற் கதவைத் திறந்து தருவேன்;" என்பாள். நீங்கள் விடையைக்கூறின் கதவுதிறந்து உங்களுக்கு வழி காட்டுவாள். அவ்வழியிலே நீண்ட இடைகழி வாயில்கள் பலவுள. அவற்றைக்கழிந்து சென்றுல் இரட்டைக்கதவை யுடையதோர்

வாயில் காணப்படும். அதற்கு மேலாகச்சென்றால் வட்டிகையிலெழுதப்பட்ட பாவைபோல்வாள் ஒருத்தி தோன்றி, 'ஈறில்லாத இன்பம் யாது?' என்று கேட்பாள். அதற்கு விடை உரையீராயினும் உங்களை வருத்தாமல் நீங்கள் போதற்குரிய இடத்திலே உங்களைப் போக்குவள்; உரைத்தீராயின் முற்கூறிய பொய்கையின் கரைக்கண் உங்களைச்செலுத்தி, அவற்றைக்காட்டிச் செல்லுவள். நீர் ஐந்தெழுத்தாலும், எட்டெழுத்தாலும் ஆன மந்திரங்கள் இரண்டையும் ஒரு தன்மையாகக்கொண்டு மனத்தால் நினைத்து, வாயாற்றுதித்து, அப்பொய்கைகள் மூன்றனுள், உங்களுக்கு விருப்பமானதொன்றின் நீராடின் சிறந்த தவங்களைச் செய்தவர்களாலும் எய்துதற்கரிய பயன்களை எய்துவீர். அங்ஙனமாகிய அப்பொய்கைகளின் பயனை நீர் விரும்பீராயின் அம்மலையின்மீது நிற்போனாகிய அழகனது தாமரைமலர்போன்ற தாள்களை நினைமின்கள். அங்ஙனம் நினைப்பீர்களாயின் அப்பொழுதே சென்று, அவனது கருடப்புள் எழுதிய கொடித்தண்டு பொருந்தி நிற்கும் இடத்தைக் காண்பீர்கள். கண்டவுடன் அவன் துணைமலர்த் தாள்கள் உங்களையேற்றுக்கொண்டு உங்களுடைய பிறவித்துன்பத்தைக் கெடுக்கும். அதைக்கண்டதனால் நாம் பின்னர்ப் பரமபதத்திற்குச் செல்லுதலும் மெய்யென்றெண்ணி, மரபின்வந்த மாட்சிமையினையுடைய மதுரை மூதூரைச் சென்றடைமின்கள்.

"இனி இடைப்பட்ட நெறியைப்பற்றிக் கூறுகின்றேன்; கேளுங்கள். இடைப்பட்டநெறி மிகவுஞ் செவ்விதாகிய நெறியே. அவ்வழியில் சோலைகள் சூழ்ந்த பல ஊர்களும் ஊர்களையிடையிட்ட காடுகளும் உள்ளன. அவற்றை எளிதிற்

கடந்து செல்லலாம். அப்பால் கடத்தற்கரிய தொருவழியுண்டு. அவ்வழியில் மிக்க துயரைத்தருவதாகிய தெய்வம் ஒன்றிருக்கின்றது. அது வழிப்போவாரை வருத்துவதில்லை. வழிப்போவார் போக்கை அது நயமொழிகள் கூறித்தடுக்கும். அதனைத் தப்பிச்சென்றால் அப்பெருவழி, போவார் யார்க்கும் இனிமையானதாயிருக்கும். இம்மூன்றனுள் நீங்கள் விரும்பிய வழியிலே செல்லுங்கள். நெடுமுடியண்ணலின் திருவடிகளைத் தொழ யான் என் வழிச் செல்கின்றேன்;" என்றான்.

அங்ஙனம் அம்மறையோன் கூறிய வழித்திறங்களைக் கேட்ட கவுந்தியடிகள் அவனைநோக்கி, "நான்மறையாள! ஐந்திரவியாகரணத்தை எங்கள் பரமாகமத்திற் காண்கின்றிலையோ? ஆதலின் யாங்கள் புண்ணிய சரவணத்திற் பொருந்துதல் வேண்டா. முற்பிறப்பிற் செய்தவற்றை இப்பிறப்பிற் காணலாமாதலின் யாங்கள் பவகாரணியிற்படிதல் வேண்டா. வாய்மையும், கொல்லாமையுமாகிய இரண்டினையும் வழுவாதோம்புவார்க்குக் கைகூடாப்பொருள் யாதொன்றும் இல்லை. ஆதலின் யாங்கள் இட்டசித்தியில் எய்துதல் வேண்டா. ஆதலின் பிலம் புகுதற்குரிய நிமித்தம் எங்கட்கில்லை. நீ விரும்பி வந்த கடவுளைக்கண்டு அடிபணிதற்குச்செல்க. யாங்கள் எங்கட்கேற்ற தொருவழியே செல்வோம்;" என்று சொல்லிக் கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக்கொண்டு போய் ஓர் ஊரிலே தங்கினர்.

அம்மூவரும் மறுநாள் அவ்வூரினின்றும் புறப்பட்டுச் செல்கையில், கவுந்தியடிகளும் கண்ணகியும் வழிநடை வருத்தத்தினாலே இளைப்பாற வழியின் பக்கத்திலே தங்கினார்கள்.

கோவலன் அப்போது அவ்வழியின் இடையிலுள்ள ஒருபக்க வழியைக் கடந்துசென்று, நீர்வேட்கையோடு ஒரு பொய்கைக் கரையின் பெரிய துறையின்கண் நின்றான். முன் மறையோன் கூறிய கானுறைதெய்வம் அவனைக்கண்டு, அவன்பால் விருப் பெய்தி, வசந்தமாலையின் வடிவங்கொண்டு அவனடியில் விழு ந்து, பொய்யாகக் கண்ணீரைச் சொரிந்து, "ஐய! 'மாலையில் யானெழுதியதில் தவறுடையேனல்லேன். நீ சொன்ன சொல்லில் தவறுண்டுபோலும்! அதனாலேதான் கோவலர் எனக்குக் கொடு மை செய்தனர்;' என்று மாதவி கூறி, என்முன் மயங்கி விழுந்து மிக்க துயரமுற்று, 'முனிவரும், கற்றோரும், மதிநுட்ப முடை யோரும் வெறுக்கத்தக்க இப்பொதுமகளிரது வாழ்க்கை கடையானது' என்று சொல்லித் தனது செவ்வரி படர்ந்த செழுங்கடையையுடைய கண்களினின்றும் வெண்முத்துப் போலும் நீரைச்சொரிந்து தன் மார்பிலிருந்த வெள்ளொளி திகழும் முத்துவடத்தினைப் பறித்து எறிந்து, துறவாத என்னை யுந் துறந்தனள். நீங்கள் மதுரையை நோக்கிச் செல்லுவதை வழியில் எதிர்ப்பட்டார் உரைக்கக்கேட்டு வாணிகச்சாத்துடன் போந்து துயருழந்தேன். நீங்காத நற்குணங்களை உடை யோய்! இனி நீ அருளிச்செய்வது யாது?" என்றனள்.

அவ்வனத்துறை தெய்வமாது இங்ஙனம் நடித்தலைக்கண்ட கோவலன், 'மதியை மயக்குவிக்குந் தெய்வம் இக்காட்டில் உண்டென்று அப்பார்ப்பான் கூறினன். ஆதலின், இவள் அத் தெய்வமாது அல்லது மானிடமகள் என்பதை மந்திரத்தால்அறி வேன்;' என்று அந்தரியின் மந்திரத்தை உருவிட்டான். அது கண்டு அத்தெய்வம், "யான் இவ்வனத்தில் திரிகின்ற தெய்வம். உன்னை விரும்புதலால் இம்மயக்கஞ் செய்தேன். கண்ணகியும்,

கவுந்தியடிகளும் இதனையறியின் என்னைச் சபித்திடுவார்கள். ஆதலால், அவர்களிடம் இதனை உரையேல்;'' என்று கூறித் தன்னிடஞ்சென்றது.

பிறகு கோவலன், தாமரையிலையில் தண்ணீர்கொணர்ந்து கண்ணகியின் நீர் வேட்கையைத் தீர்த்தான். சூரியனது வெப்பம் மிகுதலால், கவுந்தியடிகள் இனிச்செல்லுதல் அரிதென்றுணர்ந்தனர். ஆதலின் கோவலனையும், கண்ணகியையும் அழைத்துக் கொண்டு, குரவம், கோங்கு, வெண்கடம்பு, வேங்கை என்னும் மரங்கள் விரவியுள்ள சோலைசூழ்ந்த இருப்பிடத்து அரிய வழிகளிற் செல்வாருடைய கைப்பொருளை விரும்புதலன்றி மழைவளத்தை விரும்பாத மறவர்களுக்கு வெற்றியைக் கொடுத்து, அவர்களால் இடப்படும் அவிப்பலியைப்பெறும் பொருட்டு வழிபார்த்திருக்கும் ஐயை கோட்டத்தை யடைந்து ஒரு பக்கம் தங்கியிருந்தனர்.

---

12. வேடுவர் ஐயையைப் பூசித்தல்.

அப்போது வேட்டுவமகளாகிய தேவராட்டி, நடுவூர்மன்றத்திலே தெய்வத் தன்மையுற்று, மெய்ம்மயிர்சிலிர்த்து, மூரி நிமிர்த்த கைகளை ஒற்றையும் இரட்டையுமாக்கி, அபிநயத்தோடுகூட்டி அடிபெயர்த்தாடி, “கொற்றவைக்கு நேர்ந்த கடனைக் கொடாமையால் எயினர் மன்றுகள் பாழ்பட்டன; பகைவர் ஊர்களில் நிரைகள் மிக்கன. மறக்குடிகளாகிய எயினர்களும் தமக்கு முறைமையாகவருகின்ற ஆறெறி, சூறை, ஆகோள் முதலியவற்றால் விளையும் வளங்குன்றி, அறக்குடிகளைப்போலச் சினங்குன்றிச் செருக்கடங்கி விட்டார்கள். எயி

னர்காள்! கொற்றவைக்கு நீங்கள் உயிர்ப்பலியைக் கொடுப்பி னல்லது அவள் உங்கட்கு வெற்றி கொடாள். நீங்கள் கள் ஏருண்டு களிக்கும் வாழ்க்கையை விரும்புவீர்களாயின் நமது செல்விக்கு நேர்ந்த கடனைக்கடிதிற் கொடுமின்கள்;" என்று சொன்னாள்.

பகைவர்கள் தலைகளைத் தாம்வெட்டி எண்ணுவதல்லது தம்தலைகளைப் பகைவர்கள் எண்ணும்படிவிடாத மறவர்களாகிய வேடர்கள், அதனைக்கேட்டுத் தமது பழைய குடியிற்றோன்றிய ஒரு குமரியை அழைத்துக் குறிதாகச் செறிந்துள்ள அவளது கூந்தலைச் சடையாகக்கட்டி, அதன்மேல் பொன்னாலாகிய பாம்பை அணிந்து, பன்றியினது கொம்பைப்பறித்துப் பிறை யாகச்சாத்தி, வலிய புலிப்பற்களாலாகிய தாலியைக்கட்டி, வரி யும் புள்ளியுங் கலந்துள்ள புலித்தோலை மேகலையாக உடுத்து, வில்லைவளைத்து அவள்கையிற்கொடுத்து, முறுக்குண்ட கொம்பு களையுடைய கலைமான்மீது அவளை இருத்தி, பாவையும், கிளி யும், கானக்கோழியும், மயிலும், பந்தும், கழங்கும் கொண்டு துதித்தார்கள்.

பிறகு ஏவல்செய்யும் எயிற்றியர் வண்ணம், சுண்ணம், சாந்தம், பூ, புகை முதலியவற்றை ஏந்திவர வழிபறிக்குங்கால் கொட்டும் பறையும், சூறைகொள்ளும்போது ஊதும் சின்ன மும், துத்தரிக்கொம்பும் குழலுந் தம்மிற்கலந்துஒலிக்க அவளை யழைத்துவந்து கொற்றவையின் முன்னே நிறுத்தினார்கள்.

அவள் பலிபீடத்தைக் கைகூப்பித் தொழுது,

"சுடரொடு திரிதரு முனிவரு மமரரு
மிடர்கெட வருளுநி னிணையடி தொழுதேம்

அடல்வலி யெயினர்நின் னடிதொழு கடனிது
மிடறுகு குருதிகொள் விறறரு விலையே."

வே று.

"வம்பலர் பல்கி வழியும் வளம்பட
வம்புடை வல்வி லெயினர்கட னுண்குவாய்
சங்கரி யந்தரி நீலி சடாமுடிச்
செங்க ணரவு பிறையுடன் சேர்த்துவாய்."

என்று துதித்தனள். உடனே கொற்றவை சாலினியின் மீது ஆவேசித்தனள். அத்தேவராட்டி கோவலனுடனிருந்த கண்ணகியைக் காட்டி, 'இவளோ,

கொங்கச் செல்வி ; குடமலை யாட்டி ;
தென்றமிழ்ப் பாவை ; செய்தவக் கொழுந்து ;
ஒருமா மணியா யுலகிற் கோங்கிய
திருமா மணி.'

என்று கூறினள். அவள் அங்ஙனம் புகழ்ந்து கூறியதைக் கேட்ட கண்ணகி, 'இத்தேவராட்டி, தெய்வமயக்கத்தால் இங்ஙனங் கூறினாள்,' எனக்கருதி, நாணத்தினால் தன் கணவன் புறத்து மறைந்து, புன்முறுவல் பூத்துநின்றனள். பிறகு கொற்றவை மனமகிழ்ந்து, வேடர்களுக்கு வேண்டிய வரங்களை அருளினள்.

13. மூவரும் மதுரையின் புறஞ்சேரியில் தங்குதல்.

சாலினிகொண்ட கோலமும், கூத்தும் முடிந்த பிறகு கோவலன் கவுந்தியடிகளை வணங்கி, "அடிகாள்! இவள் இக்கொடிய கதிர்வெப்பந் தன் மெய்யிற்படப் பொறாள். இவள் சிற்றடிகள் பருக்கைக்கற்கள் நிரம்பிய இப்பாலை நிலத்திற்படியப்பெறா. செங்கோல் முறையினையுடைய பாண்டியர்களுடைய ஆஞ்யாசக்கரத்தினாற் காக்கப்படும் நாடாதலின், இந்நாட்டில் பன்றிகள் புற்றுகளை அகழா. புலிகளும், மானினங்களோடு பகைகொள்ளா. முதலையும் பாம்பும், சூரும், உருமும் உயிர்களை வருத்தா. ஆதலால் கொடிய வெப்பத்தினையுடைய பகற்போதிலே வழிநடத்தலினும் இராப்போதில் நடத்தலே நலமாகும்;" என்றான். கவுந்தியடிகளும் அதற்கு உடன்பட்டனர்.

கொடுங்கோல் வேந்தன் குடிகள், அவனது போங்காலத்தையும், செங்கோல் வேந்தன் வருங்காலத்தையும் நோக்கி இருத்தல்போல அம்மூவரும் வெங்கதிர்படும் பொழுதையும் தண்கதிர் எழும்பொழுதையும் எதிர்நோக்கி இருந்தார்கள்.

தென்னவன் குலத்திற்கு முதல்வனாகிய திங்கட்செல்வன், உடுக்கூட்டங்களாகிய சேனைகளுடன் தன்னுடைய தண்ணிய கிரணங்களை எப்பக்கமும் பரப்பிக்கொண்டு தோன்றினன். உடனே மூவரும் புறப்பட்டனர். அப்போது கோவலன் அரிய வழிகளில் நடந்து துன்புற்ற கண்ணகியை நோக்கி, 'மடவனமே! இவ்விரவிடை நாம் செல்லும்வழியில் புலிமறுகும்; பேராந்தை குழறும்; கரடி இடிக்கும். நீ அவற்றிற்கெல்லாம் அஞ்சாமல்வருக,' என்று கூறித்துயிலின் மயக்கத்தால் அவள் நடைதளர்தலைக்கண்டு, அவளைத் தன்தோளைப்பற்றிக் கொள்ளச்சொல்லிக் கவுந்தியடிகள்கூறும் அறவுரைகளைக் கேட்டுக்

கொண்டு சென்றான். இங்ஙனம் அம்மூவரும் வெகுதூரஞ் சென்றபோது வேனிற்காலத்தின் வெப்பத்தினால் வெந்து கரிந்து கிடக்கும் மூங்கிற் காட்டில் இருக்குஞ் சேவற்கோழி கள்கூவிச் சூரியன் வருகையைத் தெரிவித்தன. அம்மூவரும் அங்கு அருகில் இருந்ததோர் மறையவர் பதியையடைந்து, பகற்பொழுதைக் கழித்தற்பொருட்டு அதில் தங்கினார்கள்.

கோவலன் கவுந்தியடிகளையும், கண்ணகியையும் ஒதுக்க மானதோர் இடத்தில் நிறுத்தி, அங்கிருந்த முள்வேலியைச் சிறிது விலக்கிக்கொண்டு சென்று காலைக்கடனை முடித்தற் பொருட்டு ஒரு நீர் நிலையை அடைந்தான். அடைந்தவன் தான் தன் மனையாளோடு காட்டின்கண் வரும்படிநேர்ந்ததை எண் ணிக்கொல்லன் உலையில் ஊதுந்துருத்தியைப்போல நெட்டுயிர் த்து வருந்தி நின்றான். மாதவியால் அனுப்பப்பட்ட கௌசிகன் என்னும் மறையோன் ஒருவன் அப்போது அங்கு வந்து சேர்ந் தான். கோவலன் மனக்கலக்கத்தால் நிறம் வேறுபட்டிருந்தமை யாலும், அவ்வேதியன் சேய்மையிலிருந்தமையாலும், கோவ லனை நன்குணரமாட்டாதவனாய் ‘ இவன் கோவலன்றானோ அல்லனோ!” என்றையமுற்று, அவ்வையந்தீர்தற் பொருட்டுக் குருக்கத்திக் கொடிபடர்ந்த நிழலையுடைய இடத்திலே நின்று அக்கொடியை நோக்கி, “ ஓ மாதவீ! கோவலன் பிரிவிற் காற் றாது வருந்தி அலர்களைந்து வாடி இருக்கின்ற மாதவியைப் போல நீயும் இளவேனிலின் பிரிவிற்காற்றாது இம்முது வேனி லின்கண் வருந்தி அலர்களைந்து வாடி இருக்கின்றாய். இதற் குக் காரணம் உங்கள் இருவருக்கும் பொருந்திய மாதவி யென் னும் பெயரின் வாசிதான்போலும்;” என்றான். அதைக்கேட்ட கோவலன், “ நீ இங்குக் கூறியதன் பொருள்யாது?” எனக்

கோசிகன், 'இவன் கோவலனே,' எனத்துணிந்து, அவனருகிற் சென்று, 'ஐய! உன் பெற்றோர்களாகிய இருநிதிக் கிழவனும், அவனது, பெருமனைக் கிழத்தியும், அரிய மணியை இழந்த நாகம்போல அழகும் ஒளியும் இழந்து ஒடுங்கினார்கள். உன்னுடைய நெருங்கிய சுற்றத்தவர்கள், இனிய உயிரையிழந்த யாக்கைபோலச் செயலற்றுத் துயர்க்கடலில் மூழ்கினார்கள். உங்களிருவரையுந் தேடும்படி உன் தந்தையினால் அனுப்பப்பட்ட ஏவலாளர்கள் பல விடங்களிலுஞ்சென்றிருக்கின்றார்கள். தசரதன் பணியை உறுதியெனக்கொண்டு இராமன் காட்டிற்குச் சென்றபோது அயோத்தியின்கண் உள்ளார்செயலற்று மயங்கினாற்போல உங்கள் பிரிவால் புகாரின்கண் உள்ளார் யாவரும் செயலற்று மயங்கி இருக்கின்றார்கள். மாதவி, தானனுப்பிய திருமுகத்தை நீ மறுத்த செய்தியை வசந்தமாலை சொல்லக் கேட்டு நெடுநிலை மாடத்தோர் அமளிமிசை வீழ்ந்தனள். அவள் உற்ற துயரைக் கேட்டு நான் அவள்பாற் சென்றேன். அவள், 'ஐய! உன் அடியிணைகளைப் பணிகின்றேன். என் துயரைப் போக்குதல் வேண்டும்,' என்றுகூறி இத்திருமுகத்தை என் கையிற் கொடுத்து, 'இதனை என் கண்மணிபோல்வானுக்குக் கொடுத்தி,' என வேண்டினள். நான் பல இடங்களிலுஞ் சென்று நின்னைத்தேடி முடிவில் இங்கு வந்து கண்டேன்;' என்று சொல்லி, அத்திருமுகத்தைக் கோவலன் கையிற் கொடுத்தான்.

அத்திருமுகத்தில் அடியில்வருஞ் செய்தி எழுதப்பட்டிருந்தது:

"அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர் பணியன்றியுங் குலப்பிறப் பாட்டியோ

டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய்! போற்றி."

கோவலன் அதனைப் படித்து அதன் பொருள் முழுதை யும் உணர்ந்து, 'மாதவி தீதிலள்; என் தீவினையே இதற்குக் காரணம்;' என்று மனந்தெளிந்து தளர்ச்சி நீங்கினான்.

பிறகு கோசிகனை நோக்கி, 'ஐய! இவ்வோலை தானே என் தந்தைக்கும் ஏற்றதாம்படி சொற்களும், பொருளும் பொருந்தியதாய் இருக்கின்றது. இதனைக்கொண்டு சென்று, யான் என் பெற்றோரைத் திசைநோக்கித் தொழுததாகச் சொல்லி, என் தந்தைக்குக் காட்டுவாயாக;' என்று அவன் கையில் அத்திருமுகத்தைக் கொடுத்து, 'ஐய! என் பொருட்டாக என் பெற்றோர்கள் நடுங்கும் நடுக்கத்தையும், அவர்களது துன்பத்தையும் நீக்குதற்கு நீ விரைந்து செல்க,' என்று கூறி அவனை அனுப்பிக் குற்றமற்ற கற்பினையுடைய கண்ணகியும், மாசற்ற கொள்கையையுடைய கவுந்தியடிகளும் உள்ள இடத்திற்கு வந்தான்.

பிறகு வெற்றிபொருந்திய அசுரர்களோடு பொருத துர்க்கையினது போர்க்கோலத்தைப் பாடிக்கொண்டு அங்கு வந்த பாணர்களுடன் அம்மூவர்களும் மதுரையை நோக்கிப் புறப்பட்டார்கள். கோவலன் அப் பாணர்களுடன் கலந்து யாழிலே பல பண்களை வாசித்துக்கொண்டு சென்றான். சிறிது தூரஞ் சென்றபின், கோவலன் அப்பாணர்களை நோக்கி, "மதுரை மூதூர் இவ்விடத்திற்கு எத்துணைக்காவதத்தில் உள்ளது? கூறுமின்," என்றான். அவர்கள், 'சங்கப்புலவர்களால் புகழப்பட்ட சிறப்பால் பொதியத் தென்றலினுஞ் சிறந்த தெனப்படும்

மதுரைத்தென்றல் அகிற்சாந்து, குங்குமக்குழம்பு முதலிய வற்றின் சேற்றையணிந்து, கழுநீர் மலர்களாலும், சண்பக மலர்களாலுமாகிய மாலேயோடு குருக்கத்தி, மல்லிகை, முல்லை என்னும் இம்மலர்கள் நிறைந்த அணையிலே பொருந்தி, அட்டில்களின் புகையும், அப்ப வகைகளின் புகையும், அகிற்புகையும் ஆகிய பல் வேறு வகைப்பட்ட புகைகளை அளவி இதோ வந்தது காணீர். ஆதலின் பாண்டியனுடைய திருமலி மூதூர் நணிசேய்த்தன்று. நீங்கள் தனியாகச் செல்லினும் தடுப்பாரில்லை;" என்றார்கள். அதைக்கேட்ட அம்மூவர்களும் முன் நாளைப்போல அன்று பகற்போதில் அங்குத்தங்கி, இரவில் புறப்பட்டார்கள்.

மறுநாள் வைகறைப் பொழுதில் மதுரையை அடைந்து, சிவபெருமானது கோயிலிலும், மன்னன் அரண்மனையிலும் உண்டாகும் காலை முரசின் ஒலியும், மறையவர் வேதங்களை ஓதும் ஓதையும் மாதவர் மந்திரங்களைக் கூறும் ஓசையும், வாள் வீரர்கள் தத்தம் வீரத்தின் மேன்மை தோன்ற எடுத்த முரசம் முதலியவற்றின் ஆர்ப்பும், போர்க்களிறுகளின் முழக்கமும், புரவிகளின் சும்மையும், நிலந்தோறும் மள்ளர்கள் கொட்டும் மருதப்பறையின் கலிப்பும் ஒருங்குகூடிக் கடலின் ஒலிபோல ஒலித்து எதிர்கொண்டமையின் அம்மூவரும்வழி நடந்த வருத்தம் நீங்கி, மகிழ்வெய்தினர்.

அங்குக் கரையினின்றுகுத்த முருக்கிதழாகிய செவ்வாயினையும், அருவியோடுவந்த முல்லையாகிய நகையினையும், கயல்களாகிய நெடிய கண்களையும், இருகரையினும் பொருந்திய கருமணல்களாகிய கரிய கூந்தலினையும் உடைய வைகை யாறு கியபெண், கண்ணகிக்கு மேல்வருந் துன்பங்களை முன்னறி

ந்து அவளைக்காண மனமாற்றாதவள் போலத் தன் மெய்ம்முழுதும் நறிய பூவாடையாற் போர்த்துக்கொண்டு தன்கண் மிக்க நீரைப்புறத்திடின் கண்ணகியும், கோவலனும் வருந்துவார்கள் என்றஞ்சி உள்ளடக்கிக் கொண்டிருந்தாள்.

அங்ஙனம் போர்த்த பூவால் புனல் மறைந்த வைகையாற்றைக் கண்ணகியும், கோவலனுங்கண்டு, 'இதுபுனல்யாறன்று; பூம்புனல்யாறு,' எனத்தொழுது, பலரும் குதிரைமுக ஓடம், யானைமுக ஓடம், சிங்கமுக ஓடம் முதலிய ஓடங்களில் ஏறிச்செல்லும் பெருந்துறையிற் செல்லாது அதற்கயலதாகிய துறையிலே மரப்புணையில் ஏறிச்சென்று, பலர் செல்லாததும் சோலை பொருந்தியதுமாகிய தென்கரையை யடைந்தார்கள். பிறகு அவர்கள், தேவர்களுறையும் மதுரையை வலஞ்செய்து கொண்டு சார்தல் புண்ணியமாம், என்று கருதிக் காவற்காடு சூழ்ந்த அகழியை வலம் வந்து, ஏரிகளும், ஓடைகளும், வயல்களும், பொழில்களும், தெங்குகளும், கமுகுகளும், வாழைகளும், மூங்கிற்றிரளால் அமைக்கப்பட்ட தண்ணீர்ப்பந்தர்களும் பொருந்தி விளங்கும் மதுரைமூதூரின் புறமதிலைச் சார்ந்ததாகிய தவசிகளுறையும் புறஞ்சேரியின்கண் புகுந்தார்கள்.

கண்ணகியும், கோவலனும் மேல் அடைய நிற்கும் துன்பத்தைக் குவளையும், ஆம்பலும் கமலமும் தாம் முன்னே நன்கு அறிந்தனபோல் தங்கண்ணீருகுத்துக் காலுறநடுங்கின. அம்மலர்களில் வண்டுகள் ரீங்காரஞ்செய்தல் அவர்களின் துன்பத்திற்காக இரங்கி, அம்மலர்கள் அரற்றுதல்போல் தோன்றின. புறமதிற்றலையில் அமைந்த கொடிகள் அவர்களை, 'இந்நகரின்கண் வாராதொழிமின்,' என்பனபோல் அசைந்தாடின.

14. கோவலன் மதுரைமூதூரைச் சுற்றிப் பார்த்தல்.

அம்மூவர்களும் தங்கிய புறஞ்சேரியின்கண் உள்ள பொழில்களிலும், பண்ணைகளிலும், கழனிகளிலும் பறவைக் கூட்டங்கள் எழுந்து ஆரவாரித்தன. சூரியன் பொய்கைகளி லுள்ள தாமரைகளை மலர்வித்து, அந்நகரத்தையும் துயிலெழுப் பினன். கண்ணுதலோன் கோயிலிலும், திருமால் நியமத்தி னும், பலதேவன் தளியினும், செவ்வேள் கோட்டத்தினும், அறவோர் பள்ளியிலும், மன்னர் அரமனையிலும், காலைமுரச மும், சங்கும், கொம்பும் ஒலித்தன.

அப்போது கோவலன்சென்று தியானத்திலிருந்த கவுந்தி யடிகளைக் கைதொழுது, "செய்தவத்தீர்! நான் ஒழுக்கத்திற் றப்பினோரது தன்மையை யுடையவனாய்ப் பரத்தையோடிருந் தொழுகிய காரணத்தால், மலர்போலும் மேனியையுடைய இவள்நடுங்கித்துயருறும்படி முன்னங் கனவிலும்நினைந்தறியாத அரிய வழிகளில் திரிந்து துன்பமும், சிறுமையும் ஒருங்கெய்தி னள். அடிகாள்! யான் நகரினுட்சென்று, இந்நகரிலுள்ள வணிகர்க்கு என்தன்மையை உரைத்து வருகின்றேன். உமது திருவடியாகிய பாதுகாவலில் இவளுக்குத் துன்பமுண்டாகாது என்பதில் ஐயுறவில்லை;" என்றான்.

அதைக்கேட்ட கவுந்தியடிகள், 'நீ முற்பிறப்பிலே பெரி தும் நல்வினை புரிந்தனையாயினும் சிறிது தீவினையும் செய்துள் ளாய். அதனாலேதான் பெற்றோரையும், சுற்றத்தாரையும் விட்டுத் தனியே வந்து துயருழந்தாய். அதற்காக வருந்தற்க. 'பிற உயிர்க்குத் தீமை செய்தலை விடுமின். அத்தீமை, தன் விளைவாகிய துன்பத்தை உங்களுக்கு உண்டாக்கும்,' என்று

அறத்துறையாளர்கள் நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்து கூறி னும் நல்வினையின் திறத்து உறுநியற்றோர் அதனைக் கொள்ளா மல் தீமை புரிந்து, பின்னர் அவ்வல்வினை தோன்றித் துன் பத்தை நுகர்விக்குங்கால் செயலற்று வருந்துவர். கற்றறிந் தோர்கள் தீவினையின் பயனாகிய துன்பத்தை நுகருங்கால் அதற்காக மனந்தளர்ந்து வருந்தார்கள். இனி மாதரையடை தற்றுன்பமும், அவரைப் பிரிதற்றுன்பமும் முழுத்துன்பமே. பொருளையீட்டு முயற்சியால் வருந்துன்பமும், அதனை இழத்த லால் வருந்துன்பமும், வறுமையினால் வருந்துன்பமும், பெருந் துன்பங்களே. துன்பமனைத்தும் இவ்விருதிறத்தானே வரும். இவ்விருவகையான துன்பங்கள் அவ்விருதிறத்தினும் பற்றுடை யாரை அடைதலன்றிப் பற்றற்றாரை அடையா. ஆதலால் முனிவர்களால் நீக்கப்பட்ட இவ்விருவகை விழைவே சார் பாகப்பற்றிய உள்ளத்தினால் துன்பக்கடலில் மூழ்கிக்கரை காணாமல் வருந்தினோர் எண்ணிலராவர்.

" தந்தை ஏவலால் மனைவியொடு கான்போந்து, அவளைப் பிரிதலாலே துன்பமுழந்தவன், வேதமுதல்வனாகிய நான்முக னைப் பயந்தவன் என்பதை நீ அறியாயோ? நளன் புட்கரனோடு சூதாடி அரசிழந்து, தன் மனைவியாகிய தமயந்தியுடன் கான் போந்து, காரிருளிற் பாழ்மண்டபத்திலே தன் கண்மணியனை யாளாகிய அவளைச் சோர்துயிலில் நீத்துச்சென்றான். அவன் அவளைப் பிரிந்து சென்றது பிறிதொன்றை விரும்பியன்று. அவளோ ஆசறுகற்பின் அருந்ததி. அங்ஙனமாகவும் அவன் அவளைப் பிரிந்ததற்குக்காரணம் அவனது முன்னைவல்வினையை யன்றி அம்மடந்தையின் குற்றமென்று சொல்லுதல் கூடு மோ? மனைவியொடு கான்போந்து துன்பமடைந்த வகையில்

நீயும் அவர்களை ஒத்தவனே ; ஆயினும் அவர்களைவிட உனக்கொரு நலமுண்டு. அவர்கள் மனைவியரைப் பிரிந்து வருந்தினார்கள். நீ நின்மனைவியைப் பிரியா வாழ்க்கை பெற்றாய். ஆதலால் நீ வருந்தற்க. இம்மூதூரினுட்சென்று சாவக நோன்பு புரிதற்கேற்ற இடத்தினை அறிந்து வருக ;" என்று கூறி அவனைத்தேற்றி யனுப்பினர்.

கோவலனுந்தேறிப் புறப்பட்டுக் கட்டுவேலி சூழ்ந்த காவற் காட்டோடு மதுரையைச் சூழ்ந்துள்ள அகழிக்குப் போக்குவரவின் பொருட்டு அமைக்கப்பட்டிருக்கும் சுருங்கை வீதியைக் கடந்து, வாள்கைக்கொண்டு நிற்கும் மதில் வாயிற் காவலர் தன்பால் ஐயங்கொள்ளாதபடி நகரினுட் புகுந்தான்.

அது முதுவேனிற் காலமாதலின் பிடிகளும், அவற்றோடு கூடியிருக்கும் கன்றுகளும் அவற்றைக் காக்கும் களிற்றினங்களும் நடுங்கும்படியாகவும், மலைநாடுகளிலுள்ள மூங்கிற் காடுகளில்தீப்பற்றிக் கொள்ளும்படியாகவும் வெய்யில் காலைமுதல் மாலைவரையில் வெகு கொடுமையாகக் காய்ந்து கொண்டிருந்தது. ஆதலால் கோவலன் சூரியனுடைய வெங்கதிர்கள் நுழையாதபடி சிறியனவும் பெரியனவுமாயடர்ந்துள்ள கொடிகளின் நிழலிலேயேசென்று, வட்டமாகிய மதிலாற் சூழப்பட்டு இந்திரனுடைய அருங்கலச்செப்பு வாய்திறந்திருப்பதுபோல் விளங்கும் அகநகரைச் சுற்றிப் பார்க்கலானான்.

அங்கு ஒருபால் இவ்வளவு என்று கணக்கிட்டுச் சொல்ல முடியாதபடி கொல்லாப்பண்டி, தேர்வட்டை, தேர்மொட்டு கவசம் முதலிய பல பொருள் நிரம்பியுள்ள அங்காடி வீதியிருந்தது. ஒருபுறம், பலவகை வைரங்களும், மரகதங்களும், பல

வகை மாணிக்கங்களும், புருடராகங்களும், வைடூரியங்களும், நீலமணிகளும், மஞ்சளும் சிவப்புமாகிய நிறங்கலந்த கோமேதகங்களும், சந்திரனையும், வெள்ளியையும், செவ்வாயையும் போல வெண்ணீர்மையும், செந்நீர்மையும் உடையனவாகிய பலவகை முத்தினங்களும், பலவகைப் பவழங்களுமாகிய மணிகள் நிரம்பிய இரத்தினக்கடை வீதிகள் காணப்பட்டன. ஒருபுடை, சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்னும் நால்வகையாகிய பொன்களையும், இந்தப் பொன் இவ்விடத்தி லுள்ளது என்பதைக் காட்டுதற்காகக் கட்டிய கொடிகளையு முடைய பொற்கடைத் தெருக்கள் விளங்கின. ஒருசார் நுண்ணிய பருத்தி நூலினாலும், எலிமயிரினாலும், பட்டினாலும் நெய்யப்பட்ட புடைவைகள் பொருந்திய புடைவைக் கடைகள் தோன்றின. ஓரிடத்தில் பதினாறு வகையாகிய கூலங்களை விற்கும் கூலக்கடைத் தெருக்கள் காணப்பட்டன. கோவலன், இங்ஙனமாகிய அந்த அகநகரின் காட்சிகளைக் கண்டுகளித்ததால், தான் வந்த காரியத்தை மறந்து, மீண்டு வந்து புறஞ்சேரியைச் சேர்ந்தனன்.

---

15. கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியினிடம் அடைக்கல மாக்கல்.

அங்ஙனமீண்டு வந்த கோவலன், கவுந்தியடிகளுக்கு மதுரையின் சிறப்பையும், பாண்டியனது கொற்றத்தையும் கூறலானான்.

'தலைச்செங்காடு' என்னும் ஊரினனும், நான்கு வேதங்களையும் நன்குணர்ந்தவனுமாகிய மாடலன் என்னும் மறை

யோன், பொதியமலைக்குச் சென்று, அதை வலங்கொண்டு, குமரியாற்றில் நீராடித் தன் ஊரைநோக்கிப் புறப்பட்டு வருகை யில், வழிவந்த இளைப்பினால் கவுந்தியடிகள் இருந்த பள்ளி யிடத்துச்சென்று தங்கினான். கோவலன் அவன் நண்பனாதலின் அவனைக்கண்டு உடனே சென்று வணங்கினான். மாடலன் அவனைக்கண்டு வியப்பெய்தி, "ஐய! நீ இங்கு வருதற்குக் காரணம் யாது? புகழின் மிக்க பெருங்குண வள்ளலே! நின் போல்வார்க்கு இத்துயரம் எய்துமதோ? மெல்லிய பூங்கொடி போலும் உள்ள இத்திருமகளுடன் நீ தனிவழி வந்திருத்தலை எண்ணி என் மனம் பெருந்துயருழக்கின்றது.

"அன்பனே! மாதவிக்கு அருமந்த மகள் பிறந்தனளாக வாலாமையாகிய நாட்கள் கழிந்தவுடன் மாமுது கணிகையர் கள் அம்மகவுக்குப் பெயரிடக்கருதி, அதற்கு வேண்டிய சடங்குகளைச் செய்கையில், நீ அவர்களை நோக்கி, முன் னாளிலே எங்கள் மூதாதையரில் ஒருவர் கலம் வறிக்கடலிடைச் சென்று கொண்டிருந்தனர். ஒரு நாள் நள்ளிரவில் அக்கப்பல் உடைந்துவிட்டது. முற்பிறப்பிற் செய்த புண்ணியத்தினாலே அப்போது அவர் கடலிலே நீந்திக் கொண்டிருந்தனர். அவர் முன் ஒரு தெய்வம் தோன்றி, 'யான் இத்தீவில் உள்ளவர்களை அரக்கர்கள் வருத்தாதபடி இந்திரனேவலாலே காத்துவரு கின்றவள். என் பெயர் மணிமேகலை என்பது; நின் துயர்கண்டு அதனைத் தீர்த்தற்கு வந்தேன். நீ அஞ்சற்க. நீ முற்பிறப்பிற் செய்த புண்ணியம் உன்னைவிட்டு நீங்காது. நீ இத்துன்பத்தி னீங்கி இக்கடலினின்று கரையேறுவாய்;' என்று கூறித் தன் விஞ்சையாலே ஓரிடத்திற் கொண்டுபோய் அவர் துயர்தீர்த் தது. அதுமுதல் அத்தெய்வத்தினை எங்குலதெய்வமாகக்

கொண்டு வணங்கி வருகின்றோம். ஆதலின், இம்மகவுக்கு அத்தெய்வத்தின் பெயரை இடுங்கள்;" என, அவர்களும் அவ்வாறே அம்மகவுக்கு அத்தெய்வத்தின பெயரை இட்டார்கள். நீ உடனே மாதவியுடன் ஏற்பார் பலர்க்கும் பொன்மாரி பொழிந்தனை. ஞானவரம்பு எனத்தகும் மறையோன் ஒருவன் அத்தானத்தைப் பெறவிரும்பித் தன் மூப்பால் தண்டினைக் காலாக வூன்றி வந்துகொண்டிருந்தான். அப்போது மதங்கொண்ட வேகயானை யொன்று பாகர்களை நீங்கி, எங்கணும் பறைகொட்ட வந்து, அவ்வந்தணனை வாரிக் கைக்கொண்டது. நீ உடனே அதன் அருகிற்சென்று, அதனை யதட்டி, உன் கையாலே அம்மறையவனை நீக்கி, அதன் கையிற்சேர்ந்து, அதன் கோட்டிலே அடங்கி, அக்கோட்டைப் பற்றுக் கோடாகக் கொண்டு ஏறி, அதன் பிடரியிலே குன்றினில் வீற்றிருக்கும் விஞ்சையன் என்ன வீற்றிருந்தனை.

" மற்றொருநாள் ஒரு பார்ப்பனி, தான் வளர்த்த கீரியைத் தன் குழந்தையைக் காக்க விட்டுத் தண்ணீர் கொண்டுவரச் சென்றனள். அப்பொழுது ஒரு பாம்பு அக்குழந்தையினருகில் வர, அந்நகுலன் அந்த அரவைத் துணித்துக் குருதிவாயுடன் அப்பார்ப்பனியை எதிர்நோக்கி வந்தது. அவ்வேளை நீர்க்குடத்துடன் அங்கு வந்த பார்ப்பனி, அந்நகுலன் வாயிற் குருதியைக்கண்டு, அது தன் மகவினைக் கொன்றுவிட்டதென் றெண்ணித் தண்ணீர்க் குடத்தை அதன் மேற்போட்டு அதனைக் கொன்றுவிட்டனள். அதனையுணர்ந்த அவள்கொழுநன், அதனால் எய்திய பாவந்தீரக் கங்கையாடுதற்கு வடதிசை நோக்கிப் புறப்பட்டனன். அதனைக்கண்ட பார்ப்பனி அவனைப்

பின் தொடர அவன் அவளை நோக்கி, 'நின்னுடன் வாழ்தல் எனக்கு ஏற்றதன்று. வடமொழி எழுதிய இவ்வேட்டினை வடமொழி வல்லார் கைக்கொடு,' என்று வடமொழிக் கவியொன்றெழுதிய அவ்வேட்டை அவள் கையிற் கொடுத்துச்சென்றான். அவள் அதனைக் கையிலேந்திப் பல தெருக்களிலுஞ்சென்று, 'கருமக் கழிபலங் கொண்மின்,' என்று கூவித்திரிய, நீ அவளை அழைத்து, அவளுற்றதுயரை வினவி யறிந்து, அவ்வேட்டைப் பெற்று, அதிலுள்ள கவியைப்படித்து, அதன் பொருளை யுணர்ந்து, அப்பார்ப்பனியின் கொலைப்பாவம் நீங்குதற்குத் தானம்புரிந்து காட்டுவழிச் சென்றவனாகிய அவள் கொழுநனை யுந்தேடி அவளுடன்சேர்த்து, அவர்கள் வறுமையினீங்க மிக்க பொருளையுந் தந்தருளினையே.

"வேறொரு நாள் அறிவிலான் ஒருவன், ஒரு பத்தினிமீது பொய்ப்பழி யெய்துவித்தற்பொருட்டு அவள் கணவனுக்குப் பொய்ச்சான்று கூறினான். அறநெறியினின்று தப்பினவர்களைப் புடைத்துண்ணும் பூதம் அவனைப் பற்றிக்கொண்டது. அதனால் அவன் தாய் அடைந்த சொல்லற்கரிய துயரத்தைக் கண்டு, நீ அப்பூதத்தினிடஞ் சென்று, 'பூதநாதனே! என்னுயிரைக்கொண்டு இவனுயிரைத் தருவாயாக,' என்றிரந்தனை. அதைக்கேட்ட பூதம்,

'நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை,

ஆதலின் நின்கருத்தை யொழிப்பாயாக;' என்று நின்முன்னாகவே அவனைப் புடைத்து விழுங்கிற்றாக; அதனால் நீமனம் வருந்திப்போந்து அவனுடைய தாயையும், நெருங்கிய சுற்றத்தாரையும் பசிப்பிணி நீக்கிப் பல்லாண்டு காத்தனையே!

கவுந்தியடிகள் கண்ணகியை மாதரியினிடம் அடைக்கலமாக்கல்.

"யானறிய நீ இப்பிறப்பிற் செய்தனவெல்லாம் நல்வினையேயாகவும், இம்மாணிக்கக் கொழுந்துடன் நீ யிங்குத் தனியே வந்து துன்புற்றது முற்பிறப்பிற் செய்த தீவினைப் பயனோ?" என்று கூறி வருந்தினான்.

கோவலன் மாடலனை நோக்கி, "அன்புடையீர்! இப் பொலி மலர்க்கூந்தலாள் இந்நகரில் ஒரு கீழ்மகனால் நடுங்கு துயர் எய்த, யான் கடாவின்மேல் ஏறினாற்போலவும், பிறகு யானிவ்வாயிழையுடன் பற்றற்றோர் பெறும் பேற்றைப் பெற்றாற்போலவும், மாதவி, மணிமேகலையைப் போதியறவோனிடத்தே யளித்தாற்போலவும், முந்தை நாள் நான்காம் யாமத்தில் ஒரு கனாக்கண்டேன். அது வைகறையாமத்துக் கண்ட கனவாதலின் விரைந்து பலிக்கும் எனத் தோன்றுகின்றது;" என்றான்.

அப்போது கவுந்தியடிகளும், மாடலனும், "துறவறத்தார்க்கன்றி இல்லறத்தார்க்குப் புறஞ்சிறையிருக்கை பொருந்தாது. அகநகரினுள் உறையும் வணிகர்கள் உன்னை மாசாத்துவான் மகன் என்றறியின் உடனே எதிர்கொண்டேற்று உபசரிப்பார்கள். ஆதலின் நீ நகரினுட் செல்க;" என்று சொல்லினர்.

அங்ஙனஞ் சொல்லுகையில் ஆயர் குலத்திற் பிறந்தவளாகிய மாதரி என்னுமோர் முதுமகள், இயக்கிக்குப் பாற்சோற்றை நிவேதித்து வருகையில் புறமதிற் பள்ளியிலிருந்த கவுந்தியடிகளைக்கண்டு அடி வணங்கினாள்.

அவளைக்கண்ட கவுந்தியடிகள், “ஆனினங்காத்து அவற்றின்பயனை யாவர்க்கும் அளிக்கும் இந்த இடையருடைய இல்வாழ்க்கையில் கொடுமை சிறிதுமில்லை. அதுவுமன்றி இவள் முதியள்; ஔவியமில்லாதவள்; அருளுமுடையளாய்க் காணப்படுகின்றாள். ஆதலின், இம்மடந்தையை இவளிடத்தில் அடைக்கலமாக வைப்பதில் வரும் தீங்கு யாதுமில்லை;” என்று தம்மனத்திலெண்ணி, “மாதரி, கேளாய். இந்நங்கை தன் கணவனுடைய தந்தையின் பெயரை இந்நகரில் வாழும் வணிகர்கள் கேட்கின் பெறுதற்கரிய பொருளைப் பெற்றாரைப்போல மகிழ்வெய்தி இவளுடன் இவள் கொழுநனை எதிர்கொண்டழைத்துச் சென்று, காவல் பொருந்திய தங்கள் மனையகத்து வைத்துக் கொள்வார்கள். அது வரையினும் இம்மாதரசியை உன் கையில் அடைக்கலமாகத் தருகின்றேன். இவளை நீ மங்கல நீராட்டி, இவளது கயல்போலும் நெடிய கண்களுக்கு அஞ்சனம் எழுதி, இவளது கரிய கூந்தலில் மலரைச்சூடி, இவளுக்குத் தூய மடிப்புடைவையுடுத்து, ஆயமகளிரும், செவிலித்தாயரும், நற்றாயும் நீயேயாகியிருந்து இவளைக் காப்பாயாக. இப்படித் துயருறுதற்கு என்னோடு வந்த இந்நங்கையின் சீறடியை முன்பு மண்மகள் கண்டறியாள். இவள் கதிரின் வெம்மையால் தன் கொழுநன் மெய்வருந்தியதென்று நடுங்கித் துயரமுற்று, நாவும் புலரும்படி வாடித் தன் துயரென்று வேறு காணாத பூங்கொடி.

“கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்.
வானம் பொய்யாது; வளம்பிழைப் பறியாது;
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது;

அடைக்கலமாக்கல்.

பத்தினிப் பெண்டிர் இருந்தநா டென்னும்
அத்தகு நல்லுரை அறியாயோ நீ?"

" தவத்தினர்கள் கொடுத்த அடைக்கலம் முன்பு சிறிதாயிருப்பினும் பின்பது பேரின்பத்தைத் தருவதாகும். அதற்கு ஒரு கதை கூறுகின்றேன்; கேள்.

" முன்பொரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்திலே ஆதித்தன் சாயச் சாயாத நிழலையுடைய அசோகமரத்தினடியில் சாவகர்கள் ஒருங்குகூடியிட்ட சிலாதலத்தின்மீது, சாரணர்கள் இருந்து தருமோபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள்முன்பு அழகிய மேனியை யுடையவனும் தாரையும் பூணையும் அணிந்தவனும், தேவர்களும் தொழும் படியான தன்மையை யுடையவனும் ஆகிய தேவன் ஒருவன் வந்து நின்றான். அவனது ஒருபக்கத்துக் கைக் கருவிரற் குரங்கின் கையாக இருந்தது. அவனைக்கண்ட சாவகரெல்லாரும் அச்சாரணரைத் தொழுது, இங்ஙனம் வந்த இவன் வரவிற்குக் காரணம் யாதென்று கேட்டார்கள்.

" அதைக்கேட்ட சாரணர் ஒருவர், 'எட்டி என்னும் பட்டம் பெற்ற சாயலன் என்னும் ஒரு வணிகன்மனைவி, ஒரு மாதவனை எதிர்கொண்டழைத்து, உண்டியளித்து, உபசரித்துக் கொண்டிருந்தாள். அப்போது ஊரரால் துரத்தப் பட்டு உணவு பெறாமல் அலைந்து கொண்டிருந்த ஒரு குரங்கு அம்மனைக்குள் அச்சத்தோடு ஒதுங்கிவந்து, அம்முனிவனது திருவடிகளை வணங்கி, அவன் உண்டொழிந்த அன்னத்தையும், அவன் கைகழுவிய நீரையும் சிறிதருந்தி, அம்முனிவன்

முகத்தை நோக்கியது. அவ்வறிவன் அதைக்கண்டு மகிழ்ந்து, அவ்வில்லக்கிழத்தியை நோக்கி, 'நீ நின் மக்களுடன் இதனையும் வைத்துக் காப்பாயாக,' என்று கூறினன். அவளும் அவ்வறிவனாற் கூறப்பட்ட மொழியைக் கடவாமல் அதனை அன்புடன் பேணிவந்தாள். அது சிலகாலஞ்சென்று மரித்தது. அப்போது அந் நல்லறச்செல்வி, தன்செல்வத்திலே ஒரு கூற்றை, 'அதன் இழிபிறப்பொழிக,' என்று தானஞ்செய்தாள். அதனால் அக் குரங்கு, மத்திமதேசத்தில் வாரணாசி என்னும் நகரில், 'உத்தர கௌத்தன்,' என்னும் அரசனுக்கு அழகிற் சிறந்த மகனாய்த் தோன்றி, அறிவிற் சிறந்து விளங்கிப் பல தானங்களைப் புரிந்து, முப்பத்திரண்டாண்டுகள் இவ்வவனியை யாண்டு, பின்பு தெய்வயாக்கை பெற்றது. அஃதே இத்தேவகுமரன். இவன், "நானடைந்த இப்பெரும்பயன் முழுதும் சாயலன் மனையாள் தலைநாளிற் செய்த தானத்தாலானதே. நீங்கள் இதைஅறிமின்கள்;" என்று உங்களுக்குத் தன் வரலாற்றை உணர்த்துதற் பொருட்டே இக்குரங்குக் கையுடன் வந்திருக்கின்றான்;" என்றனர்.

"அதைக்கேட்டு அச்சாவகர்களும், தவசிகளும், எட்டியும் அவன் மனைவியும் அறநெறியில் அமைந்து நின்று, அழியாத இன்பத்ததாகிய வீட்டுலகை யடைந்தார்கள்; நீ அரும் பெறற் கற்பின் இந்நங்கையினைப் பொழுது செல்லுமளவு நீட்டித்து இவ்விடத்திராமல் அழைத்துச் செல்லுக;" என்று கூறியருளினார்.

மாதரி, அவ்வாறே கோவலனுடன் கண்ணகியை அழைத்துக்கொண்டு, கண்ணகியின் அழகைக்கண்டு சூழ்ந்த இடையர்

களோடு சூரியனுடைய கதிர்கள் சுருங்கிய மாலைவேளையில் பாண்டியனது வெற்றிக் கொடிகள் அசையும் மதிலைக் கடந்து, தனது மனையை யடைந்தாள்.

16-வது கோவலன் கொல்லப்படுதல்.

பெறுதற்கரிய பாவைபோல்வாளாகிய கண்ணகியைக் கவுந்தியடிகளால் அடைக்கலமாகக் கொடுக்கப்பெற்ற மாதரி, உவகைபூத்துக் கண்ணகியையும், கோவலனையும் இடையர்கள் வீட்டிலே இருத்தாமல் கட்டு வேலியாகிய காவலையும், குளிர்ந்த பந்தலையுமுடையதும், சிறந்த செம்மண் பூசப் பெற்றதுமாகிய ஒருமனையிலிருத்திச் சில ஆய்ச்சியருடன் கண்ணகியைப் புதுநீரால் மஞ்சனமாட்டி, அக்கற்புக்கரசியை நோக்கி, "இக்கூடல் மாநகரிலுள்ள மகளிர் அருவிலைப் பூண்களினாற் செய்துகொள்ளும் அழகு தோற்கும்படி இயற்கை யழகுடன் வந்த நீர், 'நமக்குத் தோழி இல்லையே,' என்று கருதுதல் வேண்டா. என்மகள் ஐயை, உம்முடைய அடித்தொழிலாட்டியாவாள். உம்மை நான் பொன்போல் போற்றுவேன். கவுந்தியடிகள் தீங்குள்ள நெறிகளில் ஒரு தீங்கும் உறுதபடி உங்களைக் காத்து, வருத்தஞ் சிறிது மில்லாத இடத்திற் சேர்ப்பித்தாராதலால் இனி நும் கொழுநருக்குத் தீங்கொன்று மணுகாது. ஆதலின், நீர் இனிக்கவலாது இருப்பீராக," என்று கூறினள். பிறகு கோவலனைச் சுட்டி, "இவ்வடிகள் சாவக நோன்பினராதலின் பகற் பொழுது மாத்திரமே உண்பர். கண்ணகியாரும், அவர்தம் நாத்துண் நங்கையாகிய ஐயையும்

நாள்தோறும் அடிகளுக்கு அடிசில் சமைத்தற்குரிய புதிய கலங்களை விரைவிற்கொண்டுவந்து கொடுப்பார்களாக," என்று சொல்லினள்.

உடனே ஐயை முதலிய இடைச்சியர், பூவாமற் காய்க்கும் பலாக்காய், வெள்ளரிக்காய், கொம்மட்டி மாதுளங்காய், மாங்கனி, வாழைக்கனி, செந்நெல்லரிசியாகிய இவற்றையும், தம்மிடத்துள்ள பாலையும், நெய்யையும் கொண்டுவந்து கண்ணகியினிடம் கொடுத்தார்கள். அங்ஙனம் அவர்கள் கொடுத்த காய்களைக் கண்ணகி மெல்விரல்களும், கண்களும் சேப்பவும், மதியிடைப் பனியரும்பினாற்போல் முகத்தில் வெயர்வரும்பவும் அரிந்தனள். ஐயை வைக்கோலினால் எரியூட்டினள். கண்ணகி அவளுடன்கூடி, முன்னம் பல்காலும் ஆக்கிக் கைதேறினவள் போலத் தன் கொழுநனுக்கு உணவை ஆக்கினள்.

கைவன்மையால் ஒருத்தி நன்கு முடைந்த தடுக்கில் கோவலன் வந்து வீற்றிருந்தான். உடனே கண்ணகி, புதிய மட்பாண்டத்து நீரினால் அவனடிகளைக் கழுவி, அந்நீரைத் தொழுது ஊற்றிவிட்டு, நிலமகளது மயக்கத்தை ஒழிப்பாளைப் போலக் குளிர்ந்த நீரைத் தெளித்து மண்டலமாக மெழுகித் தாறுவிடாத இள வாழையின் குருத்திலையை விரித்து, அதில் அமுதையிட்டு, 'அடிகள் அமுதுசெய்தருள்க,' என்று வேண்டினள்.

கோவலன் வணிகர்க்கென மறையில் விதித்த வாய்பூச்சு, பலியிடுதல் முதலியவற்றை யெல்லாம் முறையாகச் செய்து முடித்து, அவ்வுண்டியை உண்ணலானான். அப்போது புறத்து

நின்று அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்த மாதரியும், ஐயையும், 'இந்நம்பி, அம்மதுரையில் ஆயர்பாடியில் யசோதையளித்த அமுதத்தை உண்ட காயாம்பூ வண்ணனாகிய கண்ணனே. இந்நங்கை, காளிந்தி யாற்றின் கரையில் அந்நீலவண்ணனது களர்ச்சியைப் போக்கிய நப்பின்னைப் பிராட்டியே இவர்களழகு நம் கண்ணிலடங்காது,' என்று அவர்களைப் புகழ்ந்தார்கள்.

இங்ஙனம் புகழ உண்டு இனிதிருந்த கோவலன், கற்பரசியாகிய கண்ணகியை, 'வருக' என அருகிலழைத்து, மெய்ம்முழுதுந் தடவி, "நாணின்பாவாய்! எம்முடைய முதுகுரவர்கள், 'பருக்கைக்கற்கள் பொருந்திய அருநெறியிலே செல்ல வல்லுனகொல்லோ மடந்தையின் சீறடி?' என்று கொடுஞ்சின எயினர்கள் ஆறலைக்கும் வெவ்விய சுரத்து வழியிலே நீ என்னுடன் போந்ததற்காக இரங்கி, எத்தகைய இடும்பையை எய்தினர்களோ? நாம் இங்கு வந்தது கனவோ? நனவாயின் இது முன்செய்த தீவினைப்பயனே யாதல்வேண்டும். யான் உள்ளங் கலங்கி யிருக்கின்றேனாதலின் இவற்றுள் ஒன்றையும் அறிகின்றிலேன். வெற்றுரையாளரோடும், பரத்தையரோடுங் கூடிப் புறங்கூறுவார் அவையிலே வெடிசிரிப்புக் குட்பட்டிருந்து நல்லொழுக்கத்தைக் கெடுத்த எனக்குத் தீக்கதியன்றி நற்கதி யுண்டாமோ? அன்றியும் இருமுது குரவர்க்கும் செய்யவேண்டிய பணிகளையும் விட்டொழித்தேன். உனக்குஞ் சிறுமை யுண்டுபண்ணினேன். இத்தகைய பல கொடுமைகளை யான் புரிந்திருந்தும், நீ, 'என்னுடன் வருக,' என்று கூறியவுடன், 'அது முறைமை யன்று,' எனமறுக்காமல், அன்று மலர்ந்த தாமரையைப் போன்ற முகமலர்ச்சி

யோடு என்னுடன் வந்துவிட்டனையே. நீ என்ன கருமஞ்செய் தாய்?" என்று இரங்கிக் கூறினான்.

கண்ணகி, "ஐய! நீர் பிரிந்தமையால், அறவோர்க்களித்தல் முதலிய இல்லறத் தொண்டுகளையிழந்து வருந்தியிருந்த என்னைத் தேற்றும் பொருட்டு உமது இருமுது குரவர்களாகிய பெருமனைக்கிழத்தியும், இருநிதிக் கிழவரும் வந்து கண்டார்கள். அப்போது யான் என் துயரை அவர்களுக்குக் காட்டாமல் மறைத்து முகமலர்ச்சியைக் காட்டினேன். அவர்கள் அது தெரிந்து அன்பும், அருளும் கலந்த மொழிகளால் என் பொறுமையைப் பாராட்டிக்கூறினார்கள். யான் என் உள்ளத்தில் மறைத்த கவலையும், வருத்தமும் வாய்திறந்து பேசுதல்போன்ற புன்முறுவலைக் காட்டினேன். அவர்கள் என் பொய்ம்முறுவலைக்கண்டு மிகவும் வருந்தினார்கள். இங்ஙனம் அவர்கள் வருந்தும்படியாகத் தேவரீர் போற்றாவொழுக்கங் கொண்டீராயினும் யான்தேவரீர் சொல்லைச் சிறிதும் மறுக்காத மன உறுதியை யுடையேன். ஆதலின், அதற்கு உடன்பட்டுத் தேவரீருடன் வந்தேன்;" என்று கூறினள்.

அம்மொழிகளைக் கேட்டவுடன் கோவலனுக்குக் கண்களில் நீர் வார்ந்தன. மெய்ம்மயிர் சிலிர்த்தன. அனலிலிட்ட மெழுகெனமனங்கரைந்தது. அப்போது அவன், "தாய்தந்தை முதலிய சுற்றத்தினரையும், ஏவன் மகளிரையும், செவிலித் தாய்மார்களையும், ஆயத்தாரையும்விட்டு, நாணமும், மடனும், நல்லோர்கள் புகழும் அழகும், கற்புமாகிய இந்நான்கினையுமே துணையாகக்கொண்டு என்னுடன் போந்து, என் தனிமையைத் தீர்த்த,

பொன்னே ! கொடியே ! புனைபூங்கோதாய் !
நாணின் பாவாய் ! நீணில விளக்கே !
கற்பின் கொழுந்தே ! பொற்பின் செல்வி !

யான் நின் சீறடிகளுக்கு அணியாகிய சிலம்புகளில் ஒன்றைக் கொண்டுபோய் விற்றுவருகின்றேன். யான் வருந்துணையும் நீ தனிமையால் வருந்தாமலிரு;" என்று அவள் மனந்தேறுதற் குரிய இனிய மொழிகளைக்கூறி, அவளை மீண்டும் மெய்ம்முழு துந்தழுவி, அவள் தன் அருகில் யாவரும் இன்றி இருத்தலைக் கண்டு மனமிக வெதும்பி, அதனால் தன் கண்களிலே பெருகிய நீரை அவள் காணுகபடி மறைத்துக்கொண்டு, பலபசுக்களையும் பல எருமைகளையும் உடைய கோவலரில்லத்தைவிட்டுப் புறப் பட்டு, அவளைப்பிரியும் வருத்தத்தினாலே நடக்கமாட்டாமல் நடந்து தெருவிற் சென்றான்.

கோவலன் இங்ஙனஞ் செல்கையில் ஓர் இமிலேறு அவனைப் பாயவந்தது. அவன் அது தீ நிமித்தம் என்பதுணரா மல் பல தெருக்களையுங் கடந்து, கடைத்தெருவிற் செல்கை யில், உருக்குத் தட்டாரும், பணித்தட்டாருமாகிய நூற்றுவர் கொல்லர் பின்வர அரசவரிசையாகிய சட்டையை அணிந்து, பிரம்பைக் கைப்பற்றி ஒதுங்கிச்செல்லும் ஒரு கொல்லனைக் கண்டான். கண்டவன், 'இவன் பாண்டியனால் வரிசைபெற்ற கொல்லன் போலும்,' என்று கருதி, அவனருகிற்சென்று, "அர சன் தேவிக்கு ஏற்றதொரு சிலம்பினை நீ விலை மதிக்கவல்லை யோ?" என்று கேட்டான்.

கூற்றுவன்றன் தூதனைப்போல வந்த அக்கொல்லன், 'அடியேன் மகளிர் அடிகளிலணியும் கலன்களை விலைமதிக்க

அறியேன். ஆயினும், அரசனுக்கு முடிமுதலிய கலன்செய்து கொடுக்கும் இயல்பினேன்,' என்று வணங்கிக் கூறினான். கோவலன், அச்சிலம்பினைப் பொதிந்த மூட்டையை அவிழ்த்துக்காட்டக் கொல்லன், தலைமையான மாணிக்கமும் வயிரம் வரிசையாகப் பதித்த வேலைமும் சுற்றும் சித்திரத்தொழிலு முடையதும், கிளிச்சிறை என்னும் பொன்னாற்செய்யப்பட்டது மாகிய அச்சிலம்பை நோக்கினான். நோக்கின உடன் அவன் கண்கள், அச்சிலம்பின் சித்திரத்தொழிலையே நோக்கின. அவன் மனம் தீதொன்று நினைத்தது.

பிறகு கொல்லன், கோவலனை நோக்கி, 'பெருந்தகையீர்! இச்சிலம்பு அரசன் தேவிக்கல்லது பிறருக்கேற்றதன்று. யான் சென்று வேந்தனுக்கு இதனை உணர்த்தி வருமளவும் நீர் என் சிறுகுடிலில் இருப்பீராக,' எனக் கோவலனுஞ்சென்று அக் கொல்லனது புன்குடிலுக்கு அயலதாகிய ஒரு கோயிலில்தங்கி, அவன் வரவை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான்.

உடனே கொல்லன், 'முன்பு யான் அரசனிடமிருந்து வஞ்சித்துக்கொண்ட சிலம்பு என்னிடமிருப்பதைப் பிறர் அறிதற்குமுன், புறநாட்டானாகிய இப்புதியவன்மேல் அக்களவை ஏற்றி விடக்கடவேன்,' என்று துணிந்து, அரண்மனையை நோக்கிச் சென்றான். அப்போது, 'அரசன் நாடகமகளி ருடைய ஆடல் பாடல்களைக்கண்டு, அவற்றில் மிகவுமயங்கி னன்,' என்று கருதி, அரசனுடையதேவி ஊடலுற்றுத் தன் கோயிலுக்குச்சென்றுவிட, அரசன் அத்தேவியின்பால் பேரன் புடையனாதலின் அத்தேவியின் ஊடலைத் தீர்த்தற்பொருட்டு அவள் கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தான்.

கொல்லன், அங்ஙனஞ் செல்கின்ற அரசனைக் கடிமனை வாயிலிற் கண்டு அவனை வணங்கி, "மன்னர் மன்னரே! கன்னக் கோலும், கவைக்கோலும் இல்லாமலே மந்திர வலியினால் வாயிற் காவலரை மயக்கித் தேவியின் காற்சிலம்பைக் கவர்ந்த கள்வன், இவ்வூர் காப்பாளர் கண்களுக்கு அகப்படாமல் வந்து, அடியேன் சிறுகுடிலில் இருக்கின்றான்;" என்று கூறினான். அதனைக்காவலன், தன் வினை விளையுங் காலமாதலின் சிறிதும் ஆராயாமல் ஊர் காப்பாளரை அழைத்து, 'என் தேவியின் காற் சிலம்பு, இவன் கூறிய கள்வன் கையிலிருப்பின் அவனைக் கொன்று அச்சிலம்பினை இங்குக் கொணர்வீர்களாக,' என்று கட்டளை இட்டான்.

கொல்லன் தன் எண்ணம் பலித்ததெனக் மகிழ்ந்து, அரச னால் ஏவப்பட்ட காவலருடன், முன்னைத் தீவினையாகிய வலைக் குள் அகப்பட்டிருந்த கோவலனருகிற் சென்றான். அத்தீ யோன் கோவலனை நோக்கி, 'அரசன் ஏவலால் இவர்கள் சிலம் பைக் காண வந்திருக்கின்றார்கள். இவர்களுக்கு அதனைக் காட்டுவீராக,' என்று கூறி, அதனைக் கோவலன் கொடுக்கப் பெற்று, அக்காவலருடன் ஒருபுறஞ் சென்று ஒதுங்கி, அரசன் கோயிலிலுள்ள சிலம்பிற்கும் அதற்குமுள்ள ஒற்றுமைகளை எல்லாம் எடுத்து அவர்களுக்குக் கூறினான்.

அக்காவலர்களுள் அறிவிற் சிறந்தவர்களாகிய சிலர், 'இவன் இலக்கணத்தாலும், இருக்கும் முறைமையாலும் கள்வனென்று சொல்லப்படுதற்கும், கொல்லப்படுதற்கும் உரியவனாகக் காணப் பட்டிலன்,' என்றனர். அதனைக் கேட்ட வஞ்ச நெஞ்சனாகிய கொல்லன், 'காவலர்களே! களவுத் தொழிலை யுடையவர்கள்


மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்னும் எட்டினையும் படையாகக் கொண்டு திரிவார்கள். ஆதலால் இவனைக் கொல்லாமல் இவனுடைய மருந்தின் வாய்ப்பட்டீர்களாயின் மன்னனாற் கொல்லப்பட்டீர்கள். (1) இவர்கள் மந்திரத்தை நாவினிடத்தே உருப்போடுவார்களாயின் தேவர்களைப் போலக் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்து விடுவார்கள். (2) தம் தெய்வத்தை நினைப்பார்களாயின் தமது கையிலகப்பட்ட பொருளை நமக்குக் காட்டியுந் தப்பிப்போவார்கள். (3) மருந்தினாலே நம்மை மயக்குவார்களாயின் நாம் இருந்த இடத்தை விட்டுப் பெயர மாட்டோம். (4) நல்லசகுனம் வாய்க்காவிடின் பெறுதற்கரிய பொருள் தானேவந்து கைப்புகினுங் கொள்ளார்கள். (5) களவு நூலிற் சொல்லிய தந்திரங்களை எண்ணிச் செய்வார்களாயின் விண்ணுலகத்திலுள்ள இந்திரன் மார்பின் ஆரத்தையுங் கொள்வார்கள். (6) இப்பொருளைக் கொள்ளுதற்கு இவ்விடமே தக்கதெனத் துணிவார்களாயின் அவ்விடத்து அவர்களை யார் காணவல்லார்? (7) அவர்கள் களவு செய்தற்குரிய காலம் இதுவென அறிந்து, பொருளைக் கைப்பற்றுவார்களாயின் மேலோர்களாலும் அவர்களை விலக்க முடியாது. (8) கருவிகளைக் கொண்டு பொருள்களைக் கைக்கொள்ளுவார்களாயின் அவர்கள் களவாடுதலை ஒருவராலும் அறிய முடியாது. அவர்களுக்குப் பகலும், இரவும் ஒன்றே. அவர்கள் திறத்தை ஒருவராலும் சொல்லி முடித்தல் முடியாது. ஒருமுறை இந்நகரிலே நடந்த வியப்பைச் சொல்லுகின்றேன், கேளுங்கள்:

"முன்னொருநாள் ஒரு கள்வன், தூதர் உருக்கொண்டு வந்து, மன்னன் வாயிலிற் பகற்பொழுதிருந்து, இராப்பொழுது

மாதருருக்கொண்டு உள்புகுந்து, விளக்கு நிழலிலே பள்ளியறையினுள் அஞ்சாமற் சென்று, அங்கடங்கி, இம்மன்னனுடைய இளவலாகிய வேந்தன் துயில்கையில் அவன் மார்பிலிருந்த ஆரத்தை விரைவாக வாங்கினான். அதனால் அவ்விளங்கோ, துயிலுணர்ந்து, மார்பில் ஆரத்தைக் காணமல் தன் கைவாளை உருவினான். கள்வன் அவ்வாளின் உறையைத் தந்திரமாக எடுத்துக்கொண்டு வேந்தன் குத்துந்தோறும் வாளிலே உறையைச் செறித்தான். அதனால் வேந்தன் சினமிகுந்து, அவனுடன் மற்போர் புரியத் தொடங்கினான். அக்கள்வன் ஆண்டு நின்றதொரு தூணைத் தானாகக் காட்டி மறைந்து போய்விட்டான். அவனை இதுகாறும் கண்டு பிடித்தவர்கள் இருப்பார்களாயின் எனக்குக் காட்டுவீர்களாக;" என்று கருந்தொழிற் கொல்லன் சொல்லினான்.

அக்காவலர்களில் இளைஞனாகிய ஒருவன், "முன்னொருநாள் ஊரெல்லாந் துயில்கொண்ட நள்ளிரவிலே நான் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். கவ்வின ஊனை விடாத புலி போன்றவனும், நீலநிறத்தை உடையவனுமாகிய ஒரு திருடன், உளியைக் கையிற் பற்றிக்கொண்டு வந்தான். நான் துயிலுணர்ந்து வாளை உருவினேன். அவன் என் கையினின்று வாளைப் பறித்துக்கொண்டு மாயமாக மறைந்து போயினான். அவனை இன்றளவும் எவ்விடத்துங் கண்டிலேன்; ஆதலால் இவர் செய்கை யாவற்கும் அறிவரிது; இவனை நாம் நெகிழவிடின், அரசன் நம்மை வருத்தும்;" என்றான்.

"இங்ஙனம் அவன் கூறியதைக் கேட்ட அக்காவலர்களுள் அறிவில்லாதவனும், கொலையஞ்சாதவனுமாகிய ஒரு களிமகன் தன் கைவாளால் கோவலனை வெட்டினான். அந்தோ!



அந்தோ!! நன்னெறியாளன், நற்றவக்கொழுந்து, முன்னை வல்வினை மூண்டதனாலே வெட்டுண்டு மண்ணிற் சாய்ந்து, குருதி வெள்ளத்திலே மூழ்கி உயிர் துறந்தான்.

---

17. ஆய்ச்சியர் குரவையாடுதல்.

வெற்றியிற் சிறந்த பாண்டியனுடைய அரண்மனையிலே காலையில் பள்ளியெழுச்சிமணி ஒலித்தது. மாதரி அதைக் கேட்டு, அன்று தனக்கு அரமனையில் நெய் அளக்குமுறையாதலை நினைத்துக் கடைகயிறும் மத்தும் கொண்டு, தன் மகள் ஐயையை உடன் அழைத்துக்கொண்டு, தயிர்த்தாழி இருந்த இடத்திற்குச்சென்றாள். சென்றவள், ஐயையை நோக்கி, "நங்காய்! பிரையிட்ட தாழிகளில் பால் தோய்ந்தில. விடைகளின் கண்களில் நீர்த்துளிகள் உகுகின்றன. பால் தோயாமையால் முதல் நாள் உருகவைத்த வெண்ணெயும் உருகவில்லை. ஆட்டு மறிகள் துள்ளி விளையாடாமல் குழைந்து கிடக்கின்றன. பசுக்கள் மெய்ந்நடுங்கி அரற்றுகின்றன. அன்றியும் அவற்றின் கழுத்திற்கட்டியுள்ள மணிகளும் விழுகின்றன. இவைகள் நமக்கு வருவதொரு துன்பமுண்டென்பதைக் குறிக்கின்றன; ஆயினும் நீ அஞ்சற்க. முன்னர் ஆயர்பாடியில் கண்ணன் தன் தமயனாகிய பலராமனோடு ஆடிய பாலசரித நாடகங்கள் பலவுள. அவற்றுள் கண்ணன், வேல்நெடுங் கண்ணியாகிய நப்பின்னையோடு ஆடிய, குரவைக்கூத்தைக் கண்ணகி காண நாம் ஆடுவோம். இக்கறவைகளும், கன்றுகளும் பிணிநீங்குக," என்று கூறினாள். பின்னும் மாதரி, "நப்பின்னையின் தோழியர்களாகிய ஏழு மாதர்கள் ஏழு ஏறுகளைவளர்த்தார்கள். அவ்வேறுகளின் வலியடக்கி, அவற்றை ஏறிச் செலுத்துகின்றவனுக்கே நப்

பின்னை உரியவளாவளென்று அவர்கள் கருதினார்கள். இப்பொழுது ஆய்மகளிர் எழுவரை அவ்வேழுகன்னியர்களாக நிறுத்தி, நாம் குரவையாடுவோம்," என்றுகூறி, அவ்வாறே ஏழு கன்னியர்களைத் தேர்ந்தெடுத்துநிறுத்தி, அவர்களுக்குக் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பழைய யாழ் நரம்புகளின் பெயரிட்டாள். குரல் நரம்பாக நின்ற பெண்ணை மாயவன் என்றாள்; இளி நரம்பாக நின்றவளைப் பலராமன் என்றாள். துத்தமாக நின்ற நங்கையை நப்பின்னை என்றாள்.

துத்தமும், தாரமுமாகிய பெண்கள் மாயவனாகிய குரலைச் சேர நின்றார்கள். உழையும், விளரியுமாகிய பெண்கள் பலராமனாகிய இளியைச்சேர நின்றார்கள். கைக்கிளையாகிய பெண், பின்னைக்கு இடப்பக்கத்து நின்றாள். தாரமாகியபெண் விளரிக்கு இடப்பக்கத்தில் நின்றாள்.

பின்பு மாதரி, மாயவனாக நிறுத்தப்பட்டவள்மேல் துழாய் மாலையை இட்டுக் 'கண்ணனுக்கு உகப்பானவள் பின்னையேயாம்,' என்று வியந்தனள். பிறகு அப்பெண்கள் முறைப்படி கைகோத்துக்கொண்டு, குரவையாடத்தொடங்கி,

" கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம்ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ !

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ !

கொல்லையஞ் சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!"

என்று புகழ்ந்து பாடி ஆடினார்கள்.

அவற்றைக்கண்ட மாதரி, "கோவலருடைய சிறுமியர்கள் கண்ணனோடும், அவன் தமயனோடும், நப்பின்னையினோடும் துவாரகாபதியிலே, எருமன்றத்திலே, யசோதை புகழ்ந்தேத்த ஆடிய குரவைக்கூத்து மிகவும் பெருமையுடையதே," என்று புகழ்ந்தாள். பிறகு குரவைக் கூத்தாடிய பெண்கள்,

"அறுபொருள் இவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றியே யுலகடைய உண்டனையே
உண்டவாய் களவினான் உறிவெண்ணெய் உண்டவாய்
வண்டுழாய் மாலையாய்! மாயமோ மருட்கைத்தே."

என்று முன்னிலைப் பரவலாகவும்,

"மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றத்
தொடர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே."

எனப்படர்க்கைப் பரவலாகவும் கண்ணனை ஏத்திக் 'குரவைக் கூத்தில் நம்மால் ஏத்தப்பட்ட தெய்வம் நம் ஆக்களுக்குண்டான பிணிகளைத் தீர்ப்பதாக; நம்மன்னர் மன்னனாகிய பாண்டியனது வெற்றிமுரசம் என்றும் முழங்குவதாக;' என்று வாழ்த்திக் குரவைக்கூத்தை ஆடி முடித்தார்கள்.

18. கோவலன் இறந்ததைக்கேட்ட கண்ணகி துயருற்றிரங்கல்.

இங்ஙனம் அவர்கள் ஆடிய குரவைக்கூத்து முடிந்தவுடன், நெடுமாலடியைப் பூ முதலியவற்றைத்தூவி ஏத்தக்கருதி, வைகையில் நீராடச்சென்றாள் மாதரி. அப்போது ஆய்மகள் ஒருத்தி, நகரத்தினுட் கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேட்டு, அதனை அறிவிக்கும் பொருட்டு விரைந்து வந்தாள். வந்தவள் கண்ணகிக்குத் தன் நாவாற்சொல்ல அஞ்சி, குரவை முடித்து நீராடிவந்து நின்ற ஆயர்மகளிர்க்கு மறைவிற்கூறி, அவர்களோடு விம்மிதமுற்று நின்றாள்.

கண்ணகி, ஐயையைநோக்கித், 'தோழீ! என் நெஞ்சு கலங்குகின்றது. உடல் மிகவுநடுங்குகின்றது. என்னை வஞ்சித்ததீமையொன்றுண்டுபோலும். என் நெஞ்ச மிகவுமயங்குகின்றது. இவற்றிற்கேற்ப என் அன்பர் இன்னும் வந்திலர். இவை இங்ஙனமாக இவ்வாய்மகளிர் ஏதோ மறைவிற் பேசிக்கொள்கின்றனர். அதை நீ அறிந்தாற்சொல்லு;' என்றாள்.

ஐயை, 'அந்தப் புறத்திலிருக்கும் அழகிய சிலம்பைக்களவாடிய கள்வன் என்று கோவலரை வாட்கைக் காவலர்கள் கொலை செய்தார்களாம்,' என்றாள்.

அதைக் கேட்டவுடன் கண்ணகி ஆற்றாமையால் தன்வசமழிந்து எழுந்து, திங்கள் கரியமேகத்தோடு நிலத்தில் விழுந்தாற்போல விழுந்தாள்; 'என் அன்பின் செல்வனே! என்முன் வாராயோ ?' என்று செவ்வரிபரந்த கண்கள் கலங்கும்படி மோதிக்கொண்டாள்; 'ஐயோ! நீ எவ்விடத்துச் சென்றாயோ? ஒன்றுந் தோன்றவில்லையே,' என்று வருந்திப் பொருமி மயங்கி அழுதாள்.

கோவலன் இறந்ததைக்கேட்ட கண்ணகி துயருற்றிரங்கல்.

" உலகிலுள்ளோரெல்லாம் பழிதூற்றத் தென்னவன் செங்கோலிற்றப்பித் தவறிழைத்தனன். அதனால் யான் என் அன்பனையிழந்தேன். தம்மோடின்புற்றிருந்த தங்கணவர் எரியின் மூழ்க, அவரோடு அவ்வெரியின் மூழ்காது, துன்பந்தரு கைம்மை நோன்பைநோற்று இடர்ப்படும் மகளிரைப்போல் என் அன்பனை இழந்தபின் இவ்வுலகில் அழுதேங்கி இருக்கும் ஒருத்தியோ யான்? தம்நண்பர் எரியின் மூழ்க ஏங்கிப் பலநீர்த் துறைகளிற் படிந்து துயருறுமகளிரைப்போல் என் அன்பனை இழந்தபின் இவ்வுலகில் அழுதேங்கி இருக்கும் ஒருத்தியோ யான்? தம்மோடொத்த அன்பினையுடைய தங்கணவர்கள் எரியின் மூழ்க அவருடன் அவ்வெரியின் மூழ்காமல் கைம்மை நோன்பைக்கொண்டு நீர்த்துறைகளிலே தாங்குளிர மூழ்கும் பெண்டிரைப்போல் இம்மையில் புகழையும், மறுமையிற் புண்ணியத்தையும் இழந்து, இவ்வுலகிலே இருந்து மிகவருந்தி அழுவாள் ஒருத்தியோ யான்? உற்பாத சாந்தியாகக் குரவையாடிய ஆய்மகளிர்காள்! நீங்கள் எல்லாருங்கேளுங்கள்," என்று கூறியபின், " செங்கதிர்ச் செல்வனே! பரந்ததிரையையுடைய கடல் சூழ்ந்த இவ்வுலகில் உண்டான பொருள்களிலே நீயறியாதபொருள் இல்லை. நீயறிய என் கணவன் கள்வனோ?" என்று வினவினாள். சூரியன், அசரீரியாய் வானின்கண் நின்று, 'மாதராய்! நின்கணவன் கள்வனல்லன். அவனைக் 'கள்வன்' என்ற இவ்வூரை எரியுண்ணும்,' என்றான்.

---

19. கண்ணகி கோபத்தோடு ஊரைச்சுற்றி வருதல்.

உடனே கண்ணகி, மற்றொரு சிலம்பைத்தன் கையிலேந்திக்கொண்டு, ஆயர்பாடியைவிட்டு நகரினுட்சென்று, அங்

குள்ள கற்புடைய மகளிரைநோக்கி, "முறைதவறிய அரசனது ஊரிலிருந்துவாழும் கற்புடைய பெண்டிர்காள்! என் கணவன் கொண்டுவந்த சிலம்புக்குத் துணையான மற்றொருசிலம்பு, இதோ! என்கையிலிருக்கின்றது காண்மின்கள். அந்தோ! மரணவேதனையினுங் கொடியதும், உலகிற்பிறர் எய்தாதது மாகிய துன்பத்தை யான் எய்தினேன். என் கணவன் கள்வ னல்லன். என் காற்சிலம்பின் பெருவிலையைக் கைக்கொள்ளக் கருதிக் கள்வனென்று பெயரிட்டு என் கணவனைக்கொலை புரிந்தார்கள். தம் கணவர்களால் விரும்பப்படும் கற்புடைய பெண்களுக்கு முன்னே பண்டுபோல என் கணவனைக் காண் பேனோ? கண்டு, அவன் வாயாற்சொல்லப்படும் குற்றமற்ற நல்லுரையைக் கேட்பேனோ? அங்ஙனங் கேட்பேனாகில் அஃது எனக்கோர் உறுதியாகும். அங்ஙனம் என் கணவன் வாயாற் கேளாதொழிவேனாயின், 'இவள் தீது செய்தாள்,' என்று என்னை நீங்கள் யாவரும் இகழுங்கள்," என்றழுதனள்.

இங்ஙனம் அல்லலுற்று அழுகின்ற கண்ணகியை மதுரை மூதூரில் உள்ளவர்கள் யாவருங்கண்டு, "என்றுங்கோடாத நம்மன்னவன் செங்கோல்கோடி, இக்காரிகைக்கு இறக்கு மளவு நீங்காத துன்பத்தை விளைத்துவிட்டது. மன்னர் மன் னன், மதிக்குலத்தோன்றல், மண்ணினைக் குளிரச்செய்யும் மதிக்குடை, வெம்மையைச்செய்தது பெருவியப்பே. இதனால் யாது தீங்கு விளையுமோ? இந்நங்கை, செம்பொற் சிலம்பொன் றைக் கையிலேந்தி நம்மைக்கெடுத்தற்பொருட்டு வந்த பெருந் தெய்வமோ? அன்றித் தன்மேல்தெய்வ ஆவேசம் உண்டாகப் பெற்றவளோ? ஆகா! அரசன் இழைத்த தவற்றினால் நகரி னுக்கு யாது துன்பம் நேருமோ?" என்றேங்கி, அரற்றினர்

கள். அப்பொழுது மாலைப்பொழுது ஆயிற்று. ஊரார் இங்ஙனம் பழிதூற்ற, வேறுசிலர் கண்ணகியை அழைத்தேகி, அவளுக்கு அவள் கணவனைக் காட்டினார்கள்.

கண்ணகி, அன்று காலையில் தன்னோடு இனிமையாகப் பேசித் தன் குஞ்சியிற்சூடிய மாலையைத்தந்து போந்த கணவன் உடலம், அன்றுமாலைத் தன்னிடத்தினின்று பெருகும் குருதிப் புனல் பக்கத்து இடமெல்லாம் நனைக்கத் தரையிற் கிடத்தலைக் கண்டாள். கண்டு

"என்னுறு துயர்கண்டு மிடருறு மிவளென்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ?

"யாருமின் மருண்மாலை யிடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பந் தரைமூழ்கிக் கிடப்பதோ?

"கண்பொழி புனல்சோருங் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ"?

'இக்கொலைத்தொழில் இப்பெற்றியால் முடிந்தது,' என்றறியாதவளான என்முன், 'இது முன்னைத் தீவினையால் நேர்ந்தது காண்,' என்று யாரும் வந்து சொல்லார்களோ? துயர்க்கடலின் கரைகாணாமல் வருந்துகின்றவளாகிய என்முன், 'பழியை எண்ணாத பாண்டியனது தவற்றினால் நேர்ந்தது காண் இது,' என்று யாரும் வந்து சொல்லார்களோ?" என்று அரற்றினாள். பின்னர் "இக்கொடுங்கோன் மன்னவன் நாட்டிற் கற்புடைய பெண்டிரும் உண்டுகொல்? பிள்ளையைப்போற்றி வளர்க்கும் சான்றோரும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?" என்று சொல்லி அழுது, கணவனுடைய அழகிய மார்பைத் தழுவிக்கொண்டாள். உடனே அவள் கணவனாகிய கோவலன்,

உயிர் பெற்றெழுந்து நின்று, 'கலைநிறைந்த மதிபோலும் முகம் கன்றியதே!' என்று சொல்லித் தன்கையால் அவள் கண்ணீரைத் துடைத்தான். கண்ணீரை மாற்றியதும், அவ்வாயிழையாள் ஏங்கி எழுந்து, நிலத்திலே விழுந்து, அவனுடைய திருந்திய சேவடிகளைத் தன் செங்கைகளாற் பற்றிக்கொண்டாள். பின்பு கோவலன், 'பொற்கொடீ! நீ இருத்தி,' என்று கூறிப்பொய்யான உடலை நீத்து விண்ணுலக மடைந்தான்.

---

20. கண்ணகி பாண்டியனிடம் வழக்குரைத்தல்.

அப்போது பாண்டியன் தேவி, பலதீக்கனுக்களைக்கண்டு தன் தோழியை நோக்கித் "தோழீ! நான் பலதீக்கனுக்களைக் கண்டேன். அவற்றுள் ஒன்றில் நம்மன்னருடைய செங்கோலும், வெண்கொற்றக் குடையும் நிலத்தில் வீழ்ந்தன. ஆசார வாசலிலுள்ள ஆராய்ச்சி மணியின்குரல் நடுங்கியது. மற்றொன்றில் இரவிலே இந்திரவில் இடப்பட்டது. வேறொன்றில் பகலிலே உடுக்கள் உதிர்ந்தன. இன்னுமொன்றில் எட்டுத் திசைகளும் அதிர்ந்தன. இவை நமக்கு வருவதொரு துன்பமுண்டென்பதைத் தெரிவிக்கின்றன. இவற்றை நம் மன்னருக்கு உணர்த்துவோம்; வருக," என்றாள்.

உடனே அணியிழையாராகிய ஏவன்மகளிர் ஆடி, அணி, கொடி, பட்டு, செப்புக்குடம் முதலிய மங்கலப்பொருள்களை ஏந்திக் 'கோப்பெருந்தேவி வாழ்க' எனவாழ்த்தினார்கள்] பிறகு தேவி, ஆயமகளிரும் ஏவன்மகளிருந் தன்னைச்சூழ்ந்து வரச் சென்று, சிங்காதனத்தில் வீற்றிருந்த அரசனிடம் தான்கண்ட தீக்கனுக்களைச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அப்போது கண்ணகி, அரண்மனைவாயிலை அடைந்து, வாயிற்காவலனை நோக்கி, "வாயிலோயே! வாயிலோயே!! நெஞ்சத்து இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே!!! 'கணவனை இழந்தவளாகிய ஒருத்தி கையில் சிலம்பொன்றை ஏந்தி வந்திருக்கின்றாள்,' என்று நின்னரசனுக்கறிவி," என்றனள். உடனே வாயிற்காவலன் சென்று, அரசனைவணங்கி, "வாழியெங் கொற்கைவேந்தே! வாழி. வாயிலில் ஒருத்தி வந்திருக்கின்றாள். அவள் கொற்றவை, பத்திரகாளி, பிடாரி என்பவர்களில் ஒருத்தியோ என்று சொல்லத்தக்க சினமுடையவளாயிருக்கின்றாள். அவள் தன் கணவனை இழந்தவளாம்; கையிற்சிலம்பொன்று வைத்திருக்கின்றாள்," என்றான். அதுகேட்ட அரசன், 'அவளை உடனே இங்கனுப்புக' என்றான். உடனே வாயிற்காவலன் சென்று, கண்ணகியை அரசன் பால் அனுப்பினான்.

கண்ணகி அரசன் எதிரிற்சென்று நிற்க, அரசன் அவளை நோக்கி, 'மடக்கொடியே! நீயார்? உன்கண்களில் நீர் பெருகுதற்குக் காரணம் யாது?' என்று வினவினான்.

கண்ணகி, 'தேரா மன்ன! நான் ஒரு புறாவின்பொருட்டுத் தன்தசையை அரிந்து தந்த மன்னர்பிரானும், ஒருகன்றின் காரணமாகத் தன் பெறலரும் மைந்தன்மீது தேர்ச்சக்கரத்தினைச்செலுத்திய வேந்தர் வேந்தனும் இருந்து அரசாண்ட புகார் நகரில் வாழ்வேன்; அந்நகரிற் பெருங்குடி வாணிகன் மாசாத்துவான்றன் திருமகனாகிய கோவலன் மனைவி யான். ஊழ்வினை செலுத்தலால் பொருளீட்டக்கருதி நின்னகர்க்கு நானும், என்கணவனும் வந்தோம். என் கணவன், என்காற் சிலம்பொன்றை விற்கும்பொருட்டு வந்துகொண்டிருக்கையில்

நின்றுற் கொல்விக்கப்பட்டனன். என்பெயர் கண்ணகி என்பது," என்றனள். அரசன் அதுகேட்டுப் 'பெண்ணணங்கே! கள்வனைக்கொல்லுதல் கொடுங்கோலன்று; அது கொற்றவர் முறைகாண்,' என்றான்.

கண்ணகி, 'நன்காய்தலில்லாத வேந்தே! என்சிலம்பினது அரி மாணிக்கம்,' என்றனள். அரசன் "இத்தேமொழியாள் உரைத்தது நல்லுரையே. என்தேவி காற்சிலம்பின் அரி முத்தே," என்று இரண்டு சிலம்புகளையுந் தருவித்து எதிரில் வைத்துக் கோவலனிடமிருந்துபெற்ற கண்ணகியின் காற் சிலம்பை உடைத்தான். அதிலிருந்து மாணிக்கப்பரல்கள் தெரித்தன. அரசன் அவற்றைக்கண்டு, 'கொல்லன் சொற் கேட்டுத் தீவினைபுரிந்த யானோ அரசன்? யானே கள்வன். என்னால் பாண்டியர்களின் பெருமை அழிந்தது. என்னுயுள் கெடுக," என்று சொல்லி, மயங்கி அரியாசனத்திற் சாய்ந்து உயிர்துறந்தான். அதுகண்டு அரசன்தேவி, "அந்தோ! தந்தை தாய் முதலாயினுரை இழந்தார்க்கு அம்முறை உரியவர்களாகப் பிறரைக்காட்டலாம். கணவனை இழந்தார்க்கு அங்ஙனம் காட்டு தல் கூடாமையின் அவர்களுக்குச் செய்யக்கூடியது ஒன்று மில்லையே! என்செய்வேன்?" என்று சொல்லி அரற்றிக் கண்ணகியின் இணையடிகளில் வீழ்ந்து தொழுதனள்.

---

21. கண்ணகி வஞ்சினங் கூறல்.

கண்ணகி, வேந்தன் தேவியைநோக்கி, "தேவீ! யான் ஒன்றுந்தெரியாத் தன்மையேனுயினும்,



"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்."

என்ற மறைமொழி பழுதாகாது. நானோ கற்பிற்சிறந்த மங்கையர்கள் பலர் பிறந்த நாட்டிற்பிறந்தவள். அவர்களுட்சிலர் வரலாற்றைக் கூறுகின்றேன்; கேள். 1. ஒருத்தி வன்னிமரமும் மடைப்பள்ளியுந் தனக்குச்சான்று வரும்படி செய்தாள். 2. கரிகாற்சோழன் மகளாகிய ஆதிமந்தி என்பாள் மற்றொருத்தி, தன் கணவனாகிய சேரனைக் கடல்கொண்டு போகக் 'கன்னவில் தோளானே!' என்று கூப்பிட்டாள். உடனே கடலரையன் அவள் கற்புக்கு அஞ்சி, அவள் கணவனாகிய சேரனைக்கொண்டுவந்து தர, அவள் அவனைத்தழுவிக்கொண்டு நகருக்குச் சென்றாள் 3. வேறொருத்தி மரக்கலத்திலேறி வேற்று நாடுசென்ற தன் கணவன் வருமளவும் கடற்கரையிலே கல்லாய்ச் சமைந்திருந்து, தன் கணவன் வந்தவுடன் கல்லுருவம் நீத்தாள். 4. மற்றொருத்தி ஒத்தமாற்றாள் குழவி கிணற்றிலே தவறிவிழத், தன் குழந்தையையும் கிணற்றிற்போட்டு, இரண்டு குழந்தைகளையும் மீட்டும் எடுத்தனள். 5. மற்றொருத்தி தன் கணவன் வேற்றுநாட்டிற்குச் சென்றிருக்கையில் அயலான் ஒருவன் தன்னை மிகுதியும் உற்றுநோக்கத் தன் முகத்தைக் குரங்கு முகமாக்கிக்கொண்டு, தன் கொழுநன் வந்த பிறகு குரங்கு முகத்தை நீக்கினாள். 6. மற்றொருத்தி தன் தந்தையினிடம் தன்தாய், "என் அன்புடையீர்! நானும் என் தோழியும் சிறுவயதில் விளையாடிக்கொண்டிருக்கையில் நான், 'எனக்கொருமகளும், உனக்கொரு மகனும் பிறந்தால் என்மகளை உன்மகனுக்கு மணம் புரிவிப்பேன்,' என்று பேதைமையாற் சொல்லினேன். அவள் அதனை மெய்யாகவே கொண்டு, இப்பொழுது தன்மகனுக்கு நமது மடமகளை மணம்

புரிவிக்கும்படி கேட்கின்றாள். அதனால் என்மனம் மிகவும் வருந்துகின்றது," என்று சொல்லியதைக் கேட்டுத்தன் தாயின் தோழி மகனை மணந்துகொண்டாள். யானும் அத்தகைய பத்தினியேயாகில் ஒழிந்த அரசனோடு இம்மதுரையை அழிப்பேன். காண்," என்றுசொல்லி, அரசன் தேவியைவிட்டு நீங்கினாள். அரசன்தேவி உடனே அரசனைத் தழுவிக்கொண்டு மரித்தாள்.

பிறகு கண்ணகி தெருவில் வந்து, "மகளிர்காள்! மைந்தர்காள்! வானவர்காள்! முனிவர்காள்! கேளுங்கள். என் கணவனுக்குத் தீங்கிழைத்த இம்மதுரையைச் சீறினேன். யான் குற்றமில்லாதவள்," என்று இடமார்பை வலக்கையால் திருகி எடுத்து மதுரைநகரின்மீது விட்டெறிந்தாள். உடனே நீல நிறமும், சிவந்தசட்டையும், வெள்ளிய பல்லுமுடைய பார்ப்பானாக அங்கிக்கடவுள் கண்ணகியின் முன்வந்து தோன்றி, "மாபத்தினி! உனக்குத் தவறிழைத்தபோது இந்நகரை எரிக்கும்படி முன்னமே யானோர் கட்டளையைப் பெற்றிருக்கின்றேன். இந்நகரில் பிழைக்கத்தக்கவர் யார்?" என்றுகேட்டான். கண்ணகி, 'பார்ப்பார் அறவோர் பசுப் பத்தினிப் பெண்டிர் மூத்தோர் குழவியெனுமிவரைக் கைவிட்டுத் தீயவர்கள் பாற் செல்க,' என்று கூறினாள். அவ்வளவில் மதுரைநகரைப் புகையழல் சூழ்ந்தது.

22. மதுரைமூதூர் எரியுண்டது.

கண்ணகியால் ஏவப்பட்ட அனற்கடவுள் தன் எரிமுகந் திறந்து, எரியைப்பரப்பினன். அரசன், தன் செங்கோல் தரையில் வீழச் சிங்காதனத்தில் இறந்து கிடத்தலை அறியாமல், புரோகிதன், கணிதன், தன்மாசனத்தர், மந்திரவோலை எழுது

வோர் முதலியவர்கள் ஓவியத்திரள்போல உரையடங்கி நின்றார்கள். அரண்மனை வாயிலில் தீ மண்டி எரிவதைக்கண்டு யானைப்பாகர்களும், குதிரைப்பாகர்களும், தேர்வீரர்களும், காலாள்வீரர்களும் தம்மன்னனை ஏந்திச்சென்றார்கள். அந்நகரைக்காத்திருந்த நால்வகை வருணப்பூதங்கள் தமது காவலை விட்டு நீங்கின. எண்வகைக் கூலங்களை விற்கும் கடைத்தெருவி லுள்ளவர்களும், கொடித்தேர் வீதியிலுள்ளவர்களும், மற்றும் பலவகைத் தெருக்களிலுள்ளவர்களும் கலங்கினார்கள். எரி, அறவோர் இடங்களிற் செல்லாமல் மறவோர் இடங்களில் மண்டிஎரிந்தது. கறவைகளும், கன்றுகளும், அறம்புரியும் இயல்பினர்களாகிய ஆயர்களின் தெருக்களையடைந்தன. யானைகளும், பிடிகளும் குதிரைகளும் மதிலின் புறத்தில் ஓடின. துயில்கொண்டிருந்த ஆடவர்களும், மகளிர்களும் அலங்கோலமாய் ஓடினார்கள். மாதர்கள் தூங்கிக்கொண்டிருந்த பிள்ளைகளை எழுப்பிக்கொண்டு, நரைத்த கூந்தலையுடைய மாமியர்களுடன் ஓடினார்கள். வருவிருந்தோம்பி மனையறம்பேணும் கற்புடைய மாதர்கள் மனமகிழ்ந்து, “ கணவனை இழந்த இக்கற்புடையாள், சிலம்பினால் அரசனைவென்று நகரெரிவித்த செயல் மறமன்று ; அறமே,” என்று அங்கியங் கடவுளைத் தொழுதார்கள். கணிகையர் வீதியில் நாடகமாடிக்கொண்டிருந்தவர்கள் ஆடும் அரங்கத்தைவிட்டு நீங்கி, “ அரசனைச் சிலம்பால் வென்று, இவ்வூரில் தீயூட்டிய இந்நங்கை எந்நாட்டினளோ ? யார் மகளோ?” என்று வியந்தார்கள். ஆரண ஓசை அடங்கியது. யாகம் புரிதலும், தெய்வபூசை செய்தலும், மனைகளில் விளக்கேற்றலும், அரமனையில் பேரிகை கொட்டலும் நீங்கின. அம்மாநகரைக்காக்கும் தெய்வமாகிய மதுராபதி என்பாள், அப்போது கண்ணகியின் முன்வந்து தோன்றினள்.

23. மதுராபதி என்னும் மதுரைத் தெய்வம், கண்ணகிக்கு முன்வினை நிகழ்ச்சி கூறுதல்.

அங்ஙனந் தோன்றிய மதுரைத் தெய்வம், பாண்டியனுடைய குலமுதற் கிழத்தியாகலின் கண்ணகியின் முன்னே நிற்காமல் பின்னே நின்று, "நங்காய்! வாழி. யான் நின்பாற் கூறற்குரிய தொன்றுண்டு; கேட்பாயாக," என்றாள்.

அதைக்கேட்ட கண்ணகி 'நீயார்? என் துயரம் அறிவையோ?' என, மதுரைத்தெய்வம், "நின் துயரத்தை யான் அறிவேன். யான் இக்கூடன்மாநகரின் தெய்வம்; மதுராபதி என்னும் பெயருடையேன். நின் கணவன் கொலையுண்டதற்காக யான் மிகவும் வருந்துகின்றேன். பெருந்தகைப் பெண்ணே! என் மனத்துள்ள நோயொன்றைக் கேட்பாயாக. நின் கணவனுக்கு இத்துன்பம் நேரிட்டதற்குரிய காரணத்தைக் கூறுகின்றேன். எங்கோமான் இதுகாறும் முறை பிறழ்ந்தவனல்லன். இவனைப் பகைமன்னர் பழிதூற்றுவதல்லது குடிகள் பழிதூற்றுதல் இல்லை. இவன், இளமையாகிய யானை, கல்வியாகிய பாகனுக் கடங்காமற் செல்லுங் காலத்தும் ஒழுக்கத்திற்குன்றாத குடியிற் பிறந்தவன்.

1. ஒருகால் கீரந்தை என்னும் ஒரு மறையவன், 'நின்னை அரசன் காப்பான்,' என்று சொல்லித்தன் மனைவியை வீட்டில் விட்டுக் காசியாத்திரை சென்றான். அப்போது அரசனாயிருந்த குலசேகரப்பாண்டியன் அதனையுணர்ந்து, அப்படியே அப்பார்ப் பனியைக் காத்துவந்தனன். காசியாத்திரை சென்றோன் மீண்டுவந்து, அன்றிரவு தன்மனையாளிடம் தான் யாத்திரை செய்த விதத்தைக் கூறிக்கொண்டிருந்தான். நகர்சோதனையின் பொருட்டுச்சென்ற மன்னன் அவ்வீட்டில் ஆண் அரவங்

கேட்டுக் கதவைத் தட்டினான். மறையோன், கதவைத் தட்டினவன் கள்வன் என்றஞ்ச, அவன் மனைவி, "நீர் யாத்திரைபோகும் போது, 'அரசன் காவலன்றி வேறு காவல் இல்லை,' என்று சொல்லிச் சென்றீரே. அக்காவல் இப்போதும் காவாதோ?" என்றாள். அதனைக்கேட்ட அரசன், அவ்வந்தணனுடைய ஐயம் நீங்குதற்பொருட்டு உடைவாளால் தன்கையைக் குறைத்துக் கொண்டான்.

2. "சோழ நாட்டினனாகிய பராசரன் என்னும் ஒரு பார்ப்பான், மாந்தரஞ்சேரலிரும்பொறை என்னும் சேர அரசனுடைய கொடைத்திறத்தைக்கேட்டு, அவனிடஞ்சென்று, அங்குள்ளவர்களை வாதில்வென்று, மிக்க பரிசுபெற்று வருகையில் பாண்டியநாட்டில் திருத்தங்காலூரில் தங்கினான். அப்போது அங்கு விளையாடிக்கொண்டிருந்த பார்ப்பனச்சிறுவர்கள் வந்து அவனைச்சூழ்ந்து கொண்டார்கள். அம்மறையவன் அவர்களைநோக்கி, 'உங்களில் யார் நான் கேட்கின்ற சுருதியைச் சொல்லுகின்றானோ அவனுக்கு இம்மூட்டையைக் கொடுத்து விடுகின்றேன்,' என்றான். வார்த்திகன் என்பவன் மகன் தக்ஷிணாமூர்த்தி என்னும் சிறுவன் அவ்வாறே அம்மறைவலாளன் கேட்ட சுருதியைச் சந்தம் தவறாமற்சொன்னான். உடனே அவ்வேதியன் தான்பெற்று வந்த பரிசையெல்லாம் அச்சிறுவனுக்குக் கொடுத்துவிட்டுச் சென்றான். அரசன் சேவகர்கள் அதனைக்கண்டு, பொறாமைகொண்டு, 'பிறர் பொருளைக்கள வாடினன்,' என்று கூறி, வார்த்திகனைச் சிறையிலிட்டார்கள். அவன் மனைவியாகிய கார்த்திகை என்பவள் அதைக்கண்டு துன்புற்று ஏங்கி, நிலத்திலே விழுந்து, புரண்டழுதாள். அதனால் துர்க்கையின் கோயிற்கதவு மூடிக்கொண்டது. இச்

செய்தியைக் கேட்ட பாண்டியன், 'என்னுளுகையில் ஏதேனுங் குறைநேர்ந்ததோ? துர்க்கைக்குற்ற துன்பம் யாது? ஆய்ந்தறிமின்,' என்று சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்கள் வார்த்திகனை அரசன் முன்னிலையில் அழைத்துவந்துவிட்டு உண்மையைக் கூறினார்கள். அரசன் அவ்வார்த்திகனை நோக்கி, 'இப்புல்லறிவினேர் செய்த பிழையைப் பொறுத்தல் உமது கடன்,' என்றுகூறி, அத்திருத்தங்காலூரையும், வயலூரையும் அவனுக்கு மானியமாகக்கொடுத்து, அவனைவணங்கி அனுப்பினன். உடனே துர்க்கையின் கோயிற்கதவு, ஊர் முழுதும் ஓசைகேட்கத் தானே திறந்து கொண்டது.

"இத்தகைய நீதியுடையவன் இம்மன்னன். 'இவ்வரசுடன் இந்நகரம் கெடும்,' என முன்னமே ஒரு சோதிட வார்த்தையுண்டு. நின் கணவன் இத்துன்பமெய்திய காரணத்தைக் கூறுகின்றேன்; கேள்: கலிங்க நாட்டில் சிங்கபுரத் தரசன் வசு என்பவனும் கபிலபுரத் தரசன் குமரன் என்பவனும் தாயாதிகளாதலின் தம்முட் பகைகொண்டிருந்தார்கள். அவர்கள் போர் அவ்விரு நகரின் இடைநிலத்தில் ஆறு காவததூரம் நடந்தது. அதனல் அவ்வழியிற் எவரும் செல்லாராயினர். சங்கமன் என்னும் ஒருவணிகன், 'பெரும் பொருள் ஈட்டவேண்டும்,' என்னும் கருத்தினனுய்க் கள்வனைப் போல் வேடம் பூண்டு, பெருவிலைக் கலன்களைக் கொண்டு தன்மனைவி நீலி என்பவளுடன் சென்று, சிங்கபுரத்தின் கடைவீதியில் அவ்வணிகளை விலைபேசிக்கொண்டிருக்கையில் அவன் பகைவனும், அரசன் சேவகனுமாகிய பரதன் என்பவன், அவனைப்பற்றிக் கொண்டுபோய்த்

தன் அரசனிடங் காட்டிப் 'பகைமன்னன் ஒற்றன் இவன்' என்று சொல்லிக் கொல்வித்தான். அவன் மனைவி நீலி என்பவள், தனக்காம் ஆதரவற்றவளாய், "அரசர்காள்! முறையோ? பரதர்காள்! முறையோ? ஊரீர்காள்! முறையோ? சேரியீர்காள்! முறையோ?" என்று மன்றுகளிலும், தெருக்களிலும் பதினான்கு நாளளவும் கூவியழுது, முடிவில் ஒரு மலையின் உச்சியிலேறி, "எமக்கு இத்துயரஞ் செய்தார், தாமும் மறுபிறப்பில் இத்துன்பமே எய்துக," என்று சபித்து உயிர்துறந்தாள். அப்பரதனே கோவலனாகப் பிறந்தான். முற்பிறப்பிற் செய்தவினையானது வந்து உங்களைக் கட்டியதாதலின் நீங்கள் இத்துன்பத்தை அடைந்தீர்கள்.

"உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மை யிலோர்க்குச் செய்தவ முதவாது."

இற்றைக்குப் பதினான்காம் நாளின் இறுதியில் நீ நின்கணவனை வானோர் வடிவிற்கண்டு சேர்வாய்," என்று கூறி, அம்மதுரை மாநகரின் தெய்வம் கண்ணகியைத் தேற்றி, அழலைத் தணிவிக்கும்படிசெய்து சென்றது.

அதன்பிறகு கண்ணகி, "இனி என் அன்பனைக் கண்டபின் அல்லது ஓரிடத்திலும் இரேன்; ஓரிடத்திலும் நில்லேன்," என்று கூறித் துர்க்கையின் கோயிலில் தன் கைவளையைத் தகர்த்துவிட்டு, வையையாற்றின் கரையை வழியாகக் கொண்டு மேடென்றும், பள்ளமென்றும் பாராமற் சென்று, மதுரையைக் கடந்து, பதினான்காம் நாள் மலைநாட்டிலுள்ள திருச்செங்குன்று என்னும் குன்றின்மீதேறி, ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நின்றாள்.

III வஞ்சிக்காண்டம்.

24. குறவர்கள் கண்ணகியைத் தொழுது குன்றிற் குரவையாடுதல்.

குருவிகளை ஓட்டிக் கிளிகளைக்கடிந்து, அருவியிலும், சுனையிலும் நீராடி வந்த குறத்தியர்கள் வேங்கைமர நிழலில் நிற்கின்ற கண்ணகியைக் கண்டு, "அம்மே! எங்கள் வள்ளியம்மையைப் போன்றிருக்கின்றீர். நீர் யாரோ?" என்று கேட்டார்கள். கண்ணகி கோபியாமல், 'ஊழ்வலியாலே மதுரையும் பாண்டியனுங் கேடுற மதுரையில் கணவனை இழந்து வந்த பாவி யான்,' என்றனள். அதுகேட்ட அக்குறமகளிர் அஞ்சிக் கைகூப்பி யிறைஞ்சி நின்றார்கள்.

அப்பொழுது பதினான்காம் நாளின் மாலையாதலின் கண்ணகி, 'நமது கொழுநரைக் கண்டு தொழுநாள் இது,' என்று கருதினள். உடனே கோவலன் தெய்வ வடிவத்தோடு விமானத்தில் வந்து கண்ணகிக்குக் காட்சி தந்தான். கண்ணகி அவனைத் தொழுது, அவனுடன் விமானத்தில் ஏறினாள். தேவர்கள் மலர்மாரி பெய்து அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு விண்ணுலகை அடைந்தார்கள்.

கண்ணகி இங்ஙனம் விண்ணுலகடைந்ததைக் கண்ட குறவர்கள், உறவினர்களை நோக்கிச் 'சிறுகுடியீரே! சிறுகுடியீரே! இம்மலையின் தாழ்வரையில் வேங்கை மரத்தின் நிழலிலே வந்து நின்ற இப்பத்தினித் தெய்வத்தை நங்குல தெய்வமாகக்கொண்டு போற்றுமின். நமக்கு இத்தெய்வம் போன்ற சிறந்த தெய்வம் பிறிதில்லை. பலவகை வாத்தியங்களை வாசிமின்; குறிஞ்சிப் பண்ணைப் பாடுமின்; நறும்புகை எடுமின்; சுற்று மதிலிட்டு



வாசல் செய்ம்மின். விரவிய மலர்களைத் தூவி, 'நம்மலையின் வளஞ் சுரக்க,' எனப்பரவுமின்,'' என்றார்கள். பிறகு அம்மலையி லுள்ள குறவர்கள் எல்லாருங் கூடிக் குரவையாடி,

"வானக வாழ்க்கை யமரர் தொழுதேத்தக்
கானக நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே
கானக நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்
வானக வாழ்க்கை மறுதரவோ வில்லாளோ."

"மறுதர வில்லாளை யேத்திநாம் பாடப்
பெறுகதில் லம்ம விவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெற்றி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடைய திவ்வூர்."

என்று புகழ்ந்து பாடிப் பத்தினித் தெய்வமாகிய கண்ணகியை வணங்கினார்கள்.

---

25. சேரன் செங்குட்டுவன் சென்று மலைவளங் காணுதல்.

அப்போது சேரன் செங்குட்டுவன் மலைவளங் காண விரும்பித் தன்தேவி வேண்மாளோடும், தம்பி இளங்கோவடிகளோடும், நால்வகைச் சேனைகளோடும் புறப்பட்டுத் தலைநகரமாகிய வஞ்சி நகரைவிட்டுச் சென்று, பெருமலையினின்றிழியும் பேரியாற்றின் கரையில் ஒரு மணற்றிட்டிலே தங்கினான். அந்த யாறு தன் இருபக்கத்துக் கரையிலுஞ் செறிந்துள்ள கோங்கு, வேங்கை, கொன்றை, நாகம், திலகம், ஆரம் முதலிய மரங்களி லிருந்து உதிர்ந்த மலர்களால் புனல் மறைக்கப்பட்டு, வண்டினங்கள் தன் புகழைப்பாடத் திருமால் மார்பின் ஆரம்போல இனிய காட்சியைத் தந்து விளங்கியது.

அங்குக் குரவைக் கூத்தாடுவார் ஒலியும், கொடிச்சியர் பாட்டொலியும், வெறியாடும் வேலன் பாணியின் ஒலியும், தினையைக் குற்றுபவர்கள் பாடும் வள்ளைப் பாட்டின் ஒலியும், கள்ளுண்டு களித்துக் குறவர்கள் ஆரவாரஞ் செய்யும் ஒலியும், வேட்டையாடுவார் பறை கொட்டும் ஒலியும், புலியும் யானையும் போர்புரியும் ஒலியும், அரசன் சேனையின் ஒலியும் ஒருங்குகூடி, எங்கும் பேரொலியாய் ஒலித்தன.

குறவர்கள் அரசன் வரவை யறிந்து யானைக்கோடு, அகிற் கட்டை, வெண்சாமரை, தேன்குடம், சந்தனக்கட்டை, சிந்துரக்கட்டி, அரிதாரம், ஏலம், மிளகு, தேங்காய், மாங்கனி முதலிய மலையில் விளையும் பொருள்களைத் தலைமிசைச் சுமந்து கொண்டுவந்து, அரசனை யணுகிக் காணிக்கையாகக் கொடுத்து, 'நின்கொற்றம் வாழ்க,' என வணங்கினர். பின்பு, "வேந்தர் வேந்தே! இம்மலையில் நாங்கள் ஓரதிசயங் கண்டோம். இம்மலையில் ஒரு வேங்கை மரத்தின் நிழலில் மிக்க துயரத்தோடு ஒருத்தி வந்து நின்றாள். சிறிது நேரத்திற் கெல்லாம் தேவர்கள் பலர் ஒருங்குகூடி வந்து அவளுக்கு அவள் கணவனைக் காட்டி, அவளை அவள் கணவனுடன் விமானத்தி லேற்றி, விண்ணுலகுக்கு அழைத்துச் சென்றார்கள். அவள் எந்நாட்டாளோ? யார் மகளோ? அறியோம். நின் கொற்றம் பன்னூறாயிரத் தாண்டு வாழ்க," என்று கூறினார்கள்.

அப்பொழுது அரசனை வந்து கண்டு களிப்புடன் அருகிலிருந்த தண்டமிழாசிரியர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார், கண்ணகிக்கு நேர்ந்தவற்றை எல்லாம் அரசனுக்கு விளங்கக் கூறினார். அதைக்கேட்டு அச்சேரர் பெருமான், "பாண்டிய

மன்னன் இறந்ததற்காகப் பெரிதும் வருந்திப் பாண்டியன் ஊழ்வலியினால் முறையிற் றப்பிய செய்தி எம்போன்ற மன்னர்களின் செவியிற் படாமுன் தன் குற்றத்திற் கஞ்சி உயிர் துறந்தானாதலின் அவன் கொடுங்கோல் நிமிர்ந்து, செங்கோலாயிற்று. மழைவளங் குறையினும் அச்சம்; குடிகளைப் பாதுகாத்தலிற் குறைநேரிடின் அதனினும் பேரச்சம். ஆதலின் மன்னற் மரபிற் பிறத்தலால் துன்பமன்றி இன்பமில்லை," என்று கூறித் தன் தேவியாகிய வேண்மாளை நோக்கி, "அன்புடையாய்! அறக்கற்புடைய பாண்டியன்தேவியும் மறக்கற்புடைய கண்ணகியுமாகிய இருவரில் சிறந்தவள் யார்?" என்று வினவினான். வேண்மாள், "பாண்டியன் துன்பங்காணாது கழிந்த கோப்பெருந்தேவி வானகத்துப் பெருந்திருவுறுக. அது நிற்க. நமது நாட்டை வந்தடைந்த இப்பத்தினிக்கடவுளை நாம் பரசுதல் வேண்டும்," என்றாள்.

அது கேட்டு அரசன், இதற்குச் செய்யத்தக்கது யாதென்னுங் கருத்தினனாய் அமைச்சர்களை நோக்க, அமைச்சர்கள், "இமயமலையினின்றேனும், பொதியமலையிலிருந்தேனும் கல்லைக் கொண்டுவந்து இப்பத்தினித் தெய்வத்தைப் பிரதிட்டை செய்யலாம். இமயக்கல்லாயின் கங்கையிலும், பொதியக் கல்லாயின் காவிரியிலும் நீர்ப்படை செய்தல் வேண்டும்," என்றார்கள்.

செங்குட்டுவன், "பொதியின் மலையிற் கற்கொண்டு காவிரியாற்றிலே நீர்ப்படை செய்தல் வன்மையிற் சிறந்த எங்குடிக்குச் சிறப்பன்று. பத்தினித் தெய்வத்தைப் பிரதிட்டை செய்தற்கு மலையரயன் ஒரு கல் தரானாயின் வஞ்சிமாலை சூடிச்

சேனைகளுடன் சென்று, எமது வீரத்தை அவ்வட நாட்டினர்க்குத் தெரிவிப்போம்,'' என்றான்.

அரசன் கூறிய அவ்வீரமொழியைக் கேட்ட வில்லவன் கோதை என்னும் அமைச்சன் எழுந்து, "வேந்தர்வேந்தே! பல்யாண்டுவாழ்க நின் கொற்றம். முன்னே சோழ பாண்டியர்கள் நின்னை எதிர்த்துத் தோற்ற செய்தி உலக முழுதும் பரவியது. கோங்கணர், கலிங்கர், கருநாடர், பங்களர், கங்கர், வடவாரியர் என்பவர்களோடு தமிழ்ப்படை கலந்து செருச் செய்த ஞான்று நீ நின் யானையைச் செலுத்திய திறம் என் கண்ணை விட்டகலாது! உனது தாயைக் கங்கையில் நீராட்டிய நாள் உன்னை வந்தெதிர்த்த ஆரிய மன்னர்கள் ஆயிரவர்களுக்கு முன்னே நீ தனி நின்று பொருத திறத்தைக் கூற்றுவன் அறிவன். பூமியையெல்லாந் தமிழ் நாடாக்க வேண்டி இமயமலையிற் கல்லைக் கொள்ளக் கருதினையாயின் நின்னை எதிர்க்க வல்லார் எவருளர்? எங்கோன் நீ இமயமலைக்குச் செல்வது ஒரு கல்லைக் கொள்வதற்கே யாதலின் நீ இமய மலைக்குச் செல்லுதலை வடபால் மன்னர்களுக் கெல்லாம் விற்கயற்புலி இலாஞ்சனை அமைந்த ஓலைகளை எழுதி அனுப்புக;'' என்றான்.

அதன்பின் அழும்பில்வேள் என்னும் அமைச்சன் "நாவலந்தீவிலுள்ள எல்லா அரசர்களின் ஒற்றர்களும் நம்முடைய நகர்க்கண் உள்ளார்கள். அவ்வொற்றர்களே இச்செய்தியைத் தம் அரசர்களுக்கு அறிவிப்பார்கள். ஆதலின் இதனை நமது நகரில் பறையறைந்து தெரிவித்த லொன்றே போதும்,'' என்றான்.

செங்குட்டுவன் அதற்குடன்பட்டு வஞ்சிமா நகரை யடைந்தான். உடனே வள்ளுவர் பட்டத்து யானையின்மேல் முரசை யேற்றி, "வாழ்க வெங்கோ; மன்னர்பெருந்தகை ஊழி தோறூழி உலகங் காக்க. எம்முடைய அரசன் இமயமலையில் ஒரு கல் கொண்டுவர வடதிசைநோக்கிச் செல்கின்றான். ஆதலின் வடதிசை மன்னர் எல்லீரும் திறை கொண்டுவந்து எதிர் கொள்க. அங்ஙனம் எதிர் கொண்டு காணீராயின் கடலுட் புக்கும், மலையிலேறியும் உறைமின். அதுவுஞ் செய்யீராயின் துறவை மேற்கொண்டு வாழுமின்," என்று அம்முரசறைந்த ஒலி நகர்முழுதும் பரவியது.

---

26. செங்குட்டுவன் இமயமலையிற் கல் கொள்ளுதல்.

அதன் பிறகு செங்குட்டுவன் சிங்காதனத்தமர்ந்தான். புரோகிதனும், கணிதனும், அமைச்சர்களும், தண்டத்தலைவர்களும் வந்து, 'மன்னர் மன்னன் வாழ்க,' என்றேத்தித் தங்கள் தங்கள் ஆசனங்களில் வீற்றிருந்தார்கள். அப்போது அரசன் படைத்தலைவர்களை நோக்கித் "தமிழ் நாட்டில் தீர்த்தமாட இமயமலையினின்று வந்த முனிவர்கள் ஆரிய மன்னர்களாகிய கனகனும், விசயனும் தமிழ் வேந்தர்களின் ஆற்றலையறியாத மன்னர்களுடன் கூடித் தமிழ் நாட்டு வேந்தர்களை இகழ்ந்துரைத்தனர் என்று கூறினார்கள். ஆதலின் இமயமலையினின்றுகொள்ளுங் கல்லை அவ்வாரிய மன்னர்களின் தலையில் ஏற்றிக்கொண்டு வருதல் வேண்டும். அது செய்யாது மீள்வேனாகில் போர்க்களத்தில் எதிர்த்த பகையரசர்களை நடுங்கச்செய்ய முடியாதவனாய்த் தன் குடிகளை நடுங்கச்செய்யும் கொடுங்கோல் மன்னனை நிகர்த்தவனாவேன்," என்று கூறினான். அது கேட்ட புரோகிதன் எழுந்து, "வேந்தே! அவ்வாரிய

மன்னர் சோழ பாண்டியர்களை இகழ்வதன்றி நின்னை இகழ வல்லாரல்லர். நின் சினந்தணிக." என்றான்.

பிறகு மௌத்திகன் எழுந்து, "மன்னர் மன்ன! இப்பொழுது நடக்கும் முகூர்த்தம், உலக மன்ன ரெல்லாரும் வந்து நின்னடி பணியத்தக்கது. நீ நினைத்தபடி வட திசையின் மேல் படையை எழுப்புக," என்றான். உடனே அரசன் "வாளுங் குடையும் வட திசை நோக்கிச் செல்வதாக," என்று கட்டளை யிட்டான். அவ்வளவிலே வீரர்கள் ஆர்த்தார்கள், முரசங்கள் முழங்கின. வீரர்கள் 'அரசன் வாழ்க,' என வாழ்த்தி, வாளையுங் குடையையும் பட்டத்து யானைமேலே ற்றி, அதை நகர்ப்புறத்திலுள்ள கோட்டையின் மதிலிலே புகவிட்டு, மீண்டும் அரசவையில் வந்து சேர்ந்தார்கள். அரசன் அவர்களுக்கு அன்று ஒரு விருந்திட்டு, வஞ்சிமாலையைச் சென்னியிற் சூடினான்.

மறுநாட் காலையில் சிவபெருமானுடைய திருவடிகளை வஞ்சி மாலையோடு சென்னியிற் சூடி, அக்கினி கோத்திரங்களை வணங்கித் தனது பட்டத்துயானையின் பிடர்த்தலையில் ஏறினான். அப்போது சிலர் திருவநந்தபுரத்திலே அறிதுயிலமர்ந்த பெருமான் சேடங்கொண்டு வந்து அரசனை வாழ்த்த, அரசன் அதனைத்தோளில் அணிந்து, நாடக மகளிர் ஆடரங்குகளில் இருந்து வாழ்த்த, வேதாளிகரும், சூதர்களும், வீரர்களும் தன் வெற்றியைப்புகழ, நால்வகைச் சேனைகள், பூதேவியின் முதுகு நெளியும்படி தன்னைச் சூழ்ந்துவரத் தானவர் மேற் செல்லும் இந்திரனைப் போல வஞ்சிமாநகரினின்று புறப்பட்டுச்சென்று, நீலகிரியை யடைந்து, அங்கே தங்கினான்.

விசும்பில் இயங்கும் முனிவர் சிலர் அங்கே சேனையின் ஒலியைக் கேட்டு விசும்பினின்றிறங்கி, மின்னொளியை மயக்கு மேனியுடன் அரசன் முன் தோன்றினர். அரசன் உடனே எழுந்து அவர்களை வணங்கிநின்றான். அவர்கள், "செஞ் சடைவானவன் அருளால் வஞ்சியில் தோன்றிய மன்னவ! நாங் கள் பொதிய மலைக்குச் செல்கின்றோம். நீ இமயமலையைநோக் கிச்செல்கின்றாய். அங்கு அருமறை அந்தணர் சிலர் வசிக் கின்றனர். அவர்களைக் காத்தல் நின் கடன்," என்று சொல்லி வாழ்த்திச் சென்றார்கள்.

அப்போது கொங்கணக் கூத்தர் முதலியவர்கள் வந்து அரசனை வணங்கிப் பெருங்கலன்களைப் பரிசாகப் பெற்றார்கள். பிறகு வாயிற் காவலன் ஒருவன் வந்து அரசனை வணங்கி நின்று, தலைப்பாகையும் சட்டையுமணிந்த சஞ்சயன் முதலிய ஆயிரந்தூதுவர்கள் நூறு நாடக மகளிர்களுடனும், இருநூற் றெட்டுக் குயிலுவருடனும், நூறு வேழம்பருடனும், நூறு தேருடனும், ஐந்நூறு யானைகளுடனும், பதினாயிரம் குதிரை களுடனும், பல சரக்குகளேற்றிய பதினாயிரம் பண்டிகளுட னும் வாயிலில் வந்திருக்கின்றார்கள்," என்றான். அரசன், "சஞ் சயனை நாடக மகளிர், குயிலுவர் முதலியவர்களுடன் இங்கு வரச்சொல்லுக," என்று கட்டளை யிட்டான். அதை வாயிற் காவலன் சென்று சொல்லச் சஞ்சயன் நாடக மகளிர், குயிலு வர் முதலியவர்களுடன் சென்று, அரசனை வணங்கி நின்று, "அரசே! நின் நட்பாளராகிய நூற்றுவர் கன்னர், நீ வடபாற் செல்வது ஒரு கல்லைக் கொள்ளும் பொருட்டாயின் அவர்க ளே இமயமலையின் கல்லைக்கொண்டு நீர்ப்படை செய்து தருவ தாகக் கூறினர்," என்றான்.

அரசன், "ஆரிய மன்னன் பாலகுமாரன் புதல்வர்களாகிய கனகனும், விசயனும் தமிழ் வேந்தர்களின் ஆற்றலறியாது இகழ்ந்து கூறினுர்கள். அதனுல் இச்சேனை சீற்றங் கொண்டு அவர்களை நோக்கிச் செல்கின்றது. இச்சேனை கங்கையைக் கடத்தற்கு மரக்கலங்களை ஆயத்தஞ் செய்து வைக்கச் சொல்லுக," என்று சொல்லிச் சஞ்சயனை அனுப்பினுன்.

அப்போது தென்னவர் அனுப்பிய தூதர்கள் சந்தனமும் முத்துமாகிய திறையைக் கொண்டு வந்து நின்றுர்கள். அரசன் கண்ணெழுத்தாளர்களால் திருமுகம் எழுதுவித்துத் தென்னவர்களுக்கனுப்பினுன். பிறகு அரசன் சேனைகளுடன் புறப்பட்டுக் கன்னர்கள் சித்தஞ்செய்து வைத்திருந்த மரக்கலங்களின் உதவியினுல் கங்கையைக்கடந்து, வடபால் அடைந்தனன். அங்கே கன்னர்கள் எதிர்கொண்டு உபசரித்தார்கள். பின்பு அவர்கள் நாட்டையும் கடந்து சென்று பகையரசர்கள் நாட்டில் பாடி வீட்டில் தங்கினுன்.

உடனே உத்தரன், விசித்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என்னும் வடதிசை மன்னர்கள் மனங்கலந்த கேண்மையர்களாகிய கனகவிசயர்களுடன், "தமிழ் நாட்டு வேந்தனுடைய ஆற்றலைக் காண்போம்," என்று கடல் போன்ற சேனை புடைசூழ வந்து எதிர்த்தார்கள். செங்குட்டுவன், அரிமா யானைகளின் கூட்டத்தின்மேற் பாய்ந்தாற் போல அச்சேனைகளின் மேற்பாய்ந்து அழித்துத் தும்பை மாலையைச் சூடினுன். கனகனும், விசயனும், நூறுதேர் வீரர்களும் செங்குட்டுவன் கையில் அகப்பட்டார்கள். மற்றவர்கள் துறவிகளாகவும், பாணர்களாகவும், கூத்தர்களாகவும் வேடம் பூண்டு பல இடங்களிலும் ஓடி ஒளித்தார்கள்.

பிறகு செங்குட்டுவன், 'வட திசையிலுள்ள அந்தணர்களைச் சென்று காப்பாற்றுமின்,' என்று வில்லவன்கோதை என்னும் அமைச்சனுடன் பல வீரர்களை அனுப்பிப் பத்தினித் தெய்வத்திற்குப் பொற்கோட்டிமயவரையிற் கல்கொண்டான்.

---

27. கல்லை நீர்ப்படை செய்தல்.

"தேவாசுர யுத்தம் பதினெட்டாண்டினும், இராமாயண யுத்தம் பதினெட்டு மாதத்திலும், பாரத யுத்தம் பதினெட்டு நாளிலு முடிந்தன. செங்குட்டுவனும், கனக வியசர்களும் செய்த போர் பதினெட்டு நாழிகையில் முடிந்தது," என்று யாவரும் புகழும்படி வெற்றி பெற்ற செங்குட்டுவன் அக்கடவுட்சிலையைக் கனக விசயர்களின் தலையிலேற்றிக் கங்கையின் வட கரையில் வந்து, அச்சிலையை நூன் முறைப்படி கங்கையில் நீர்ப்படை செய்தான். பின்னர்ச் சேனைகளோடு மரக்கலங்களிலேறித் தென் கரையில் வந்து, ஆரிய மன்னர்களால் அமைக்கப்பட்ட பாசறையில் தங்கினான். போரில் இறந்த வீரர்களின் மைந்தர்களுக்கும், ஆண்மையுடன் பகைவர்களை எதிர்த்து வென்ற வீரர்களுக்கும் பொன்னாற் செய்த மலர்களாலாகிய வெற்றி மாலைகளைக் கொடுத்தான்.

அப்போது கங்கையில் நீராடி வந்த மாடலன் என்னும் மறையோன், அரசன் ஓலக்கத்தை யடைந்து, "அரசே! வாழ்க. மாதவி கடற்கரையிற் பாடிய பாட்டுக் கனக விசயர்களின் முடித்தலைகளை நெறித்தது," என்று கூறினான். அரசன், "இங்குள்ள பகை வேந்தர்கள் அறியாதபடி நகை மொழி கூறினாய். நீ கூறிய உரைப் பொருள் யாது?" என்றான்.

மாடலன், "கடல் விளையாட்டில் மாதவி பாடிய பாட்டால் கோவலன் பிணங்கி, அவளை விட்டு நீங்கிக் கண்ணகியுடன் மதுரையை யடைந்து, பாண்டியன் நெடுஞ்செழியனால் கொலையுண்டான். பிறகு அந்நெடுஞ்செழியன் வானெய்தக் கண்ணகி நின்னாடு புகுந்து, வடதிசை மன்னர்தம் மணிமுடியேறினள்," என்று அம்மொழியின் பொருளை விளக்கினான். பின்பு மாடலன் தன் வரலாற்றைக் கூறத்தொடங்கி, "அரசே! யான் பொதிய மலையை வலங்கொண்டு குமரியில் நீராடி வருகையில் பாண்டிய நாட்டை யடைந்து, கோவலன் கொலையுண்டதையும், பாண்டியன் தேவியுடன் உயிர் துறந்ததையும் அறிந்து மீண்டேன். மீளுகையில் ஆயர்பாடியில் மாதரி, 'என்பால் கவுந்தியடிகள் அடைக்கலமாக வைத்த மக்களை இழந்தேனே!' என்று வருந்தி, எரியிடைமூழ்கி இறந்ததையும் கவுந்தியடிகள், பாண்டியன் இறந்து விட்டமையின் அவனைச் சபிக்காமல் உண்ணா நோன்பு கொண்டு உயிர் நீத்ததையும் உணர்ந்தேன். பின் புகார் நகரடைந்து சிலருக்கு அச்செய்திகளைத் தெரிவித்தேன். கோவலன் தந்தையும், கண்ணகியின் தந்தையும் அச்செய்திகளை யுணர்ந்து, பெருந்துன்பமெய்திப் பௌத்த சந்நியாசிகளானார்கள். கோவலன் தாயும், கண்ணகியின் தாயும் ஆற்றொணாத துயரால் ஆவி நீத்தார்கள். மாதவி அத்துயரம் பொறாமல் மாலையையும், கூந்தலையுங் களைந்து பௌத்த பிக்குணியாயினள். என் சொல்லாற் சிலர் இறந்தமையின் அப்பாவம் நீங்கக் கங்கையில் நீராடி வந்தேன். வாழ்க வேந்தே! இதுவே என் வரலாறு," என்று கூறினான்.

இவற்றை யெல்லாங் கேட்டுச் செங்குட்டுவன் மாடலனை நோக்கிப் 'பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்த பின் பாண்டிய

நாடு என்னாயிற்று?' என, மாடலன், "அரசே! கொற்கையி லிருந்த இளவரசனாகிய வெற்றிவேற்செழியன், ஆயிரம் பொற் கொல்லரைப் பத்தினித் தெய்வத்திற்குப் பலியூட்டி, அரியா சன மேறி அரசு செலுத்தி வருகின்றான்," என்றான்.

அப்போது மாலையாயிற்று. வானிற் பிறைச்சந்திரன் தோன்றினான். கணிதன் அரசனை நோக்கி, "வாழ்க வேந்தே! நாம் வஞ்சிமா நகரை விட்டுப் புறப்பட்டு இன்றுடன் முப்பத் திரண்டு திங்களாயின," என்றான். உடனே அரசன் மண்டப மடைந்து சிங்காதனத்தில் வீற்றிருந்து, மாடலனை அழைத்து வரும்படி வாயிலாளரை யனுப்பினான். மாடலன் வர அரசன் அவனை நோக்கி, "என் மைத்துனன் பெருங்கிள்ளியோடு பகை கொண்ட இளவரசர்கள் இறந்த பிறகு அவனது செங் கோல் நன்கு நடக்கின்றதா?" என்றான். மாடலன், "வேந்தே வாழ்க! விண்ணிலியங்கிய மதில்கள் மூன்றையும் விண்ணவர் வியக்கும்படி அழித்த வீரச்செயலையுடைய சோழர்களின் செங்கோல் திரிந்து வேறாகுங்காலமு முண்டோ?" எனச் செங்குட்டுவன் மகிழ்ந்து, தன் நிறையாகிய ஐம்பது துலாம் நிறையுள்ள ஆடகப் பொன்னைக் கொடுத்து, ஆரிய மன்னர்க ளாகிய நூற்றுவர் கன்னர்களை, 'உங்கள் நாட்டிற்குச் செல்லுங் கள்' என்றனுப்பி, ஐந்நூறு தூதர்களை விளித்துச் 'சிறைப் பட்ட கனக விசயர்கள் முதலிய ஆரிய மன்னர்களை இரு பெரும் வேந்தர்கட்கும் காட்டி வாருங்கள்,' என்று கட்டளை யிட்டு, நீலன் மாடலன் என்பவர்களுடன் செலுத்தி, அணி மிகு பஞ்சணையில் துயில் கொண்டான். மறு நாள் சேனையோடு புறப்பட்டுத் தன் தேவி வேண்மாள் கண்களிகூரவும், வலம்புரி முழங்கவும், நகர மாந்தர் எதிர் கொள்ளவும் வந்து தன்னகரில் புகுந்தான்.

28. கல் நட்டுக் கண்ணகியை அதில் பிரதிட்டை செய்தல்.

செங்குட்டுவன் தன் கோயிலை யடைந்து, தேவி வேண் மாளுடனும், மற்றவர்களுடனும் அளவளாவி இருந்தான். ஒரு நாள் அவ்வெற்றிவேல் மன்னன் தன் ஓலக்க மண்டபத்தில் வீற்றிருக்கையில் நீலன், மாடலன் முதலியோருடன் வந்து, "சூழ் கழல் வேந்தே! போரில் தோற்றுத் தாபத வேடங் கொண்டு ஓடிய இவர்களைப் பிடித்துக் கொண்டு வந்தது வீரமன்று' என இருபெரும் வேந்தரும் இகழ்ந்தனர்," என்று கூறினான்.

உடனே அம்மன்னர் மன்னனுடைய தாமரைக் கண்கள் சிவந்தன. மன்னன் கோபத்தினால் புன்னகை புரிந்தான். குறையாத கேள்வியினையுடைய மாடலன் எழுந்து, "மன்னர் மன்ன! வாழ்க நின் கொற்றம். நீ வையங்காவல் பூண்டு ஐம்பதாண்டுகளாயின. இது காறும் நீ செய்த போர்களோ பல. இன்னும் அறக்களவேள்வி புரியாது மறக்களவேள்வியே புரிந்து கொண்டிருத்தல் நின்னறிவுடைமைக்கு ஏற்றதன்று. இது காறும் எத்தனையோ வென்றி வேந்தர்கள் இறந்து போனார்கள். அதனால் மன்னுயிர்களின் யாக்கை நிலையாமையைக் கண்டனை. செல்வ நிலையாமையை இவ்வாரிய மன்னர் பால் கண்டனை. நின் நரை முதிர் யாக்கையால் இளமை நிலையாமையையும் ஓர்ந்தனை. இனி நீ வீடு பேற்றைக் கருதி அறக்கள வேள்வி புரிதல் வேண்டும்.

"நாளைச் செய்குவ மறமெனி னின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்.
இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்

முதுநீ ருலகின் முழுவது மில்லை.
ஊழியோ டூழி யுலகங் காத்து
நீடுவா ழியரோ நெடுந்தகை,"

என்று கூறினன்.

அந்த மறையவன் தன் நாவாகிய ஏரால் உழுது, அரசன் செவியாகிய வயலில் விதைத்தவான் பொருள்களாகிய விதைகள் நன்கு முளைத்து முற்றித் துய்க்கும் பதமுற்றன. பிறகு மன்னன், ஆரிய மன்னரைச் சிறையினின்று விடுத்து, 'நம்முடைய வேள்வி முடிந்த பின்னர் நீவிர் நும்பதிக்கேகுக,' என்று கூறி அவர்களை வேளாவிக்கோ என்னும் மந்திரியின் மாளிகையிலிருத்தி, அவர்களுக்கு வேண்டுவன செய்யும்படி வில்லவன் கோதை என்னும் அமைச்சனுக்குக் கட்டளையிட்டான். பின்பு அழும்பில்வேள் என்னு மந்திரியையும், சில ஒற்றர்களையும் அழைத்துச் சிறைச்சாலையில் அடைப்பட்டிருப்பவர்களை யெல்லாம் விடுவிக்கும்படி உத்தர விட்டான்.

பிறகு அவ்வமைச்சர்களை நோக்கி, "அறநெறி அந்தணர், புரோகிதன், கணிதன், கம்மியர் தம்மோடு சென்று, சிற்பிகள் நன்கமைத்த பத்தினிக் கோயிலில் சிற்பிகளால் மிக்க திறமையுடன் செய்யப்பட்ட பத்தினித் தெய்வத்தின் படிமத்தில் நல்ல அணிகளைப் பூட்டி, அருச்சனை செய்து, எண்டிசைத் தெய்வங்களைக் கடை வாயிலில் நிறுத்தி, ஓமங்களும், திருவிழாக்களும் நடக்கும்படி ஏற்பாடு செய்து, பத்தினித் தெய்வத்தை அப்படிமத்திலே பிரதிட்டை செய்யுங்கள்," என்று கட்டளை யிட்டான். அவர்களும் அங்ஙனமே செய்து முடித்தார்கள்.

29. வாழ்த்துதல்.

கோவலன் உயிரிழந்த செய்தியை மாடலன் என்னு மறையோனால் உணர்ந்து, கோவலன் தந்தை மாசாத்துவான் துறவு மேற்கொண்டமையாலும், கோவலன் தாய் உயிர் விட்டமையாலும், கோவலன் செவிலித்தாயும், அடித்தோழியும் தேவந்தியும் ஒன்றுகூடி மிகவும் வருந்திக் 'கண்ணகியைக்காண் போம்,' என்று மதுரைக்கு வந்தார்கள்; மதுரை எரிந்திருத் தலைக்கண்டு மாதரியின் வீட்டிற்குச் சென்றார்கள். மாதரி, அடைக்கலப்பொருளாகிய கோவலன் கொலையுண்டதைக் கேட்டு உயிர் துறந்தனள் என்பதைக் கேட்டிரங்கி, அவள் பேரன்பைப் புகழ்ந்து, ஐயையுடன் கூடிப் புறப்பட்டு வையையாற்றின் கரையையே வழியாகக்கொண்டு சென்று, திருச்செங்குன்று என்னு மலையை யணுகி, அதிலேறிக் கண்ணகியின் கோயிலை அடைந்தார்கள். அடைந்த அந்நான்கு பெண்டிர்களும் அங்கு அப்பத்தினித் தெய்வத்தை வணங்கி நின்ற செங்குட்டுவனைக் கண்டு, 'வேந்தே! வாழ்க,' என வாழ்த்தித் தாம் இன்னார் என்பதைத் தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது பொற் சிலம்புகளும், மேகலையும், வளைகளும், வயிரத்தோடுகளும் அணிந்த மின்னற்கொடி போன்ற ஒரு தெய்வ வடிவம் திடீரென வானிற் றோன்றியது. செங்குட்டுவன் அத் தெய்வ வடிவத்தைக் கண்டு வியப்படைந்து, "என்னே யிஃ தென்னே யிஃதென்னே யிஃதென்னே!", என்று கூறி நின்றான். அப்போது பத்தினித் தெய்வமாகிய கண்ணகி, "தென்னவன் தீதிலன். அவன் தேவர் கோமான் கோயிலில் நல்ல விருந்தினனா யிருக்கின்றான். நான் இத் தெய்வ யாக்கையைப் பெறுதற்குக் காரணமானவன் அவனாதலால் யான் அவன்

மகளே. யான் இக்குன்றில் விளையாடுதலை என்றும் விட்டகலேன். தோழியீர்! எல்லீரு முன்போல் என்னோடு விளையாட வாருங்கள்,'' என்று கூறியருளினள்.

அதைக் கேட்டு வஞ்சி நகரத்துப் பெண்கள்,

''செங்கோல் வளைய உயிர்வாழார் பாண்டியரென்
றெங்கோ முறைநா வியம்பவிந் நாடடைந்த
பைந்தொடிப் பாவையைப் பாடுதும் வம்மெல்லாம்
பாண்டியன் தன்மகளைப் பாடுதும் வம்மெல்லாம்,''

என்று அப்பத்தினித் தெய்வத்தை ஏத்தி,

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங் காத்த வுரவோன்யா ரம்மானை
ஓங்கரணங் காத்த வுரவோ னுயர்விசும்பில்
தூங்கெயின் மூன்றெறிந்த சோழன்கா ணம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோ ரம்மானை,''

என்று சோழனையும்,

''பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைக ளார்ப்ப வார்ப்ப வெங்கணும்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சேர்ந்துபந் தடித்துமே
தேவ ரார மார்பன் வாழ்க வென்றுபந் தடித்துமே

என்று பாண்டியனையும்,

ஒரைவ ரீரைம் பதின்ம ருடன்றெழுந்த
போரிற் பெருஞ்சோறு போற்றாது தானளித்த
சேரன் பொறையன் மலையன் றிறம்பாடிக்
கார்செய் குழலாட ஆடாமோ வூசல்
கடம்பெறிந்த வாபாடி ஆடாமோ வூசல்,''

என்று சேரனையும் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

30. பத்தினித் தெய்வமாகிய கண்ணகி வரந்தருதல்.

பிறகு தேவந்தி தெய்வமுற்றுக் கூந்தல் அவிழ்ந்து பின் வீழவும், புருவந் துடிக்கவும், செவ்வாய் மடித்து எயிறு அரும்பவும், வாய் குழறவும் முகம் வியர்க்கவும், கண்கள் சிவக்கவும் கைகளை மேலேஉயர்த்தி ஆடினாள். அதனைக்கண்டவர்கள் எல்லாம், 'இஃதென்ன?' என்று மயங்கினார்கள். அப்போது அத் தேவந்தியின் மேலுற்ற தெய்வம் மாடலனை நோக்கி, "யான் பாசண்டச் சாத்தன்; இத் தேவந்தியின்மீது ஆவேசித்து வந்துளேன். பத்தினித் தெய்வமாகிய கண்ணகியின் மங்கலப் பிரதிட்டையைக் காணும் பொருட்டு வந்த பெண்களுள் அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்களாகிய இருபெண்களும், திருவநந்தபுரத்திலே அரவணையில் அறிதுயில்கொண்ட பெருமானுக்கு அருச்சனைபுரியும் மறையோனது பெண்ணும் இங்கு வந்திருக்கின்றார்கள். நான் முன்னே உன் கையில் கொடுத்த தீர்த்தத்தை இந்த மூன்று பெண்களின் மீதுந்தெளி. மங்கலாதேவியின் மலையில் பல தடாகங்களுக்கிடையில் ஒரு சுனை யிருக்கின்றது. அதில் நீராடினோர் முன்னைப்பிறவியின் உணர்ச்சியைப் பெறுவர், அதிலிருந்து கொண்ட தீர்த்தமது" என்றது.

அரசன் அதனைக்கேட்டு, மாடலனை நோக்க, மாடலன், "வாழ்க வேந்தே! முன்னொரு நாள் மாலதி என்னும் பார்ப்பனி ஒருத்தி தன் மாற்றாள் குழந்தைக்குப் பால் கொடுக்கையில் ஊழ்வலியால் அக்குழந்தை இறந்தது. அதனால் தன் மாற்றாளும், கணவனும் தன்னைப் பழிப்பார்களே என்றஞ்சி, மாலதி பாசண்டச் சாத்தன் கோயிலிற் சென்று வருந்திக்கிடந்தாள். அப்போது சாத்தன் அக்குழவியின் உருவாய் அவள் முன் கிடந்து, 'அன்னாய்! நான் வந்தேன். உன் துயரை ஒழிப்பாயாக,'

என, மாலதி அக்குழந்தையைக் கொண்டு மாற்ருள் கையிற் கொடுத்து மகிழ்ந்தாள். அவன் வளர்ந்து காளைப் பருவம் அடைந்து, இப்போதுதான் ஆவேசித்துள்ள இந்நங்கையை மணந்து எட்டாண்டு இவளுடன் வாழ்ந்து வந்தான். பிறகு தன் உண்மையை இவளுக்குக் கூறித் தீர்த்தமாடச் செல்பவன் போலச் சென்று தன் கோயிலுக்குப் போய் விட்டான். பின்பு இவள் அவன் கோட்டத்திற்குச்சென்று, அவனைப்பூசித்துக் கொண்டிருந்தாள். அங்ஙனஞ் சென்ற சாத்தன், ஒரு சமயம் நான் மங்கலாதேவியின் கோயிலுக்குச் சென்றிருந்தபோது இவ் வுறியில் உள்ள கரகத்தை என் கையில்தந்து சென்ருன். அவன் மீண்டும் வாராமையின் அக்கரகத்தை யான் எடுத்துக் கொண்டுவந்து விட்டேன். இப்போது இம் மங்கையின்மீது தோன்றி எனக்கு இக் கட்டளையை இட்டவன் அம்மகா சாத்தனே யாதலின் அவன் கட்டளைப்படியே இப் பெண்க ளின்மேல் இந் நீரைத்தெளித்துப் பார்க்கலாம்," என்று கூறி, அந் நீரை அப்பெண்களின்மேல் தெளித்தான். உடனே அப் பெண்களுக்கு முற்பிறப்பின் உணர்ச்சி உண்டாயிற்று. அவ ர்களுள் ஒருத்தி, 'யான் பெற்ற மகளே! நின் நாயகனுடைய தீய ஒழுக்கத்திற்காக இரங்கும் என்னையும் நோக்காமல் நின் கணவனுடன் அயல் நாடு சென்று கடுந்துன்பத்தை யடைந் தாய்! என் பெருந்துயரத்தை நீக்கு மாதே! வாராய்," என்று அரற்றினள்.

மற்ெருருத்தி, 'என்னுடனிருந்த நங்கையாகிய நின் மனைவி யுடன் நள்ளிரவில் நீ தனியாகக் காட்டின் வழியிலே வருந்திச் சென்றதற்காக என் மனம் மிகவும் வருந்துகின்றது. யான் அது பொறேன் மகனே! வாராய்," என்று புலம்பினுள்.

வேறொருத்தி, "வையை யாற்றிலே நீராடச்சென்ற யான், நீ கொலையுண்டாய் என ஊரார் சொல்லக்கேட்டு, விரைந்து மனைக்கு வந்தேன். அதற்கேற்ப உன்னை மனையிற் காணேன். எந்தாய்! இளையாய்! நீ எங்கொளித்தாயோ?" என்றழுதாள்.

அப்பெண்கள் மூவரும் அங்ஙனம் வருந்துதலைக் கண்ட மன்னன், மாடலன் முகத்தை நோக்க, மாடலன், "கோவே! கண்ணகியின் நற்றாயும் கோவலன் நற்றாயும் கண்ணகியின்பால் மிக்க அன்புடையவர்கள். ஆயினும் அவர்கள் அவளுடன் வானுலகஞ் செல்லுதற் கேற்ற புண்ணியஞ் செய்திலர்களாத லின் அப்பத்தினித் தெய்வம் நீங்காமல் எழுந்தருளியுள்ள இப் பதியில் அரட்டன் செட்டியின் பெண்களாய்த் தோன்றினார் கள். ஆயர் முது மகளாகிய மாதரி இவ்வரிய தெய்வத்தின்மேல் வைத்த அன்பினால் திருவநந்தபுரத்தில் அரவணையிலே அறி துயிலமர்ந்தருளிய பெருமான் திருவடிகளை அருச்சிக்கும் அந்தணன் மகளாய்ப் பிறந்தனள்.

"நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவ தன்றே தொன்றியல் வாழ்க்கை."

நெடுந்தகை வேந்தே! நீ சிவபெருமானருளால் உலகில் தோன்றி உலகை விளக்கிய மன்னனாகலின் செய்தவப் பயன்களையும், சிறந்தோர் படிவத்தையும் கையகத்தனபோற் கண்டனை. ஊழி தோறூழி யுலகங்காத்து நீடுவாழியரோ," என்று கூறினான்.

அதன் பிறகு செங்குட்டுவன்; பத்தினிக் கோட்டத்திற்கு மானியமாகப் பல நிலங்களைக் கொடுத்துப் பத்தினித் தெய்வத்

தினுக்குப் பூ, புகை, விரை முதலியவற்றைக் கொண்டு நித்திய பூசை செய்யும்படி தேவந்தியை ஏற்படுத்தினன். பிறகு மன்னன், பத்தினித் தெய்வமாகிய கண்ணகியின் கோட்டத்தை மும்முறை வலம்வந்து வணங்கி நின்றான். சிறையினின்று விடுவிக்கப்பட்டவர்களாகிய ஆரிய மன்னர் முதலிய மன்னர்களும், குடக நாட்டுக் கொங்க அரசர்களும், மாளுவ வேந்தர்களும், கடல் சூழிலங்கைக் கிறைவனாகிய கயவாகுவும், "உனக்கு இந்நாட்டில் இம் மன்னன் செய்த மங்கல வணியுள் நீ எழுந்தருளியதுபோல எங்கள் நாட்டில் நாங்கள் செய்யும் மங்கல வணியிலும் எழுந்தருளுதல் வேண்டும்," என்று வேண்டினார்கள். அப்போது, 'வரந்தந்தேன்,' என்று ஒரு குரல் வானில் எழுந்தது. அதைக் கேட்டுச் செங்குட்டுவன் முதலிய மன்னர் அனைவரும் மகிழ்ந்தார்கள். பிறகு செங்குட்டுவன் மற்றை வேந்தர்களோடும், மாடலனோடும் யாகசாலைக்குச் சென்றான்.

பிறகு இளங்கோவடிகள், பத்தினித் தெய்வத்தின் கோயிலினுட் சென்றார். பத்தினித் தெய்வமாகிய கண்ணகி தேவந்திமேற்றோன்றி, "உங்கள் தந்தையாகிய சேரலனிடத்தே நீ யிருக்கையில் அங்கொரு நிமித்திகன் வந்து உன்னைப் பார்த்து, 'உன்னிடம் அரசு வீற்றிருக்கும் இலக்கணம் உண்டு,' என்று சொல்ல, 'என் தமையனாகிய செங்குட்டுவன் இருக்க நீ யிவ்வாறு முறைமை கெடச் சொன்னாய்,' என்று அந் நிமித்திகனை வெகுண்டு நோக்கிக் கூறிக் குணவாயிலில் அரசு துறந்திருக்கின்ற கடவுள் நீ. நின் தமயனாகிய செங்குட்டுவனுக்கு அரசியலில் யாதொரு துன்பமும் நேராதபடி சிந்தை செல்லாத சேய்மையதாகிய அந்த மில்லரசை ஆளுதற்குரியனாய் விளங்

கும் வேந்தனல்லையோ நீ?" என்று முன் நிகழ்ந்ததும், பின் நிகழ்தற்குரியதுமாகிய அவரது செய்திகளைக் கூறினாள்.

"பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்.
தெய்வந் தெளிமின். தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுறை யஞ்சுமின். புறஞ்சொற் போற்றுமின்.
ஊனூண் துறமின். உயிர்க்கொலை நீங்குமின்.
தானஞ் செய்ம்மின். தவம்பல தாங்குமின்.
செய்ந்நன்றி கொல்லன்மின். தீநட் பிகழ்மின்.
பொய்க்கரி போகன்மின். பொருள்மொழி நீங்கன்மின்.
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்.
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்.
பிறர்மனை யஞ்சுமின். பிழையுயி ரோம்புமின்
அறமனை காமின். அல்லவை கடிமின்.
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்.
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா.
உளநாள் வரையாது, ஒல்லுவ தொழியாது,
செல்லுந் தேத்துக் குறுதுணை தேடுமின்."

அரும்பதவுரை.

பக்கம் 1.

சங்கமுகம்-காவிரிகடலோடு கலக்கும் இடம்.

கரிகால் வளவன்-(நெருப்பினால்) கரிந்த காலையுடைய சோழன் (வளம்-செல்வம், சேர பாண்டிய அரசர்களை விடச் சோழ அரசர்கள் செல்வத்திற் சிறந்தவர்களாதலின் அவர்களுக்குப் பொதுவாக வளவர் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.) கரிகால் வளவனைக் கரிகால் பெருவளத்தான் என்றும் நூற்கள் கூறும்.

வீற்றிருத்தல்-மேன்மையோடிருத்தல்.

அறிகுறி-அடையாளம்.

வாணியம்-வியாபாரம்.

பக்கம் 2.

வறுமை-தரித்திரம்.

மரபு-வமிசம்,

ஈகை-கொடை. (கொடுத்தல்)

திருமகள்-இலக்குமி (திருவாகிய மகள்; இருபெயரொட்டுப்பண்புத்தொகை.)

புவி-பூமி.

வாய்ந்தவன்-பெற்றவன்.

பக்கம் 3.

மகளிர்-பெண்கள்.

அணிகள்-ஆபரணங்கள்.

நீலவிதானம்-நீலநிறமாகிய மேற்கட்டு.

புரோகிதன்-கிருத்தியம் பண்ணுவிப்போனாகிய பார்ப்பான். (முன்னேவைக்கப்பட்டவன் என்பது சொற்பொருள்.)

மாதர்கள்-பெண்கள்.

முளைப்பாலிகை - முளையிட்டு வைத்த வட்டம்.

பொலிவதாக-விளங்கக்கடவது, (வியங்கோள் வினைமுற்று.)

அறு சுவை-அறுவகையாகிய ருசி. (அவை: (1) கார்ப்பு, (2) இனிப்பு, (3) புளிப்பு, (4) கைப்பு, (5) உப்பு, (6) துவர்ப்பு, என்பன.)

களி கூர்ந்து-சந்தோஷ மிகுந்து.

விடை கொண்டு-விடை பெற்று.

பக்கம் 4.

கொழுநன்-நாயகன் (கொழுமையைச் செய்பவன்)

பைங்கூழ்-பசுமையாகிய பயிர்.

நலன்-நன்மை (நலம்-நலன்: மகாரத்துக்கு னகாரம் போலி.) (மாசறு என்னுஞ் செய்யுள்.)

மாசு அறு-குற்ற மற்ற.

காசு அறு-குற்ற மற்ற

விரை-வாசனை.

அரும் பெறல்-(பெறல் அரும்) பெருதற்கரிய.

பாவாய்-பெண்ணே!(பாவை-பதுமை; அது உவமை ஆகு பெயராய் அதைப்போலும் அழகினையுடைய பெண்ணை உணர்த்தி விளிவேற்றுமை எற்றுப் பாவாய் என்றாயிற்று.)

ஆருயிர் மருந்தே-அருமையாகிய உயிரைக்காத்தற்குரிய மருந்து போன்றவளே!.

பெருங்குடி-பழமையாகியசெல்வ முதலியவற்றுள் சிறந்த குடி. (இது பெருமையாகிய குடி என்றாதலின் பண்புத் தொகை).

பெருமடம்மகள் - மேன்மையாகிய குணங்களையுடைய இளம் பெண்(பெருமைஎன்பது இங்குப் பெருமையாகிய குணங்களை உணர்த்தி நின்றது.)

மணியே-இரத்தினமே.

அலை-திரை; (அது இங்குச் சினையாகு பெயராய்க் கடலை உணர்த்தியது.)

அமிழ்து-அமிர்தம் என்பது திரிந்தது; சாவின்மையைச் செய்வது என்பது பொருள்.

யாழ்-ஒருவகை வீணை.

இசை-இராகம்.

தாழ் இருங் கூந்தல் - மிகவும் நீண்ட பெரிய கூந்தல்.

தையால்-பெண்ணே!

ஏவலாளர்-ஏவிய தொழிலைச்செய்பவர்.

பேணுதல்-உபசரித்தல்.

அறவோர்கள்-துறவறத்தினர்களாகிய பெரியோர்கள்.

பக்கம் 5.

போற்றல்-ஆதரித்தல்.

நாடகக் கணிகை-நாடக மாடுதலையுடைய வேசை.

பயின்று-கற்று.

ஆடல் ஆசிரியன்-ஆடுதலைக் கற்பிக்கும் ஆசிரியன்

இசை ஆசிரியன்-இசையைக் கற்பிக்கும் ஆசிரியன்

கவிஞன்-நாடக் கவிகளை இயற்றிக் கற்பிப்பவன்

குழுமி-கூடி

ஆடுஅரங்கம்-நடனசாலை

குழல்-புல்லாங்குழல்

குடமுழா-ஒருவகை மேளம்

தேசிகக்கூத்து-ஒருவகைக்கூத்து

வடுகக்கூத்து-ஒருவகைக்கூத்து

அவிநயம்-நடிக்கையில் கைமுதலியவற்றால் கருத்துத் தோன்றும்படி செய்யுஞ் செய்கை

காவலன்-அரசன்

பக்கம் 6.

கழஞ்சு-பன்னிரண்டுபண எடைகொண்ட ஒரு நிறுத்தலளவை

பற்றுக்கோடு - பற்றுதற் குரிய கொம்பு

சீறடி-(சிறுமை + அடி)சிறியபாதம்.

அஞ்சனம்-மை

நுதல்-நெற்றி

திலகம்-பொட்டு

புழுகு-புனுகு.

நெய்-பெண்கள் கூந்தலுக்குப் பூசும் தைலம்.
தவளம்-வெண்மை
வாள்-ஒளி
நகை-சிரிப்பு

பக்கம் 7.

மசவு-குழந்தை
நலம்-நன்மை
புற நகர்-வெளி நகரம்
அக நகர்-உள் நகரம்
நிலா முற்றம் - மாடியில் நிலவின் வெளிச்சத்தில் தங்குதற் கமைந்த வெற்றிடம்.
அணிகள்-ஆபரணங்கள்.
சரக்கறைகள்-அணிகள் முதலிய பொருள்களையுடைய அறைகள்
சரக்கு-பொருள்
வண்ணம் - தொய்யில் எழுதும் வண்ணம் (தொய்யிற் குழம்பு என்றலுமாம்.)
தொய்யில்-உடலில் எழுதும் ஒரு வகைக் கோலம்
சுண்ணம்-வாசனைப் பொடி
புகைப் பொருள்-நறுமணந் தரும் புகையை உண்டாக்குதற்குரிய பொருள்கள்(அவை அகிற்கட்டை முதலியன)
வாசனைப் பொருள்-மற்றும் பல வகைவாசனைப் பொருள்கள்

பக்கம் 8.

மணிகள்-ஆபரணங்கள்
இறுங்கு-சோளம்.
தோரை-ஒரு வகை நெல்(மதுரைக் காஞ்சி287அடி)
கூலம்-தானியங்கள் (கூலம் எண் வகை அவை: நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, மூங்கில்நெல் என்பன. எள், கொள், பயறு, உளுந்து, அவரை. கடலை, துவரை, மொச்சை, என்பவற்றையுங் கூட்டிக்கூலங்கள் பதினறுவகை என்பது முண்டு.
குலவும்-விளங்கும்.
ஒருபுடை-ஓரிடத்தில்.
ஒருபால்-ஒரு பக்கம்.
செம்பு சொட்டிகள்-செம்பைத் தகடுகளாகத்தட்டிப்பலவகைக் கலங்கள் செய்பவர்கள்.
சிற்பாசாரிகள்-சிற்பிகளில் தலைவர்கள்.
தோலின் துன்னர்-தோலினால் செருப்பு முதலியன தைப்பவர்கள்.
உறைவர்-வசிப்பார்கள்
தொளைக்கருவிகள்-புல்லாங்குழல் முதலியன
நரப்புக்கருவிகள்-யாழ் முதலியன.
அளவளாவி-மனங் கலந்து
ஒரு புறம்-ஒரு பக்கம்

பக்கம் 9.

பஞ்சகிராமிகள்-பார்ப்பார்
வியன்-பெருமை
வியன் பெருந்தெருக்கள்-மிகவும் பெரிய தெருக்கள்

சூதர்-நின்று புகழ்பவர்
மாகதர்-இருந்து புகழ்பவர்
வைதாளி பாடுவார்-துயிலெழப் பாடுபவர்
வேழம்பர்-கழைக்கூத்தர்
பாசறை-படை வீடு
இடையூறு-தடை
தேவர்கோன்-தேவர்களுக்கு அரசன் (இந்திரன்)
மறக்குடி மகளிர்-மறவருடைய குடியிற் பிறந்த பெண்கள்
புழுக்கல்-அவரை, துவரைமுதலியன (இவைபுழுக்கப்படுவனவாதலின் புழுக்கல் எனப்பட்டன)
புழுக்கல்-வேவித்தல்
நிணச் சோறு-இறைச்சியின் கொழுப்புக் கலந்த சோறு

பக்கம் 10.

குரவைக் கூத்து-ஒருவகைக் கூத்து (அது கைகோத்தாடுவது)
மன்றங்கள்-சபைகள்
பட்டிமண்டபம்-கற்றவரிருந்து உபந்நியாசஞ்செய்யுமண்டபம்
புகார்-காவிரிப் பூம்பட்டினத்தின் மற்றொரு பெயர்
நிருமிக்கப்பட்டது-அமைக்கப் பட்டது
நல்லிசைப் புலவர்கள்-சிறந்த புகழினையுடைய புலவர்கள்
தொழுநோயாளர்கள்-பெருநோய் உடையவர்கள்

பக்கம் 11.

பேய் கோட்பட்டவர்கள்-பேயினாற் பிடிக்கப்பட்டவர்கள்
கோடினும்-தப்பினாலும்
பிறழினும்-மாறுபட்டாலும்
பொய்க்கரி-பொய்ச் சாக்ஷி
கடிய-கொடிய (கடுமையையுடைய என்பது. இது குறிப்புப் பெயரெச்சம்.)
பூதசதுக்கம் (தீமை செய்வாரைப் புடைத்துண்ணும்) பூதநிற்கும் நாற் சந்தி (நாற்சந்தி-நான்கு சந்துகள் கூடும் இடம்.)

பக்கம் 12.

அயிராவதக்கோட்டம்-(இந்திரனது பட்டத்து யானையாகிய) அயிராவத யானையின் கோயில்
கிம்புரி-கொம்பிலணியும் பூண்
ஐம்பெருங்குழு-அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், ஒற்றர்.
எண்பேராயம்-அமைச்சர், கருமாதிகாரிகள், சுற்றம். கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர்.
பரதகுமரர்-வணிக குமரர்கள்.
கால் தளை-கால் விலங்கு.
மதங்கர்-பெரும்பாணர் (பாணரில் ஒரு பிரிவினர்.)
இசை-இராகத்தின் ஒலி (இசை-இராகம்; அஃதீண்டு அதனாலுண்டாகும் ஒலியை உணர்த்தியது)
முழவு-மேளம்.

பக்கம் 13.

சயல்-ஒருவகை மீன்

புனிதம்-தூய்மை (பரிசுத்தம்)

இடுக்கண்-துன்பம்.

அரிமா அன்ன-சிங்கம் போன்ற

பக்கம் 14.

இணை அற்றவள்-ஒப்பில்லாதவள்.

பக்கம் 15.

சாந்தம்-பலவாசனைப் பொடிகளின் கூட்டு (இது கலவை எனப்படும்) சந்தனம் என்றலுமாம்.

பரிவாரம்-சூழவிருப்போர்.

பக்கம் 17.

சுரங்கள்-இசை உறுப்புகள்.

ஊழ்வினை-முற்பிறப்பிற் செய்த வினை. (அது இப்பிறப்பில் முறையாகவந்து தன் பயனை நுகர்வித்தலின் ஊழ்வினை எனப்பட்டது. ஊழ்-முறை)

ஏவலாளர்-ஏவியதொழிலைச் செய்பவர் (வேலைக்காரர்கள்)

புடைசூழ்ந்து-பக்கத்திற்சூழ்ந்து.

பக்கம் 18.

கூலவாணிகர்-கூலவியாபாரஞ் செய்யும் வணிகர்.

மென்மொழியாய்-மென்மையாகிய சொல்லை உடையவளே!

பக்கம் 20.

எம்முறுநோய்-எம்முடைய பெருந்துயரத்தை.

மாற்றாள்-சக்களத்தி (சககளத்திரி)

பக்கம் 21.

உள்ளக்குறிப்பு-மனக்குறிப்பு.

ஆற்றாதவளாய்-சகிக்காதவளாய்.

ஐயுறுகின்றது-சந்தேகமடைகின்றது (ஐயம்என்பதில் அம் கடைக்குறை)

ஒலாதது-தகாதது.

படிற்றுரை (படிறு - உரை) பொய்யுரை.

பக்கம் 22.

இழிதக்க களு-இழிந்த களு (இழி-பகுதி, தகு-துணைவினை விகுதி-இழிதகு-அனைத்து மொருபகுதி.)

காணின்-கண்டால்

உரையார்-(அறிவுடையார் பிறருக்குச்) சொல்லார்.

பொற்றொடி-பொன்னாலாகிய வளையை அணிந்தவளே (அன் மொழித்தொகை.)

பணிப்பெண்-வேலைக்காரி.

பக்கம் 23.

கடைத்தலை-வாயில்.

அழுங்கி-வருந்தி.

இருநிதிக்குன்றம்-பெருஞ்செல்வமாகியமலை (மலைபோன்ற பெருஞ்செல்வம் என்பது.)

நாண்-வெட்கம்.

ஈட்ட-சம்பாதிக்க.

ஒருப்பட்டாள்-சம்மதித்தாள்.

வைகறை-ஞாயிறு தோன்றுதற்கு முற்பட்டகாலம் (வைகல்-துயிலல், அறை-அறுதல், அனைவருந் துயிலினின்றும் எழுதற்குரிய காலம்)

இடைகழி-வாயில்

புத்தசைத்தியம்-புத்தராலயம் (பௌத்தர்களின் கல்விக் கழகமுமாம்.)

விகாரங்கள்-கையினாலும், கருவியினாலும் பண்ணாமல் மனத்தால் நிருமிக்கப்பட்டவை,

பக்கம் 24.

ஆகாயசாரிகள்-அந்தரத்திலே சஞ்சரிப்பவர்கள்.

சிலாதலம்-கல்லாகிய இடம் (அது வட்டமாயிருத்தலின் சிலாவட்டம் என்று கூறப்பட்டது)

குறுக உயிர்த்து-மெதுவாக மூச்சுவிட்டு.

மென்மலர் அடியாய்-மென்மையாகிய மலர் போன்ற அடியையுடையவளே!

ஒழுக்கம்-நன்னடக்கை.

பக்கம் 25.

குவளை-ஒருவகை நீர்க்கொடி.

பக்கம் 26.

ஐயப்பாத்திரம்-பிச்சைப்பாத்திரம்

மயிற்பீலி-மயிற்றோகை.

பஞ்சமந்திரம்-ஐந்து மந்திரங்கள். (அவை அ, சி, ஆ, உ, சா என்பன)

கிணைபொருநர்-தடாரி என்னும் ஒருவகைப் பறையை வாசித்துப் பாடுவார்

அவதிஞானம்-முற்பிறப்பை அறியும் ஞானம்.

பக்கம் 27.

அருகன்-பூச்சியன்

முக்குற்றங்கள்-மூவகையாகிய குற்றங்கள் (அவை: காமம், வெகுளி, மயக்கம் என்பன.)

ஐம்பொறிகள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன.

புடை பெயர்வது -அசைவது.

பவந்தருபாசம்-பிறவிகளைத் தருந் தளைகள்.

பாசங்கள் அறுக-தளைகள் நீங்குவனவாக.

பக்கம் 28.

தண்ணிய-குளிர்ச்சியையுடைய (குறிப்புப்பெயரெச்சம்.)

வறுமொழியாளன்-பயனில்லாத மொழிகளைப் பேசுகின்றவன்.

வம்பப்பரத்தை-தீச்சொற்களைப் பேசும் வேசி.

நீர்மையல்லாத-நன்மையல்லாத.

உயர்ந்தோர்-கல்வி, யறிவு, ஒழுக்கங்களால் மேம்பட்டோர்.

பக்கம் 29.

மறையோன்-வேதத்தை உணர்ந்தோன் (பார்ப்பான்)

பக்கம் 31.

திரு அமர் மார்பன்-இலக்ஷ்மி பொருந்திய மார்பை உடையவன் (திருமால்)

அநந்தன்-முடிவில்லாதவன் (ஆதிசேஷன்.)

அரவப்பள்ளி-பாம்பாகியபடுக்கை

ஆரம்-மாலை.

வன்கண்மை-கொடுந்தன்மை.

ஓம்பாத-காவாத

பக்கம் 32.

நெறி மயக்கம்-வழியினது மயக்கம் (மயங்கும்படியானவழி)

பேய்த்தேர் - நீரற்றமணல் வெளிகளில் நீர் இருப்பதுபோல் தோன்றும்தோற்றம்(இதனைக் கானனீர் என்றுங் கூறுவர்.)

எயினர்-வேடர்

அருஞ் சுரங்கள்-அரிய காடுகள்

பக்கம் 33.

பொய்கைகள்-குளங்கள்

இட்டசித்தி — இட்டசித்தி என்றுங்குளம். (இது தன்பால் நீராடினோர் விரும்பியவற்றை எய்தச்செய்தலின் இப்பெயர் பெற்றது.)

இட்டசித்தி — விரும்பியவற்றை அடைதல்.

இம்மை-இப்பிறப்பு

மறுமை-மறுபிறப்பு

கோட்டம்-மாறுபாடு

பக்கம் 34.

வட்டிகை-வட்டப்பலகை (சித்திரம் எழுதும் பலகை.)

ஐந்தெழுத்து-பஞ்சாக்ஷர மந்திரம் (நமச்சிவாய என்பது.)

எட்டெழுத்து-அஷ்டாக்ஷர மந்திரம் (ஓம்நமோ நாராயணாய என்பது.)

கருடப்புள்-கருடனாகிய பறவை

பக்கம் 35.

நயமொழிகள்-இனிய மொழிகள்

நெடுமுடி யண்ணல்-நீண்ட முடியினை யுடைய திருமால்

ஓம்புவார்-காப்பவர்

பக்கம் 36.

வெள்ளொளிதிகழும் - வெண்மையாகிய ஒளிவிளங்கும்

வாணிகச்சாத்து-வியாபாரிகளின் கூட்டம்

பக்கம் 37.

அவிப்பலி - ஆடு முதலியவற்றை வெட்டி இடுகின்ற பலி

பலி-தேவருணவு

மூரி-வன்மை

கொற்றவை-துர்க்கை

எயினர் மன்றுகள்—வேடர் இடங்கள்

நிரைகள்-பசுக்கள்

ஆறுஎறிதல்-வழியிலிருந்து அடித்துப் பறித்தல்
சூறை-பதியிற்சென்று கொள்ளையிடல்
ஆகோள்-பசுக்களைக்கவர்தல்
அறக்குடிகளைப்போல — அறவழியில் நிற்குங் குடிகளைப் போல
செருக்கு-கர்வம்

பக்கம் 38.

சடிதியில்-விரைவில்
குமரி-துர்க்கை
குறிதாக-சிறிதாக
செறிந்துள்ள-அடர்ந்துள்ள
(சுடரொடு) என்னுஞ் செய்யுள்.
சுடரொடு திரிதரு-(கதிரவன் வெம்மை உயிர்களை வருத்தாமல் அவற்றைத் தாம் தாங்கி) அவனுடன் திரியும்
முனிவரும்-வாலகில்லியர் என்னும் முனிவர்களும்
அமரரும்-தேவர்களும்
இடர்கெட-துன்பம்நீங்க
அருளும்-அருள்புரியும்
நின் இணையடி-உன்னுடைய இரண்டு திருவடிகளை
தொழுதேம்-வணங்கினேம்

பக்கம் 39.

அடல்-கொலைத் தொழிலினையும்
வலி-வன்மையினையும் (உடைய)
எயினர்-வேடர்கள்
விறல்தருவிலை-(நீ அவர்களுக்குத் தரும்) வெற்றிக்கு விலையாக
நின் அடிதொடு—உன் அடியைத் தொட்டு (உனக்குப் பலிசெலுத்துவதாகச்) சத்தியஞ் செய்த
கடன்-கடனாகிய
மிடறுஉகு குருதி இது—மிடற்றினின்று பெருகும் குருதியாகிய இதனை
கொள்-நீ கொள்வாயாக
(வம்பலர்) என்னுஞ்செய்யுள்
சங்கரி—சங்கரியே (சங்கரி-தன்னடி யடைந்தார்க்குச் சுகஞ் செய்பவள்.)
அந்தரி—அந்தரியே (அந்தரி-பிரமத்தைத் தரிப்பவள்.)
நீலி—நீலியே (நீலி-நீலநிறமுடையவள்)
சடாமுடி-சடையாகிய முடியிலே
செங்கண் அரவு-சிவந்த கண்களை உடைய பாம்பை
பிறையுடன்-பிறைச் சந்திரனோடு
சேர்த்துவாய்-அணிபவளே!
வம்பலர் பல்கி — வழிச்செல்லும் புதியோர்மிக்கு (அதனால்)
வழியும்-வழிகள்தோறும்
வளம்பட—(அவர்களை வருத்திக் கொள்ளும்)செல்வம் உண்டாக
வம்பு உடைவல்வில்-போர் செய்தலையுடைய வலிய வில்லை ஏந்திய
எயினர்கடன்— (வேடர்கள் இடும் வெற்றியின் விலையாகிய) இப் பலிக்கடனை

உண்குவாய்-உண்பாயாக

கொங்கச்செல்வி—கொங்கு நாட்டினை ஆளுஞ்செல்வி

குடமலையாட்டி — குடமலை நாட்டினை ஆளுஞ்செல்வி

தென்றமிழ்ப்பாவை-தென் தமிழ் நாட்டினை ஆளும் பாவை

(மேற்கூறிய நாடுகளில் உள்ள வேந்தர்களாற் பூசித்தற் குரிய தெய்வமாவள் இவள் என்பது இதன் குறிப்பு.)

செய்தவக்கொழுந்து-செய்த தவத்தின்கண் முளைத்த கொழுந்து போல்வாள்

உலகிற்கு-உலகத்தவர்களுக்கு

ஒருமாமணியாய்ஓங்கிய—முழுமாணிக்கம் போன்று உயர்ச்சி பெற்ற

திருமாமணி—பெண்ணுருக் கொண்ட அழகிய சிறந்தமணி

பக்கம் 40.

ஆணாசக்கரம் — ஆணையாகிய சக்கரம்

(ஆணை-கட்டளை.)

அகழ-தோண்ட

சூர்-ஒருவகைத்தெய்வம்

வெங்கதிர்-சூரியன் (வெப்பமாகிய கதிர்களை உடையது, அன்மொழித் தொகை)

தண்கதிர் — சந்திரன் (குளிர்ச்சியாகிய கதிர்களை உடையது. அன்மொழித்தொகை)

உடுக்கூட்டம் — நக்ஷத்திரங்களினது கூட்டம்

புலிமறுகும்-புலி கர்ச்சிக்கும்

குழறும்-கூவும்

இடிக்கும்-அதிர்ச்சி செய்யும்

பக்கம் 41.

சேய்மை-தூரம்

பக்கம் 42.

மணி-இரத்தினம்

பணி-கட்டளை

உறுதி-நன்மை

அமளிமிசை-படுக்கையில்

(அடிகள்முன்னர்)என்னும்பாட்டு

அடிகள் முன்னர்—தேவரீரின் திக்கு நோக்கி

யான்-(அடியவளாகிய)யான்

அடிகள் வீழ்ந்தேன் — அடிகளில் வணங்கினேன் (அடிகளுக்குத் தண்டம் புரிந்தேன்)

வடியாக்கிளவி-(யான்கூறும்)கல்வி தேர்ச்சியில்லாத சொற்களை (மனத்திற் கொண்டருளல் வேண்டும்)

குரவர்பணி அன்றியும்—இருமுதுகுரவருக்குச் செய்யும் தொண்டுகளை ஒழிந்த தல்லாமலும்

குலப்பிறப்பாட்டியோடு — உயர் குடிப்பிறப்பையும் கற்பை ஆளுதலையும் உடையாளோடு

இரவு இடை-இரவின் கண்

பக்கம் 43.

கழிதற்கு—நகரிடையைக்கழிந்து செல்லுதற்குக் (காரணமான)
பிழைப்பு என்-தவறு யாது?
அறியாது-அதனை அறியாமல்
நெஞ்சம்-(என்)மனம்
கையறும்-வருந்தும்
கடியல்வேண்டும்—(அதற்குக் காரணம் என்பிழைப்பு எனினும் மகளிர்சொல் குற்றமற்ற சொல்லென்று திருவுளம்பற்றித் தங்கள்சினத்தைத்) தணித்தல் வேண்டும்
பொய்தீர்காட்சி — குற்றந்தீர்ந்த நற்காட்சியினையுடைய
புரையோய்-பெரியீர்
போற்றி — இவ்வகையினால் உம்முடைய புகழைக் குறைபாடில்லாதபடி போற்றுவீராக
திருமுகம்-கடிதம்
மாசுஅற்ற-குற்றம்அற்ற
கொள்கை-கருத்து.
மூதூர்-பழையஊர்
சிறப்பு-மேன்மை.
பொதியத்தென்றல்-பொதியமலையிலிருந்து வருந் தென்றற் காற்று

பக்கம் 44.

அணை-படுக்கை.
அட்டில்-சமயலறை.
திருமலி-செல்வமிக்க
நனிசேய்த்து அன்று-மிகவுந்தூரமானது அன்று
(ஓதை, ஆர்ப்பு, சும்மை, கலிப்பு என்பன ஒலி என்னும் ஒரு பொருள் குறித்துநின்ற பலசொற்கள்.)
புரவி-குதிரை
மள்ளர்கள்-உழவர்கள்
மருதப்பறை-மருதநிலத்தில்அடிக்கப்படும் பறை
உருத்த-சினந்தன

பக்கம் 45.

நறிய-வாசனையையுடைய
புனல்-நீர்
மரப்புணை—மரத்தினாற் செய்யப்பட்ட தெப்பம்
ஆம்பல்-அல்லி
கமலம்-தாமரை
காலுற நடுங்கின-அடிவரையிலும் நடுங்கின
அரற்றுதல்-அழுதல்

பக்கம் 46.

பொழில்கள்-சோலைகள்
பண்ணைகள்-வயல்கள்
நியமம் } கோயில்
தளி }
துயர்உழந்தாய்-துயரால் வருந்தினாய்

பக்கம் 47.

அடிப்பு-பறைபடிக்குங் குறுங்கழி
வாய்ப்பறை-வாயாகிய பறை
அறைந்து-அடித்து
விழைவு-ஆசை
சார்பாகப்பற்றிய — துணையாகக் கொண்ட
நான்முகனைப்பயந்த-நான்குமுகங்களையுடைய பிரம்மதேவரை அளித்த
சோர்துயில்-தன்னைமறந்ததூக்கம்
நீத்து-விட்டு
ஆசுஅறு-குற்றமற்ற
அருந்ததி-அருந்ததியை ஒத்தவள்

பக்கம் 48.

சாவகர்—சமணர்களில் இல்லறத்தார்
சாவகநோன்பு-(சாவகர்கள் நோன்பு) சாவகர்களது நோன்பு (இவர்களுடைய நோன்பாவது இரவில் உண்ணாமை.)
சுருங்கைவீதி—சுருங்கையையுடைய தெரு
சுருங்கை-மறைந்துசெல்லும் வழி
பிடிகள்-பெண்யானைகள்
அருங்கலச்செப்பு-அரியஆபரணங்களைவைத்துள்ள செப்புப்பெட்டி
கொல்லாப்பண்டி—ஒருவகை வண்டி
அங்காடிவீதி-கடைத்தெரு

பக்கம் 49.

ஒருசார்-ஒருபக்கம்
நுண்ணிய-நுட்பமான
கொற்றம்-வெற்றி

பக்கம் 50.

வியப்பு எய்தி — ஆச்சரியம் அடைந்து
இத்திருமகளுடன் — திருமகளைப் போன்ற இவளுடன்
அருமந்த-அருமருந்தன்ன (மரூஉ)
வாலாமை—தூய்மையின்மை (தீட்டு)
மகவு-குழந்தை
கலம்-கப்பல்
விஞ்சை-வித்தை

பக்கம் 51.

ஏற்பார் — யாசிப்பவர் (வினையாலணையும் பெயர்.)
ஞானவரம்பு—ஞானத்திற்கு ஒரு எல்லை
மூப்பால்-கிழத்தன்மையினால்
தண்டினை-கொம்பை
அதன்கோட்டில்—அந்த யானையினது தந்தத்தில்
பற்றுக்கோடு-பற்றுக்கொம்பு
விசையன்-ஒரு வித்தியாதரன்
நகுலன்-கீரிப்பிள்ளை
குருதி-இரத்தம்
கொழுநன்-நாயகன்

பக்கம் 52.

ஏற்றதன்று-தக்கதன்று

கருமம்-அப்பார்ப்பனி கிரியைக் கொன்ற பாவத்தினது

கழி-கழிவைச்செய்கின்ற (பாவத்தினது கழிவைச்செய்தலாவது அவள் கணவனை அவளுடன் கூடச்செய்தல்.)

பலன்கொள்மின் - பயனைக்கொள்ளுங்கள் (அப்பார்ப்பான்வரும்படி தானம்பண்ணுதற்குரிய பொருளைத்தந்து அதனாலாகும்புண்ணியம் பெறுக.)

பொய்ச்சான்று-பொய்ச்சாக்ஷி

போந்து-வந்து

பல்லாண்டு-பலவருடங்கள்

பக்கம் 53.

பொலி-விளங்குகின்ற

மலர்க்கூந்தலாள்-மலரை அணிந்த கூந்தலையுடையவள் (கண்ணகி)

ஆய் இழை-ஆய்ந்து செய்த அணிகளையுடையவள் (கண்ணகி)

பற்று அற்றோர்-ஆசையற்றவர்

பேறு — செல்வம் (இங்கு அது வீடாகிய செல்வத்தை யுணர்த்தியது.)

போதி அறவோன் - அரசமரத்தினடியில் எழுந்தருளிய அறவோன்

அறவோன்—அறநூலை அருளியவன் (புத்தன்.)

முந்தைநாள்-முன்நாள்

நான்காம் யாமம்-நான்காம் ஜாமம்

வைகறை யாமம்-வைகறைப்பொழுதாகிய யாமம் (நான்காம் ஜாமம்.)

பக்கம் 54.

ஆனினம்—பசுக்களினது கூட்டம்

ஔவியம்-பொறாமை

மாதரசி - பெண்களுக்கு அரசி (கற்பு முதலிய குணங்களாற் பெண்களுக்குள் சிறந்தவள் என்பது கருத்து.)

தூய-பரிசுத்தத்தினையுடைய (குறிப்புப்பெயரெச்சம்.)

ஆயமகளிர் — தோழிப்பெண்கள் (ஆயமாகிய மகளிர். இருபெயரொட்டு.)

செவிலித்தாய்-வளர்த்த தாய்; நற்றாய் செவிலித்தாய் கைத்தாய் எனத்தாய்மார் மூவர். அவர்களுள் நற்றாய் ஈன்றதாய், செவிலித்தாய் நற்றாய்க்குத் தோழியாய் எல்லாவகையாலு நற்றாயை யொப்பக் குழந்தையைப் பேணிவளர்ப்பவள்; கைத்தாய், குழந்தையைக் கையில் ஏந்திப் பாராட்டுகின்றவள்,(செவிலியாகிய தாய். இருபெயரொட்டு)

சீறடி—(சிறுமை + அடி) சிறிய பாதம். (பண்புத் தொகை).

புலரும்படி-உலரும்படி (கற்புக்கடம்) என்னும் பாட்டு

கற்புக்கடம் பூண்ட — கற்பாகிய கடமையை மேற்கொண்ட (கற்பைத் தன் கடமையாக மேற்கொண்ட என்றலுமாம்.)

இத்தெய்வம் அல்லது—இத்தெய்வத்தையன்றி,

பொற்பு உடைத் தெய்வம்-விளக்கத்தினை உடைய வேறு தெய்வத்தை,

யாங்கண்டிலம் — (நாம்பார்த்திலோம்.)

பத்தினிப் பெண்டிர் இருந்தநாடு-கற்புடைய மாதர்கள் உள்ள நாட்டின்கண்.

வானம்பொய்யாத-மேகம் வேண்டுங் காலத்துப் பெய்தலில்லாமல் பொய்த்துப்போகாது;

வளம் பிழைப்பு அறியாது-செல்வம் தவறிக்குறைபடுதலை அறியாது;

நீள்நிலவேந்தன் கொற்றம்-பெரிய பூமியை ஆளும் அரசனது வெற்றி

சிதையாது-கெடாது;

பக்கம் 55.

எனும்—என்று பெரியோர்களாற் சொல்லப்படும்.

அத்தகு நல்உரை-அந்தத் தகுதியாகிய நல்ல சொற்களை

நீ அறியாயோ-நீ அறிந்திலையோ?

ஆதித்தன் - சூரியன்.

சாரணர்-சமண முனிவர்

தார்-மாலை

பூண்-ஆபரணம்

உண்டி-உணவு

பக்கம் 56.

இ அவனி-இப்பூமி

அரும்பெறல்-(பெறல் அரும்) பெறுதற்கரிய(இலக்கணப் போலி)

நங்கை — பெண் (பெண்களிற் சிறந்தவளை நங்கை எனவும் ஆண்களிற் சிறந்தவனை நம்பி எனவுங் கூறுவர்.)

நீட்டித்து-காலந்தாழ்த்து

பக்கம் 57.

உவகைபூத்து-சந்தோஷம் அடைந்து.

போற்றுவேன்-காப்பேன்.

கவலாது—கலக்கம் அடையாமல்

நாத்தூண் — தமயனுடன் பிறந்தாள் (நநாந்தா என்னும் வடமொழியின் திரிபு, இது நநாந்த்ரு என்பதினின்றுமுண்டானது. இப்பொழுது இது நாத்தனியார் என்று தமிழில் உலக வழக்கில் வழங்குகின்றது.)

பக்கம் 58.

கலங்கள்-பாத்திரங்கள்

சேப்பவும்-சிவக்கவும்

மதியிடை-சந்திரனிடத்தில்

மண்டலமாக-வட்டமாக

தாறு-குலை

வாய்பூசல்-நீரால் வாய் அலம்பல்

பக்கம் 59.

சாயா—ஒருவகை மரம் (அதன் பூ நீலநிறமாயிருக்கும்.)

அருநெறி-(செல்லுதற்கு)அருமையாகிய வழி

வெவ்விய சுரத்து— வெப்பத்தினையுடைய காட்டினது

எத்தகைய-எவ்வித

இடும்பை-துன்பம்

வெற்றுரையாளர் — பயனற்ற பேச்சுகளைப் பேசுகின்றவர்கள்

பரத்தையர்-வேசையர்

இருமுதுகுரவர்-தாய்தந்தையர்

பக்கம் 60.

போற்ரு ஒழுக்கம் -கொள்ளத்தகாத நடக்கை.

வார்ந்தன-ஒழுகின

ஏவல் மகளிர் — வேலைசெய்யும் பெண்கள்

ஆயத்தார்-தோழியர்

நாணம்-வெட்கம்

மடம்-அறிந்தடங்கல்

பக்கம் 61.

புனைபூங்கோதாய் - அலங்கரிக்கப்பட்ட அழகிய கூந்தலையுடையவளே! (அலங்காரமாகக்கட்டப்பட்டமாலையைப்போன்றவளே என்றலுமாம்.)

நாணின்பாவாய்—நாணத்தையுடையபாவை போன்றவளே

நீள்நில விளக்கே—பெரியவுலகத்திநுக்கொரு விளக்கம் போன்றவளே.

பொற்பு-அழகு

கோவலர்-இடையர்

இமில்ஏறு-ஏரிஎன்னும் உறுப்பினையுடைய எருது. ஏரி-முசுப்பு. இதற்கு முரிப்பு, திமில்என்றும் பெயர்கள் உண்டு

தீநிமித்தம்-கெட்ட சகுனம்

கலன்கள்-ஆபரணங்கள்

பக்கம் 62.

பொதிந்த-மறைத்த (மறைத்துக் கட்டிய)

கேவணம்-மணியழுத்துங்குழி

பெருந்தகையீர்—பெருந்தன்மையையுடையவரே

புன்குடிலுக்கு - அற்பமாகியசிறிய வீட்டினுக்கு

புறநாட்டான்-வேற்று நாட்டான் (அந்நிய நாட்டினன்-)

ஊடல் உற்று-பிணக்குற்று

பக்கம் 63.

கடிமனை— காவலையுடைய மனை; அரண்மனை

சவைக்கோல்-சுவரிலிருந்து கல் முதலியவற்றைப் பறிக்குங்கோல் (கொடிற்றுக்கோல் எனவும் படும்)

இலக்கணம்-இலக்ஷணம்

பக்கம் 64.

நிமித்தம்-சகுனம்
கருவி-ஆயுதங்கள்
களவுநூல்-திருடுஞ்செயலைக் கற்பிக்கின்ற நூல்.
மேலோர்-பெரியோர்கள்.

பக்கம் 65.

இளவல்-இளையவன்
துயில்கையில்-தூங்குகையில்
ஆரம்-மாலை
இளங்கோ-இளவரசன்
செறித்தான்-புகுத்தினான்
சினம்-கோபம்
ஆண்டு-அங்கு
கருந்தொழில்-சிறந்த தொழில்
இளைஞன்-இளையவன்
ஊர் எல்லாம்-ஊரில்உள்ளவர்கள் யாவரும் (இடவாகுபெயர்)
ஊன்-இறைச்சி (மாமிசம்)
நெகிழவிடின்-சோரவிட்டால்
காவலர்-காவலாளிகள்
களிமகன்-செருக்குடையவன்

பக்கம் 67.

நன்னெறியாளன்-நன்மையாகிய வழியை ஆளுதலுடையவன் (நல்வழியில் நடப்பவன் என்பது கருத்து)
நற்றவக்கொழுந்து-நன்மையாகிய தவத்தினது கொழுந்துபோன்றவள்
வல்வினை-(முன்செய்த) கொடிய வினை
மூண்டதனால் — வந்து கிட்டியதனால்
அரமனை—சிறந்தமனை (மன்னன் மனை)
தயிர்த்தாழி-தயிரை வைத்தகுடம்
உகுகின்றன-சிந்துகின்றன
ஆட்டுமறிகள்-ஆட்டுக்குட்டிகள்
அரற்றுகின்றன-அழுகின்றன
பாலசரிதம்-குழவிப் பருவத்தின் சரித்திரம்
வேல் நெடுங் கண்ணி—வேல்போலும்நீண்ட கண்களை உடையாள்
பிணி-நோய்
ஏறுகள்-எருதுகள்
வலி-வன்மை

பக்கம் 68.

நங்கை—பெண்களுட் சிறந்தவள் (ஆண்களுட்சிறந்தவனை நம்பி என்பர்)
வியந்தனள்—புகழ்ந்தாள் (கன்றுகுணிலா - என்னுஞ் செய்யுள்.)
குணில் ஆ-குறுந்தடியாகக் கொண்டு
கனி-(விளாமரத்தின்) கனியை
ஆன் உள்-பசுநிரைக்குள்
வருமேல்—வருவானாயின்

அம்-அழகிய
கொன்றை-ஒருவகைக்கருவி
தீங்குழல் – கொன்றையி னலாகிய குழலினது இனிய பண்ணை
கேளாமோ—கேட்கமாட்டோமா (கேட்போம்)
(பாம்புகயிறு-என்னுஞ்செய்யுள்)
மாயவன்—வியப்பான குணஞ்செயல்களை யுடையவன் (பிறரால் அறியமுடியாத குணஞ் செயல்களை யுடையவன் என்றலுமாம்)
ஆம்பல்-ஒருவகைக் கருவி
அம் தீங்குழல்—(பண்ணை இசைக்கும்)அழகிய குழலினது இனிய இசையை

பக்கம் 69.

(கொல்லையம்சாரல்-என்னுஞ் செய்யுள்)

அம்கொல்லைச் சாரல்-நமது அழகிய கொல்லையைச் சார்ந்த இடத்தில்
குருந்து ஒசித்த—(வஞ்சனையாக வந்துநின்ற) குருந்த மரத்தை முறித்த
எல்லை-இன்றுபகலே
முல்லை-ஒருவகைக் கருவி
எருமன்றம்-பசுக்கொட்டில்
(அறுபொருள்-என்னுஞ்செய்யுள்)
அறுபொருள்-ஐயம் அற்ற பொருள்
அமரர் கணம் -தேவர்களின் கூட்டம் [டர்)
உறுபசி-மிக்கபசி(உரிச்சொற்றொ
ஒன்றுஇன்றி-சிறிதும் இல்லாமல்
உண்டவாய்—(அங்ஙனம் உலகங்களை) உண்டவாயானது
களவினல்—திருடுதலாகிய செயலால்
உறிவெண்ணெய்—உறியிலிருந்த வெண்ணெயை
உண்டவாய்-உண்ட வாய்தான்
வண்துழாய்மாலை - வளப்பமாகிய துளசியாலாகியமாலையை(யணிந்த எம்பெருமானே)
மாயமோ-இஃதொரு மாயச் செயலோ
மருட்கைத்து—மருட்சியைத் தருகின்றது
முன்னிலைப் பரவல் —முன்னிலையாக வைத்து வணங்குதல்
மடம் தாழும்—வஞ்சனை பொருந்திய
நெஞ்சத்து-மனத்தினையுடைய
கஞ்சனர்-கம்சன் (ஆர்இழித்தலில் வந்தது)
ஆரணம் தொடர்ந்து முழங்க—வேதங்கள் பின்தொடர்ந்து ஒலிக்க
வெற்றிமுரசம்—வெற்றிக்கு அறிகுறியாக அடிக்கும் வாத்தியம்

பக்கம் 70.

துயர்உற்றுஇரங்கல்-துன்பமுற்று வருந்தல்
ஆய்மகள்-இடைப்பெண்
விம்மிதம்உற்று-அதிசயமடைந்து
என் அன்பர் — என் அன்புடைய நாயகர்
இங்ஙனம் ஆக-இப்படி இருக்க

வாட்கை-வாளை யேந்திய கையை யுடைய
காவலர்-காவலாட்கள்
ஆற்ருமை-மனம் சகியாமை
பொருமி-துயர் பெருகி
மயங்கி-மனங்கலங்கி

பக்கம் 71.

கைம்மை நோன்பு-கணவனை இழந்தார் (விதவைகள்) கொள்ளும் விரதம்
படிந்து-மூழ்கி
உற்பாதம்-துர்ச்சகுனம்
சாந்தியாக-பரிசாரமாக
செங்கதிர்ச்செல்வன்-சிவந்த கிரணங்களையுடைய சூரியன்
கள்வன்-திருடன்
அசரீரி-சரீரமில்லாதது (ஆகாய வாணி)
எரிஉண்ணும்-தீஎரிக்கும்

பக்கம் 72.

எய்தினேன்-அடைந்தேன்
உறுதியாகும்-நன்மையாகும்
அல்லல்-துன்பம்
மூதூர்-(முதுமை + ஊர்)பழமையாகிய ஊர்
செங்கோல் கோடி — முறைமையில் தவறி
காரிகை-பெண்
மதிக்குலத்தோன்றல்-சந்திர வமிசத்தில் தோன்றியவன் (பாண்டியன்)
மதிக்குடை — சந்திரனைப்போல் வட்டமான வெண் கொற்றக் குடை
வெம்மையைச் செய்தது—கொடுமையைச் செய்தமை
இழைத்த தவற்றினல் — செய்த பிழையால்

பக்கம் 73.

(என்னுறு-என்னுஞ்செய்யுள்)
பொன்உறும் — பொன்னைப்போலும்
நறும்மேனி-நல்ல உடல்
பொடிஆடி-புழுதிபடிந்து
(யாருமில் என்னுஞ் செய்யுள்)
மருள்மாலை—மயக்கத்தைச் செய்யும் இம்மாலைக்காலத்தில்
இடர்உறு-துன்பமுற்ற
தமியேன் முன்-தனிமையளாகிய என் முன்
தார்மலி-மாலைகள்மிக்க
மணிமார்பம்-அழகியமார்பு (மார்பம், அம்-சாரியை)
தரைமூழ்கி-தரையிற்படிந்து
(கண்பொழி-என்னுஞ் செய்யுள்)
புனல்சோரும்-நீர்ஒழுகும்
கடுவினை — முன்செய்த கொடிய வினை
புண்பொழி- (வெட்டுண்டதனுலாகிய) புண் சொரியும்
குருதியிர்ஆய்-இரத்தத்தை உடையவராகி
இப்பெற்றி-இத்தன்மை

சான்றோர்-கல்வி கேள்வி ஒழுக்க முதலியவற்றால் சிறந்தவர்

பக்கம் 74.

பொன்தொடீ — பொன்னாலாகிய வளையை அணிந்த மாதே!

தீக்கனா-தீமையாகிய கனா

ஆசாரவாசல்-வெளிவாசல்

ஆராய்ச்சிமணி—குடிகளின் துன்பங்களை அறிதற்குரிய மணி (குடிகள் தமக்குநேருங் குறையை வேந்தனுக்கறிவிக்கவிரும்பின், அம்மணியின் அருகில் வந்து அதனை அடிப்பார்கள். உடனே மன்னன் அங்குவந்து அவர்கள் முறையைக் கேட்பான்)

குரல்-ஒலி

உடுக்கள்-நக்ஷத்திரங்கள்

அணி இழையார்—அழகிய ஆபரணங்களை அணிந்த பெண்கள்

ஏவல்மகளிர்-பணிப்பெண்கள்

கோப்பெருந்தேவி—வேந்தனது பட்டத்து மனைவி

ஆயமகளிர் — தோழியர்களாகிய பெண்கள்

பக்கம் 75.

இறைமுறை பிழைத்தோன்-மன்னர்க்குரிய நீதியினின்றுந் தவறினவன்

கொற்றவை-துர்க்கை

மடக்கொடியே — இளமையாகிய கொடிபோன்றவளே

தேராமன்ன!-ஆராய்ந்துஅறியாத மன்னனே!

மன்னர்பிரான்-வேந்தர் வேந்தன்

திருமகன்-செல்வப்புதல்வன் (அழகிய புதல்வன் என்றலுமாம்)

ஈட்ட-சம்பாதிக்க

பக்கம் 76.

பெண் அணங்கே-பெண்களுக்குள் தெய்வம்போன்றவளே (தெய்வப்பெண் போன்றவளே என்றலுமாம்)

கொற்றவர்முறை — மன்னர்களுடைய நீதி

நன்காய்தலில்லாத-நன்றாய்ஆராய்தல் இல்லாத

தேமொழியாள்—தேன் போன்ற மொழியை யுடையவள்

அரி ஆசனம்-சிங்காதனம்

அம்முறை உரியவர்களாக — அவ்வுறவினுக்கு ஏற்றவர்களாக

பக்கம் 78.

மடைப்பள்ளி-சமையல் அறை

கல்நவில்-கல் என்று சொல்லப்படும்

மாற்றாள்-சக்களத்தி

மரித்தாள்-இறந்தாள்

பக்கம் 79.

அங்கிக் கடவுள்-அக்கினி தேவன்

மாபத்தினீ-சிறந்தபத்தினீ

அறவோர் — துறவறத்தை மேற்கொண்டவர்

அழல்-நெருப்பு

கணிதன்-சோதிடன்

தன்மாசனத்தர்-நியாயாதிபதிகள்